நாட்டுப்பாடல் வெளியீடு—5

கான்சாகிபு சண்டை

5977

பதிப்பாசிரியர்:
நா. வானமாமலை, எம்.ஏ., எல்.டி.



மதுரைப் பல்கலைக்கழகம்
மதுரை-2

நாட்டுப்பாடல் வெளியீடு—5

கான்சாகிபு சண்டை

பதிப்பாசிரியர்:
நா. வானமாமலை, எம்.ஏ.,எல்.டி.





மதுரைப் பல்கலைக்கழகம்
மதுரை-2

முதல் பதிப்பு- மார்ச், 1972

நாட்டுப்பாடல் வெளியீடு—5

காான்சாகிபு சண்டை

விலை: ரூ. 3—00

அச்சிட்டோர்:
நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ்,
6/30, மவுண்ட்ரோடு, சென்னை-2.

கான்சாகிபு சண்டை

முன்னுரை

நாட்டுக் கதைப் பாடல்கள் பல தமிழ் நாட்டில் வழங்குகின்றன. இவை தமிழ் நாட்டின் தென்பகுதியில் வில்லுப்பாட்டு, கணியான் பாட்டு, கூத்து முதலிய கலையுருவங்களில் வழங்கி வருகின்றன. மதுரையில் லாவணி, ஒயிலாட்டாம், அம்மானை முதலிய உருவங்களில் வழங்கிவருகின்றன. கோவை, சேலம் பகுதிகளில் குறவன் குறத்திப் பாட்டாக இவை வழங்குகின்றன. இக்கதைப்பாடல்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். (1) தெய்வப் புனைகதைகள் (2) புராணக் கதைகள், (3) சமூகக் கதைகள், (4) வரலாற்றுக் கதைகள்.

முதல் வகையான தெய்வப் புனைகதைகள் கிராம தேவதைகளின் பிறப்பையும், வரலாற்றையும் பற்றிக் கூறுவன. முத்தாரம்மன், நீலியம்மன், முப்பிடாதி, சுடலைமாடன், கருப்பணசாமி முதலிய தெய்வங்களின் கதைகளை இவை கூறும். இக் கதைகளை இத்தெய்வங்களின் வழிபாட்டு நாட்களான கொடையின்போது பாடுவார்கள்.

இரண்டாவது வகைக் கதைகள் இந்துப் புராணங்களோடு தொடர்புடையவை. நாட்டுமக்கள் கற்பனை, புராணக் கதைகளை உருத்தெரியாமல் மாற்றி விடுகின்றன. மூலக்கதைகளிலுள்ள கதைத் தலைவர்களில் பெயர்களை மட்டும் மாற்றாமல் கதை நிகழ்ச்சிகள் முழுவதையும் கதைப் பாடகர்கள் மாற்றி அமைத்து விடுகிறார்கள். இத்தகைய கதைப் பாடல்களுக்கு உதாரணங்கள்: ஏணிஏற்றம், பொன்னுருவி மசக்கை. அல்லிஅரசாணிமாலை முதலியன. இவையாவும் பாரதக் கதையின் கதைத் தலைவர் தலைவியரை, நாட்டுக் கதைப்பாடல் பாத்திரங்களாகக் கொண்டவை. ஆனால் மூலக்கதை நிகழ்ச்சிகள் எதுவும் கதைப்பாடல்களில் இல்லை இவை யாவும் அக் கதா பாத்திரங்களைப்பற்றி நாட்டு மக்கள் கற்பனையில் எழுந்த கதைகளே.

சமூகக் கதைப்பாடல்கள், சாதிக் கலப்பு மணம், பெண்களுக்குச் சொத்துரிமை, சாதி அடக்குமுறை, பொருந்தாமணம், சாதி வரலாறுகள் முதலியவற்றைக் கதைப் பொருளாகக் கொண்டவை. முத்துப்பட்டன் கதை, சின்னத்தம்பி கதை, நல்லதங்காள் கதை, பிச்சைக்காரன் கதை முதலியவை இப்பிரிவிற்கு உதாரணங்கள்.

வரலாற்றுக் கதைப் பாடல்கள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கருப் பொருளாகக் கொண்டவை. ஏதாவது ஒரு போரின் காரணங்கள், நிகழ்ச்சிகள் விளைவுகளைப் பற்றி இக்கதைப் பாடல்களில் பலகூறும். ஒரு கதைத் தலைவனின் கதை பல வரலாற்று நிகழ்ச்சிகளோடு தொடர்பு படுத்தப்பட்டு கூறப்படும். பொதுவாக இவை வீரத், தைப் புகழ்ந்து கூறுவனவாக இருக்கும். வீரம் தவிர வேறு குணங் களைப்பற்றியும் இவை புகழ்ந்து கூறலாம், ஒரு தலைவனின் உயர்வைப் புகழ்ந்து பேசுவதே இவ்வகையான கதை பாடல்களின் நோக்கமாக இருக்கும். தமிழ்க்கதைப் பாடல்களிலேயே இவைதான் அபூர்வ மாக இருக்கின்றன. தற்காலத்தில் வழங்கிவரும் வரலாற்றுக் கதைப் பாடல்கள் சிலவற்றை நான் படித்திருக்கிறேன். அவற்றுள் சில அச்சாகியுள்ளன. சில இன்னும் கையெழுந்துப் பிரதிகளாகவே உள்ளன. வரலாற்றுக் கதைப் பாடல்கள் சிலவற்றின் பெயர்களை இங்கு குறிப்பிடுவோம்: ஐவர் ராஜாக்கள் கதை, கன்னடியன்படைப் போர், மூன்றுலகு கொண்ட அம்மன் கதை, வெட்டும் பெருமாள் கதை, ராமப்பய்யன் அம்மானை, இரவிக் குட்டிப்பிள்ளை போர், சிவ கங்கை அம்மானை, சிவகங்கைக் கும்மி, பூலுத்தேவன் சிந்து, கட்ட பொம்மன் கதைப்பாடல் முதலியன.

சில வரலாற்றுக் கதைப்பாடல்கள் அச்சிடப் பட்டுள்ளன, அவை எவை என்பதைக் கூறுவோம். ராமப்பய்யன் அம்மானை. இரு வெளியீடுகளாக அச்சிடப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலை கழகம் ஒரு வெளியீட்டையும், சரஸ்வதி மகாலிலிருந்து கிடைத்த பிரதியை சென்னை அரசினர் கையெழுத்துப் பிரதிகள் வெளியீட்டுக் கழகம் ஒரு வெளியீட்டையும் கொணர்ந்துள்ளன. முதல் வெளி யீட்டிற்கு வையாபுரிப்பிள்ளை பதிப்பாசிரியர். இப் பதிப்பின் பிற்சேர்க்கையாக இரவிக்குட்டிப் பிள்ளை போர் என்ற கதைப் பாடல் வெளியாகியிருக்கிறது. சென்னை அரசினர் கைய்யெழுத்துப் பிரதிகள் வெளியீட்டுக் கழகம், சிவகங்கை அம்மானை, சிவகங்கைக் கும்மி என்ற மருது சகோதரர்களைப் பற்றிய கதைப்பாடல்களை வெளியிட்டிருக்கிறது. கட்டபொம்மன் கதைப்பாடல், 1962-ல் என்னுல் பதிப்பிக்கப்பட்டது. இவைதவிர, முன்னர் குறிக்கப்பட்ட கதைப் பாடல்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. தேசிங்குராசன் கதை, கான்சாகிபு சண்டை போன்றவை, பல பிழைகளோடு முன்னுரை, குறிப்புரை எதுவுமில்லாமல் பெரிய எழுத்தில் அச்சிடப் பட்டிருக்கின்றன. வரலாற்றுக் கதைப்பாடல் களில் நான்கை மதுரைப் பல்கலைக் கழகம் வெளியிடுகிறது. அவையாவன: கட்டபொம்மு கதைப்பாடல், கட்டபொம்மு கூத்துப்பாடல், ஐவர் ராஜாக்கள் கதை, கான்சாகிபு சண்டை ஆகியவை. இவை சிதைந்துபோன பழைய கையெழுத்துப் பிரதி களையும், பழைய அச்சுப் பிரதிகளையும் ஒப்பிட்டு மூலத்தை

5977.

நிர்ணயித்து, எழுதப்பட்டன. சில வரலாற்றுக் கதைப் பாடல்களின் பெயர் மட்டும் தெரிகிறது. ஆனால் அவை கிடைப்பதில்லை. உதாரணமாக பூலுத்தேவன் சிந்து என்ற பெயருள்ள நாட்டுப் பாடல் இருப்பதாகப் பல நண்பர் சொன்னார்கள். தேடிப் பார்த்தால் அகப்படவில்லை.

இக்கதைப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி, தமிழக வரலாற்று ஆராய்ச்சிக்கும், இலக்கிய ஆய்வுகளுக்கும், சமுதாய மொழி இயல் ஆராய்ச்சிகளுக்கும் அவசியமாகும். இக்கதைப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்குவதற்கு இவை அச்சிட்டு வெளியிடப் படவேண்டும்.

தெய்வங்களைப் பற்றிய பாடல்கள் இன்னும் மக்கள் நினைவிலிருந்து அழியாமலிருப்பதற்குக் காரணம், அத்தெய்வங்களின் வழிப்பாட்டு நாட்களில் அவை பாடப்படுவதே. இன்றும் கொடை நாட்களில் நெல்லை மாவட்டத்தில் அம்மன் கதைகளும் மாடன் கதைகளும் வில்லுப்பாட்டுக்களாகப் பாடப்படுகின்றன. ஆனால் வரலாற்று வீரர்கள் தெய்வங்களாக வணங்கப்படுவதில்லை. கட்ட பொம்மனுக்கோ, தேசிங்கு ராஜனுக்கோ கோவில்கள் இல்லை. கொடை நடத்துவதும் இல்லை. மிகப் பழங்காலத்து வீரர்களுக்குக் கோவில்கள் உள்ளன. ஆனால் அது அவர்களுடைய பெயரால் வழங்காமல் வேறு அம்மன் பெயரால் வழங்கும். வெள்ளையரை எதிர்த்துப் போராடிய வீரர்களின் கதை, பிற்கால விடுதலைப் போராட்ட உணர்வை வளர்க்கும் தூண்டுகோலாக நாட்டு நினைவில் (folk memory) இன்னும் வாழ்கின்றன. அந்தப் போராட்ட நினைவுகள் இந்தப் பரம்பரையில் மறந்து வருகிறது. இக்கதைகளும் சிறிது காலத்தில் மறந்து போகலாம். ஆகவே இப்பொழுதே அவற்றை அச்சிட்டு நிலைநிறுத்துவது அவசியமான பணியாகும்.

கதைப்பாடல்கள் மக்கள் முன் பாடப்படுபவை. நாட்டுப் பாடகர்கள், தங்கள் முன்பிருக்கும் சபையை மகிழ்விப்பதற்காக பல அடிகளையும், கதைப்பகுதிகளையும் மாற்றிக் கூறுவார்கள். எனவே சிலபகுதிகள் மாறுதலுக்குள்ளாகும். எனவே தமிழகத்தில் பலபகுதிகளில் கதையின் நிகழ்ச்சிகளில் வேறுபாடு காணப் படலாம்.

நமக்கு கிடைத்திருக்கும் வரலாற்றுக் கதைப்பாடல்கள் கூறும் நிகழ்ச்சிகளின் காலம் 15-ம் நூற்றாண்டின் நடுவிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவு வரை ஆகும். இடையே சில பத்தாண்டுகளுக்கு இடைவெளி விழுகிறது. இக்கதைகளின் நிகழ்ச்சிக் காலத்தை மூன்று பிரிவாகக் கொள்ளலாம்.

முதற்காலம்: கன்னடிய மன்னர்களுக்கும், பாண்டிய அரசு மதுரையிலிருந்து அகன்றபின் தென் தமிழ் நாட்டில் பரவிய பாண்டியச் சிற்றரசர்களுக்கும் நடைபெற்ற போர்களின் நடை காலம்.

இரண்டாவது காலம்: மதுரை நாயக்கர்களுக்கும், இராம நாதபுரம் பாளையக்காரருக்கும் நடைபெற்ற போர்.

மூன்ருவது காலம்: பிரிட்டிஷ் ஆட்சி தமிழகத்தின் தென் பகுதியில் பரவியதை எதிர்த்து பாளையக்காரர்களது போர்கள்.

மேற் குறிப்பிட்ட மூன்று காலங்களில் 'கான்சாகிபு சண்டை' மூன்ருவது காலத்தைச் சேர்ந்தது. இக்கதைப்பாடல் கான்சாகிபு வின் வரலாற்றில் கடைசி ஏழு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளைப் பொரு ளாகக் கொண்டது. கான்சாகிபுவின் பிறப்பு, வளர்ப்பு இளமைக் காலம், தென்னுட்டுப் பாளையக்காரர்களோடு அவன் நடத்திய போர்கள், ஆகியவை பற்றிய விவரங்களை இக் கதைப்பாடல் மிக வும் சுருக்கமாக, ஆரம்ப அடிகளில் கூறுகிறது. பண்ணை யூரில் பிறந்த கான்சாகிபை மூஸாலாலி என்ற பிரெஞ்சியன் வளர்த்தான். பிரட்டன் என்னும் ஆங்கில தளபதியிடம் இவன் வேலைக்குச் சேர்ந்தான். ஆங்கிலம் கற்று ஆற்காட்டு நவாபின் படையில் சேர்ந்தான். படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று கான்சாகிபு, ஆற்காட்டு நவாபின் படையின் கமாண்டராக ஆனுன். இந்தப் பதவியைத் தமிழில் கம்மந்தான், கும்தான் என்று கதைப்பாடல் அழைக்கும். இவனை பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் சேவகத்தில் அமர்த்திக் கொண்டனர். டச்சுக்காரர்கள், பிரஞ்சுக் காரர்களுக்கு எதிராக பிரிட்டிஷார் நடத்திய சில போர்களில் இவன் பங்கு பெற்று, வெற்றி பெற்ருன். பரங்கிப் பெண்ணுன மாஷா என்பவளை மணந்து கொண்டான்.

அக் காலத்தில் தமிழகத்தின் தென்பகுதி முழுவதிலும் வரி வசூ லிக்கும் உரிமையை கிழக்கிந்தியக் கம்பெனி, நவாபிடமிருந்து குத்த கைக்குப் பெற்றிருந்தது. அதற்கு முன், பாளையக்காரர்கள்தான் நவாபிற்காக வரிவசூலித்து வந்தார்கள். அவர்கள் வசூலித்த வரியை நவாபிற்குக் கொடுப்பதில்லை. அதனேடு, ஒருவர் பாளையத் தில் மற்றெருவர் தலையிட்டு சண்டையிட்டுக் கொண்டார்கள். இவர்களனைவரையும் நவாப் ஆட்சிக்கு உட்பட்டு அடங்கி நடந்து வரிசெலுத்தச் செய்ய ஒருபடையோடு யூசுப்கான் சென்னையி லிருந்து ஆங்கிலக் கம்பெனியாரால் அனுப்பிவைக்கப்பட்டான். தென் பாளையங்களின் தலைவர்களான பூலுத்தேவனேடு பல போர் கள் நடத்தினுன். முடிவில் அவருடைய கோட்டையான நெல்கட் டாஞ்செவலை அழித்தான். அதன்பின் பூலுத்தேவன் முடிவு என்ன

வாயிற்று என்று தெரியவில்லை. கட்டபொம்மு நாயக்கரையும் அடக்கினான். இவர் ஜகவீர கட்டபொம்முவின் பாட்டன் ஆவார். பாளையக்காரர்களை ஒழுங்காக வரி செலுத்துமாறு செய்தான்.

இச் சேவைக்காக பிரிட்டிஷ் கம்பெனியார் இவனை மதுரை சுபேதாராக நியமித்தார்கள். மதுரையிலிருந்து தென் பகுதி முழுவதையும் நவாபின் பிரநிதியாக ஆண்டு, பிரிட்டிஷ் கம்பெனிக்காக வரிவசூல் செய்வது அவனது வேலை.

அவன் மதுரை சுபேதாராகி ஓர் ஆண்டிற்குப் பின் சிவகங்கைப் பாளையக்காரர் வரி செலுத்தாமல் இருப்பதைக் கண்டான். வரிப் பாக்கிக்காக திருப்புவனம் என்னும் ஊரை நவாபிற்குக் கொடுத்து விட வேண்டுமென்று ஓலையனுப்பினான். இப்பொழுது சிவகங்கை பாளையக்காரருக்கு தளவாயாக (மந்திரி) இருந்தவன் தாண்டவ ராயன். அவன் கான்சாகிபுவின் மனைவி மாஷாவிற்குப் பல பரிசுகளை அனுப்பி அவள் மூலம் கான்சாகிபுவை, சிவசங்கைப் பாளையக் காரர்மீது பகைமை கொள்ளாதிருக்கச் செய்ய முயன்றான். இம் முயற்சி பயனளிக்க வில்லை. "எப்படியும் திருப்புவனத்தை மதுரைச் சுபாவோடு சேர்த்துக் கொண்டே தீருவேன்" என்று கான்சாகிபு பிடிவாதமாயிருந்தான்.

தாண்டவராயன் சிவகங்கைப் பாளையக்காரனை முத்துவடுகனிடம் இந்த அபாயத்தைப் பற்றிக் கூறினான். தான் ஆற்காட்டுக்குச் சென்று நவாபிடம் கூறி, அவனை கான்சாகிபுவின் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்வதாகவும், தான் நாட்டிலில்லாதபோது முத்துவடுகன் காளையார் கோவிலுக்குப் போய் இருக்கவேண்டுமெனவும் சொன்னான். சிவகங்கைப்பாளையத்தோடு நேசமாயிருந்த பாளையக்காரர்களை படைதிரட்டி வைத்திருக்குமாறு செய்தியனுப்பி விட்டுத் தாண்டவராயன் ஆற்காட்டுக்குப் புறப்பட்டான். பெரிய படையோடு ஆற்காட்டுக்குச் சென்று நவாபைப் பேட்டிகாண வேண்டும் என்று செய்தியனுப்பினான். நவாபு அவனைச் சந்தித்தான். கான்சாகிப்புவைப்பற்றிய பல குற்றச் சாட்டுகளை தாண்டவராயன் நவாபிடம் கூறினான். பாளையக்காரர்களிடம் வசூலித்த பணத்தை கான்சாகிபு நவாபிற்கு அனுப்பவில்லை யென்பதும், நவாபின் ஆட்சிக்கு ஆதரவாயுள்ள பாளையங்களோடு பகைமை கொண்டு அவற்றைத் தானே கைப்பற்றிக் கொள்ள முயன்று வருகிறான் என்பதும் முக்கியமான குற்றச் சாட்டுகள். பல காரணங்களால் நவாபு கான்சாகிபு மீது அதிருப்தி கொண்டிருந்தான். பாளையங்களிலிருந்து வசூலித்த வரியை ஆறு ஆண்டுகளாக கான்சாகிபு நவாபிற்கு அனுப்பவில்லை. தனது எதிரிகளோடு கான்சாகிபு ரகசியத் தொடர்பு கொண்டிருந்தான் என்று அவனுக்குச் செய்திகள் வந்தன. 'மார்ச்சண்டு' என்ற டச்சுக்காரனது உதவி

யோடு கான்சாகிபு பீரங்கிகளை உற்பத்தி செய்வதாக நவாபின் ஒற்றர்கள் தெரிவித்திருந்தார்கள். இம்முயற்சிகளெல்லாம் தானே மதுரையின் மன்னனாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான நடவடிக் கைகளே என்று நவாபு நினைத்தான். கம்பெனியின் நிருவாகத்தி லிருந்து தம்முடைய நிருவாகத்திற்கு கான்சாகிபை மாற்றி விட வேண்டுமென்று கம்பெனியை நவாபு வேண்டிக் கொண்டான். இவ் வேண்டுகோளை கம்பெனி ஒப்புக்கொண்டது. ஆனால் கான்சாகிபு நவாபின் மேலதிகாரத்திற்குள் வர மறுத்தான். நவாபு, கான் சாகிபுவை சுபேதார் பதவியிலிருந்து நீக்கவும், மதுரை ஆட்சியைத் தானே கைப்பற்றவும், ஒரு படைக்குத் தானே தலைமை தாங்கி தெற்கு நோக்கி வந்தான். அதற்குத் துணையாகக் கம்பெனியும் ஒரு படையை அனுப்பி வைத்தது

இவ்விரண்டு படைகளுக்கும் 'பிரிட்டன்' என்ற ஆங்கிலத் தளபதி தலைமை தாங்கினான். அவர்கள் திருப்புவனத்திற்கு வந்து கான்சாகிபுவின் தாக்குதலை முறியடிக்க முயன்றார்கள். கான்சாகிபு இரவில் இப்பெரிய படையைத் தாக்கி விட்டு பகலில் ஓடிச் சென்று மறைந்து கொள்வான். இது தற்காலத்தில் கொரில்லாப் போர் என்றழைக்கப் படுவது போன்றது. திருப்புவனத்தில் தங்கியிராமல் நேராக மதுரை செல்வது என்று நவாபும் பிரிட்டனும் முடிவு செய் தனர். பல மாதங்கள் நவாபின் படையும், கம்பெனிப் படையும் மதுரைக் கோட்டையை முற்றுகையிட்டன. கோட்டைச் சுவரின் ஒரு பகுதியில் உடைப்பு ஏற்பட்டது. ஆனால் உடனே அது சீராக்கப் பட்டது. ஆறுமாதங்கள் முற்றுகை நீடித்தது. போரால் சாதிக்க முடியாததை, பொன்னால் சாதிக்க தாண்டவராயன் முடிவு செய்து மதுரைத் தளவாய் சீனிவாச ராவுக்கும், மார்ச்சண்டுக்கும் லஞ்சம் கொடுத்து தந்திரமாக கான்சாகிபுவைப் பிடித்துக் கொண்டு வரச் செய்தான். கோட்டைக்கு வெளியில் கொண்டு வந்து அவனைத் தூக்கில் இட்டார்கள்.

கான்சாகிபு மதுரைச் சுபேதாரான பிறகு ஏழு வருஷங்கள் மதுரையில் ஆட்சி செலுத்தினான். அதன் பிறகு நவாபோடும் கம்பெனியோடும் பகைமை கொண்டு போர் நடத்தி வஞ்சகமாகச் சிறைப்படுத்தப்பட்டுத் தூக்கிலிடப் பட்டான். இந்தக் கால நிகழ்ச்சிகளைத்தான் கதைப் பாடல் கூறுகிறது.

ஆனால் மதுரைச் சுபேதாராவதற்குமுன் தென் பகுதிச் சீமைகளில் அவன் நடத்திய போர்களின் முடிவால் தென் பகுதிச் சீமையின் வரலாற்றில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அவனுடைய வரலாற்றுப் பாத்திரத்தை அறிந்து கொள்ள அந் நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அவன் பிரிட்டிஷ் படைப் பிரிவின் தலைமையை ஏற்ற காலத்தில் பிரெஞ்சுப் படைகளை முறியடித்து பரங்கிப் பேட்டையிலிருந்து அவர்களை விரட்டினான். இந்த வெற்றியின் காரணமாக அவனைக் கம்பெனியார், வரி வசூலிப்பது மிகக் கடினமாக இருந்த தென் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். அச்சமயம் தென் பகுதியில் ஆற்காட்டு நவாபு பதவிக்காக இரு போட்டியாளர்களிடையே போர் நடந்து வந்தது. அவர்களுள் ஒருவன் சந்தாசாகிபு. மற்றொருவன் முகம்மதலி. திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு முகம்மதலி தன்னை ஆற்காடு நவாபென்று பிரகடனம் செய்து கொண்டான். பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் இப் போட்டியில் கலந்து கொண்டு தங்களது ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிபை ஆதரித்தார்கள். ஆங்கிலேயர்கள் முகமதலியை ஆதரித்தனர்.

திருநெல்வேலிச் சீமையில் தனது அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக முகம்மதலி, அப்துல் ரகீம் என்ற படைத் தலைவனது தலைமையில் இரண்டாயிரம் வீரர்களை அனுப்பினான். அவர்களுக்கு உதவியாக இன்னிஸ் என்ற ஆங்கிலக் காப்டனுடைய தலைமையில் இரண்டாயிரம் வீரர்களை கம்பெனியார் அனுப்பி வைத்தனர். சந்தாசாகிபுவின் பிரதிநிதியென்று தன்னை அழைத்துக் கொண்ட ஆலம்கான் என்பவன் திருச்சிக் கோட்டையைக் கைப்பற்றி வைத்துக் கொண்டிருந்தான். காப்டன் கோப் என்ற ஆங்கிலத் தளபதி முகமதலிக்காக மதுரையைக் கைப்பற்ற முயன்று தோல்வியடைந்தான். பல முறைகள் தோல்வியடைந்த பின்னர், கம்பெனியார் 1755ல் கர்னல் ஹீரான் என்ற தளபதியும் நவாபின் அண்ணனான மாபூஸ்கானும் பெரும் படையோடு மதுரைக்கு வந்தனர். மதுரை எதிர்ப்பில்லாமல் அவர்கள் கைவசமாயிற்று. ராமநாதபுரம் ராஜா, இரண்டு துறைமுகங்களைக் கம்பெனியாருக்கு அளித்துச் சரணடைந்தார். ஹீரானும், மாபூஸ்கானும் ராமநாதபுரம் சீமையை விட்டு திருநெல்வேலிச் சீமைக்குச் சென்றனர். போகிற வழியில் பாளையக்காரர்கள் யாரும் எதிர்க்கவில்லை. திருநெல்வேலிச் சீமையிலிருந்த குத்தகைதாரர்கள் பணிந்து வரிப்பாக்கிகளைக் கொடுத்தவிட ஒப்புக்கொண்டனர். ஆனால் பல பாளையக்காரர்கள் நவாபின் சார்பில் கேட்கப்பட்ட கப்பத் தொகையைச் செலுத்த மறுத்தார்கள். இவர்களுள் முக்கியமானவன் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரன் கட்டபொம்மு நாயக்கன் (இவன் புகழ்பெற்ற கட்டபொம்முவின் பாட்டன்). பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை இடித்தெறியும் நோக்கத்தோடு ஒரு படை புறப்பட்டது. ஆனால் திருச்சிக்குத் திரும்பும்படி அதற்கு உத்திரவு கிடைத்தது. போகும் வழியில் கர்னல் ஹீரான் நெல்கட்டாஞ் செவலுக்குச் சென்று அக் கோட்டையை முற்றுகையிட்டான்.

நெல்லைச் சீமையின் மேற்குப்பகுதிப் பாளையங்களுக்கு நெல்கட்டாஞ்செவல் பாளையக்காரன் பூலுத்தேவன் தலைவனாயிருந்தான்.

கர்னல் ஹீரான் நெல்கட்டாஞ் செவல் கோட்டையைப் பிடிக்க முடியாமல் படைகளைப் பின் வாங்கிச் சென்னைக்கு அனுப்பினான். அவன் நெல்லைச் சீமையில் வசூலித்த வரிப்பணம் இப்போர்களுக்காகச் செலவழிந்து போயிற்று. கர்னல் ஹீரான் குத்தகைதாரர்களிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு குறைந்தகுத் தகைக்கு திருநெல்வேலிச் சீமை வரிவசூல் முழுவதையும் விடுத்தான். சென்னைக்குத் திரும்பியதும் அவன் மீதிருந்த குற்றச் சாட்டுகள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன. லஞ்சம் வாங்கிய குற்றச் சாட்டிற்காக ஹீரான் பதவியிலிருந்து விலக்கப் பட்டான். ஹீரான் பதவியிழந்ததிலிருந்து, திருநெல்வேலிச் சீமையிலுள்ள மறவர் பாளையக்காரர்கள் துணிவு பெற்று மீண்டும் கலகம் செய்தனர். சந்தாசாகிபுவினால் தென்பகுதியில் நிறுத்தப் பட்டிருந்த பட்டாணியப் படை வீரர்கள், மறவர் பாளையக்காரர்களோடு சேர்ந்து கொண்டார்கள். திருவாங்கூர் மன்னரும் 2000 பேர் கொண்ட நாயர் படையை அனுப்பிவைத்தார். மூன்று படைகளும் களக்காட்டில் சந்தித்தன.

பூலுத்தேவன் மேற்குப் பாளையங்களையும் கீழ்ப்பாளையங்களையும் இணைக்கும் நோக்கத்தோடு கட்டபொம்மு நாயக்கனைச் சந்தித்து நவாபை எதிர்க்கும் அணியில் சேர வேண்டிக் கொண்டான். கட்டபொம்முவின் உறவினர்கள் திருச்சி சிறையில் பிணையாகக் கம்பெனியார் ஆதிக்கத்தில் இருந்ததால், கம்பெனியை எதிர்த்தால் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றெண்ணி, நவாபை எதிர்க்கும் அணியில் சேர அவன் மறுத்து விட்டான். பூலுத்தேவன் அவனது ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்களைக் கொள்ளையடித்து விட்டு நெல்கட்டாஞ் செவலுக்குத் திரும்பினான். மதுரைப் பாளையங்களும், நெல்லைச் சீமையின் மேற்குப் பாளையங்களும், 24000 வீரர்களைப் படைதிரட்டி விட்டனர். நவாபின் அண்ணன் வசமிருந்த ஸ்ரீவில்லிபுத்தூரைக் கைப்பற்றிக் கோட்டைச்சுவரை இடித்துத் தள்ளினர். இதற்கிடையில் மாபூஸ்கான், கீழ் பாளையங்களான எட்டயபுரத்தோடும் பாஞ்சாலங் குறிச்சியோடும் ஒப்பந்தம் செய்துகொண்டு பெரும் படைதிரட்டி பூலுத்தேவனை எதிர்த்தான். திருநெல்வேலிக்கு 7 மைல்களுக்கு வடக்கே இருபடைகளும் மோதின. பூலுத்தேவன் தோல்வியடைந்தான்.

இந்நிலையில்தான் நவாபின் படையோடும் கம்பெனிப் படையோடும் 1758 மே மாதம் கான்சாகிபு திருநெல்வேலிச் சீமையில் வந்திறங்கினான். அவனிடம் பீரங்கிகள் இருந்தன, மதுரைப் பாளையக்காரர்களைத் தோற்கடித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்து அங்கு கோட்டையை மறுபடியும் கட்டி அங்கிருந்து முன்பு

ஒன்று கூடியிருந்த பாளையக்காரககளையெல்லாம் பணியச் செய்தான். தனது நண்பர்கள் பணிந்து விட்டததைக்கண்ட பூலுத்தேவனும் கான்சாகிபுவிடம் பணிந்து விட்டான்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஓர் நிலைப்படையை வைத்துவிட்டு கான்சாகிபு திருநெல்வேலிக்கு ஓர் படையோடு சென்றான். அங்கு வரிவசூல் குத்தகையை 11 லட்சம் ரூபாய்க்கு தளவாய் முதலியார் என்பவருக்கு நவாபு கொடுத்து விட்டதை யறிந்தான். இதனை ஒப்புக்கொள்ளாமல் மாபூஸ்கான் தானே குத்தகைதாரன் என்று கூறிக்கொண்டு வரிவசூல் செய்து வந்தான். இரு குத்தகைதாரர்களிடையே சச்சரவுகள் மூண்டன. முதலியார் கான்சாகிபுவின் உதவியை வேண்டினார். கான்சாகிபு முதலியாரையும் மாபூஸ்கானையும் சமாதானம் செய்து வைத்தான். இதன் பிறகு நவாபு படைகளின் செலவுக்காக முதலியாரிடம் பணம் கேட்டான். முதலியார் கொடுக்க மறுத்தார். கான்சாகிபு அவரை பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்தான். மேற்குப் பகுதிப் பாளையக்காரர்கள் முதலியாருக்காக வேண்டி படையெடுத்து வந்து அவரை விடுவித்தார்கள். யூசுப்கான் பாளேங்கோட்டைக்கு வந்து அவர்களுடைய படையைத் தோற்கடித்தான்.

இத் தோல்வியால் பூலுத்தேவனும், அவனது நண்பர்களும் தமது எதிர்ப்பைக் கைவிட்டுவிடவில்லை. திண்டுக்கல்லில் தங்கிருந்த பிரிட்டிஷாரின் பகைவனான ஹைதர்அலியோடு தொடர்பு கொண்டு கான்சாகிபை எதிர்க்க உதவி கோரினார்கள். மாபூஸ்கானின் நண்பனான ஆலம்கான் வசம் மதுரையிருந்தது. ஆங்கிலேயரின் நிலைமை இரண்டுங்கெட்டானா யிருந்தது. மதுரையை கைப்பற்றும் அவசியத்தை உணர்ந்து, கம்பெனிடார் கான்சாகிபை மதுரைக்குப் படையோடு அனுப்பி வைத்தனர். இதற்கிடையில் மாபூஸ்கான் தானே ஆற்காட்டு நவாபாக வேண்டும் என்ற ஆசையால் கான்சாகிபுக்கு எதிராக பூலுத்தேவனுடைய அணியில் சேர்ந்து விட்டான். போரில் கான்சாகிபுக்கு எதிராக மாபூஸ்கான் படைகளும் சேர்ந்து கொண்டன. நவாபின் வரிவசூல் குத்தகைதார் தான் தான் என்று மாபூஸ்கான் முடிவு செய்து கொண்டான். பூலுத்தேவன், களக்காட்டை திருவாங்கூர் மன்னனுக்குக் கொடுத்துவிட்டு அவருடைய உதவியை பூலுத்தேவன் கூட்டணியினர் பெற்றுக் கொண்டனர்.

யூசுப்கான் திருநெல்வேலிக்கு வந்தபொழுது பல சக்திகள் தனக்கெதிராகச் செயல் படுவதை உணர்ந்தான். இச் சக்திகளைக் குலைத்துச் சிலவற்றைத் தனக்கு ஆதரவாகத் திருப்பிக் கொள்ளத் திட்ட மிட்டான். திருவாங்கூர் மன்னனுடைய கோரிக்கையை ஒப்புக்கொண்டு களக்காட்டை அவனுக்கே

அளித்துவிடச் சம்மதித்து அவனது உதவி கூட்டணிக்கு கிடைக்கும் படிசெய்தான். அவன் திட்டங்கள் நிறைவேறு முன்பே, பிரஞ்சுக் காரர்களோடு ஆங்கிலேயர் நடத்திய போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக கம்பெனியார் கான்சாகிபை அழைத்தார்கள். அவன் சென்னைக்குச் சென்றுவிட்டான்.

பூலுத்தேவன் கான்சாகிபு இல்லாத வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தனது தலைமையிலிருந்த அணியின் பலவீனங்களைப் போக்கி, பிரிட்டிஷ்—நவாப் எதிர்ப்பணியை வலுப்படுத்த முயன்றான். கட்டபொம்மு நாயக்கன் இறந்து போனான். அவன் பூலுத் தேவனுக்கு எதிரியாக யிருந்தான். அவனுடைய மகன் பட்டம் பெறும் பொழுது தனது பிரிட்டிஷ் எதிர்ப்பை வெளியிட்டான். அவனுடைய மகனோடு பூலுத்தேவன் தொடர்பு கொண்டு அவனைத் தன் அணியில் சேர்த்துக் கொண்டான். மேற்குப் பகுதிப் பாளையங்களும், கிழக்குப்பகுதிப் பாளையங்களும், நவாப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்க்க ஒன்று சேர்ந்தன. எட்டயபுரமும் கூட்டணி யில் சேர்ந்தது. நெல்லைச் சீமையில் முதன் முதலாக மறவர் பாளையங்களும், நாயக்கப் பாளையங்களும் பிரிட்டிஷ் – ஆதிக்கத்தை ஒழிக்க ஒன்றுபட்டன.

மறுபடி யூசுப்கான் 1759-ல் திருநெல்வேலிக்கு வந்தபொழுது பிரிட்டிஷ் எதிர்ப்பு அணி பலமாக இருந்ததைக் கண்டான். திருவாங் கூர் அரசர் பூலுத்தேவனுடன் சேர்ந்திருந்தார். முன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தி கான்சாகிபு அவரை அணி யிலிருந்து விலகச் செய்தான். அணியைச் சேர்ந்த பாளையங்களின் மீது திடீர் தாக்குதல்களை எதிர்பாராத நேரங்களில் தொடுத்தான். பூலுத்தேவனின் கோட்டைகளில் ஒன்றான கொல்லங் கொண் டானை முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். கிழக்கே திரும்பி, கோல் வார் பட்டியைப் பிடித்தான். மறுபடி மேற்கே, திரும்பி சுரண் டையைக் கைப்பற்றினான். திருவாங்கூர் நாயர்படைகள் களக் காட்டுப் பகுதியைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தன. அவர் களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, பூலுத்தேவனது பாளையத் திற்கு அவற்றைத் திருப்பி விட்டான். பின்னர் வடகரைக்குப் படை கொண்டு சென்று கோட்டையைப் பிடித்தான். வடகரைப் பாளையக்காரர் வாசுதேவ நல்லூருக்கு ஓடிப்போனார். பூலுத்தேவன் பாளையங்களில் அது ஒரு பலமான கோட்டை. எதிர்ப்பு அணியின் தலைமை அலுவலகம் அதுதான். இக்கோட்டையைப் பிடிக்க பிரிட்டிஷ் தளபதிகள் பலதடவை முயன்றனர். முடியவில்லை. இப் பொழுது யூசுப்கான் அக்கோட்டையை முற்றுகையிட்டான். நெல்கட்டாஞ்செவலில் இருந்து திடீரென்று பூலுத்தேவன் தோன்றி யூசுப்கான் படையை பின்பக்கமிருந்து தாக்கினான். அதனைச்

சமாளித்துச் சில நாட்கள் யூசுப்கான் முற்றுகையைத் தொடர்ந்தான். ஆயினும் அவனது நிலைமை பலவீனமாகி வந்தது, எனவே தற்போதைக்குப் பின்வாங்குவது நல்லதென்று முடிவுசெய்தான். இக்காலத்தில் டச்சுக்காரர்கள் இலங்கையிலிருந்து வந்து தூத்துக்குடியில் இறங்கினர்கள். ஆழ்வார் திருநகரிக்கு வந்து, அதனைக் கைப்பற்றிக் கொண்டார்கள். திருநெல்வேலியை நோக்கிப் புறப்பட்டார்கள் பாளையக்காரர்களுடைய அழைப்பை ஏற்றுக் கொண்டுதான் அவர்கள் வந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவர்களை விரட்ட யூசுப்கான் பாளையங்கோட்டையிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டான். அவன் ஆழ்வார் திருநகரிக்குப் போய்ச் சேர்ந்தபொழுது டச்சுக்காரர்கள் தூத்துக்குடிக்குப் போய் அங்கிருந்து கப்பலேறிப் போய்விட்டார்கள். யூசுப்கானுடைய வெற்றிகளைக் கண்ட பாளையக்காரர்கள் சிறிது காலம் ஓய்ந்திருந்தார்கள்.

திருநெல்வேலிச் சீமையை வென்ற பெருமையைப் பறைசாற்றி இச் சீமையின் வரிக் குத்தகையை 7 லட்சத்துக்கு கான்சாகிபு கம்பெனியாரிடம் இருந்து பெற்றுக் கொண்டான். மாபூஸ்கான் தனது தம்பியான ஆற்காட்டு நவாப், முகம்மதலியோடு சமாதானம் செய்து கொண்டு திருநெல்வேலிச் சீமையை விட்டுப் போய் விட்டான். யூசுப்கானது நிலைமை வலுவாக இருந்தது. கம்பெனியிடம் விசுவாசம் இல்லாமல் அவன் நடந்து கொண்டதாக பிரிட்டிஷார் ஐயுற்றனர். தஞ்சாவூரிலிருந்து அவன் படை திரட்டினன். தனது முற்கால எதிரிகளான பாளையக்காரர்களோடு சமாதானம் செய்து கொண்டு நவாபை எதிர்க்க அவர்களது உதவியைக் கோரினன். அவனது தலைமையிலுள்ள வீரர்களின் தொகை 27,000 இருந்ததென்று பிரிட்டிஷ் அதிகாரிகள் நம்பினர். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்தும், ஹைதர் அலியிடமிருந்தும் அவன் ராணுவ உதவி பெற்றதாக பிரிட்டிஷார் குற்றம் சாட்டினர். சுயாதிக்கமுள்ள அரசனைப் போலவே அவன் கோவில்களுக்கும் மசூதிகளுக்கும் நிலங்கள் வழங்கி கல்வெட்டுகளில் பொறித்துக் கொண்டான். திருநெல்வேலி. மதுரைச்சீமைகளில் குளங்கள் தோண்டி வாய்க்கால்கள் வெட்டி நிலங்களுக்குப் பாசன வசதிகளைச் செய்து கொடுத்தான். பூலுத்தேவனையும், அவனது நண்பர்களையும் தன்னேடு சேர்த்துக் கொள்ள முயன்ருன். இம்முயற்சி வெற்றி பெற்றதா என்ற கேள்விக்கு உறுதியான விடையெதுவும் சொல்லச் சான்றுகள் கிடைக்கவில்லை. அவர்களைப் பல முறை அவன் எதிர்த்துப் போராடியிருக்கிருன். பல முறை அவர்களை அழித்து விடுவதாகச் சபதம் செய்திருக்கிருன். பல தீமைகளை அவர்களுக்குச் செய்திருக்கிருன். அவனை அவர்கள் பிறவிப்பகைவனுக

எண்ணியிருந்தார்கள். சில வருஷங்களுக்குள்ளாக கான்சாகிபு அவர்களுடைய நண்பனுக ஆகமுயற்சி செய்தான். அவர்கள் இக்காலத்துக்குள் அவன் செய்த தீமைகளை மறந்து விட்டிருப்பார்களா என்று சொல்ல முடியவில்லை.

கான்சாகிபு சுதந்திர மன்னனைப்போல நடந்து வருவதையறிந்த பிரிட்டிஷ் கம்பெனியாரும், நவாபும் அவனைப் பதவியிலிருந்து அகற்ற முடிவு செய்தனர். இதற்கென ஒரு படையைத் திரட்டி அனுப்பினர். இதன் தளபதியாக கர்னல் மன்ஸார் நியமிக்கப்பட்டான். நீண்டகால முற்றுகைக்குப் பின்னர் 14-10-1764ல் மதுரைக் கோட்டை பிடிபட்டது. கான்சாகிபு சிறைப்படுத்தப்பட்டான். அன்றே அவன் தூக்கில் இடப்பட்டான்.

கதைப் பாடலின் பாத்திரங்கள்

பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து கான்சாகிபு நடத்திய போர்களைப் பற்றி இக்கதைப் பாடல் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. அவனுடைய வரலாற்றில் முக்கியமான பகுதி, திருநெல்வேலிப் பாளையக் காரர்களோடு நடத்திய போர்களாகும். இதைப் பற்றி கதைப் பாடல் எதுவும் கூறவில்லை. மதுரையில் கான்சாகிபு சுபேதாராகப் பதவியேற்ற காலம் முதல்தான் கதை தொடங்குகிறது. கான்சாகிபுவின் வாழ்க்கையில் கடைசி ஏழு ஆண்டுகளில், நடந்த நிகழ்ச்சிகளே கதைப் பொருளாகும்.

இக்கதையின் தலைவன் கான்சாகிபு அல்ல. சிவகங்கைத் தளவாய் தாண்டவராயனே கதையின் தலைவனுவான். இவன் நவாபிடம் சென்று, கான்சாகிபுவின் சுயாட்சி நோக்கத்தைக் கூறி படைகொண்டு வரச் செய்து, மதுரையைப் பிடிக்கத் தூண்டியவன் என்று கதைப் பாடல் கூறுகிறது. இவனை அரசியல் சூழ்ச்சியுடையவனுகக் கதை வருணிக்கிறது. அவனுடைய அரசியல் சூழ்ச்சியின் முன்னுல் ராணுவ வலிமை பயனற்றுப் போகிறது. தன்னைவிட உயர்ந்த பதவியிலுள்ளவர்களைக்கூடத் தனது தந்திரத்தால் அவன் தன் வழிக்குக் கொண்டு வருகிறுன். கான்சாகிபைப் படை பலத்தாலும், வீரத்தாலும் வெல்ல முடியாததைக் கண்டு, பணத்தைப் பயன்படுத்தி மித்திர பேதம் செய்து, சீனிவாசராவ், மார்ச்சண்டு ஆகிய வஞ்சகர்களின் உதவியால் கான்சாகிபுவைச் சிறைப் படுத்திஞன், சிங்கத்தின் வீரம் நரியின் தந்திரத்தின் முன் நிற்க முடியவில்லை.

கதைப்பாடல், கான்சாகிபு, சிவகங்கையோடு சச்சரவு தொடங்கிய காலத்திலிருந்து அவனது வரலாற்றைத் தொடங்குகிறது. ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய பாளையங்களின் சில பகுதிகளை மதுரைச் சுபாவோடு சேர்த்துக் கொள்ள அவன் ஆசைப்

படுகிறுன். ஆனுல் இவ்விரண்டு பாளையங்களும் அவனேடு சேர மறுக்கின்றன. திருநெல்வேலிப் பாளையக்காரர்களோடு அவன் பல போர்களைச் செய்திருந்ததால் அவர்கள் அவனுக்குப் பகைவர்களாகவே யிருந்தனர். எனவே அவனைப் பிரிட்டிஷாரும்,நவாபும் தாக்கிய பொழுது, அவனுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. தாண்டவராயனைத் தலைவன் எனப் பாடல் கூறிய போதிலும். கான்சாகிபுவின் வீரச் செயல்களையும், அவனது வீரத்தையும் புகழத் தவறவில்லை. இங்கிலிஷ் படைத் தலைவர்களை இப்பாடல் கேலிசெய்கிறது தாண்டவராயனது தந்திரத்தைப் புகழ்ந்து. பேசும் இப் பாடல் கான்சாகிபு வீரத்தையும் புகழ்கிறது. இப்பாடல் ஒரு சண்டையை வருணிப்பதால் இச்சண்டையில் பங்கு பெறும் கான்சாகிபுவின் வீரத்தைப் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. இந்நாட்டுப் பாடகர் அறியாமலேயே கான் சாகிபு இப்பாடலின் வீரத்தலைவனுகி விடுகிறுன்.

தெற்குச் சீமையின் அரசியலில் பூலுத்தேவன் முக்கிய பங்கு பெற்றுன். வீரத்திலும் அரசியல் சூழ்ச்சியிலும் சிறந்தவனுக இருந்தான். பிரிட்டிஷாரையும், நவாபையும் எதிர்க்க பாளையக்காரர்களது அணியைத் திரட்ட முயன்றுன். இவற்றை இம் முன்னுரையில் கூறியுள்ளோம். அவனது முடிவு பற்றி அறிந்து கொள்வது உறுதியான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை யென்று முன்பே கூறினேம்.

ஆனுல் இப்பாடல், கான்சாகிபு மதுரையில் ஆண்ட காலத்தில் பூலுத்தேவன் ஆற்காட்டில் நவாபின் பணியாளாக வேலை செய்து வந்ததாகக் கூறுகிறது. அவன் வரலாறுமுழுவதும் நவாபை எதிர்த்து அவனது ஆட்சியை ஒழிக்க அணிதிரட்டுவதாகவே உள்ளது. பலமுறை தோல்வியடைந்த பின்னரும், மீண்டும் மீண்டும், நவாபு எதிர்ப்பு பிரிட்டிஷ் எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வீரத்தோடு போராடிய பூலுத்தேவன் தன் கடைசி நாட்களில் அடிமையாகக் காலங்கழித்ததை நம்பமுடியவில்லை. தாண்டவராயனது சூழ்ச்சியையும், நரித்தந்திரத்தையும் புகழ்ந்து பேசும் பாடகனது மனப்பான்மையில் பூலுத்தேவனும் வீரத்தால் சாதிக்க முடியாததை நவாபைச் சார்ந்து கான்சாகிபைப் பற்றிக் கோள் மூட்டி, அவனை அழிக்கும் தந்திரத்தால் சாதிக்க முயன்றுன் என்று கூறுவது பூலுத்தேவனும் தாண்டவராயனைப் போல் அரசியல் தந்திரம் வாய்ந்தவன் எனக்காட்டும் பாடகனது முயற்சி யென்று கொள்ள வேண்டும். தவிரவும் கான்சாகிபு இறந்து 3 ஆண்களுக்குப்பின் பிரிட்டிஷ் தளபதி காம்ப்பெல் வாசுதேவநல்லூரை முற்றுகையிட்ட பொழுது பூலுத்தேவன் கோட்டையிலிருந்து

போராடினுன் என்று காம்ப்பெல்லே கூறியிருக்கிருன். கோட்டையை காம்ப்பெல் கைப்பற்றினுன் என்பதற்குச் சான்று உள்ளது. ஆனுல் பூலுத்தேவன் என்னவானுன் என்பதைப் பற்றி எந்தச் செய்தியும் கிடைக்கவில்லே. ஆயினும் கதைப்பாடல் கூறும் இச் செய்தி உண்மையல்ல என்பது தெளிவு.

சிவகங்கை, ராமநாதபுரம் பாளேயங்கள் கான்சாகிபு-பிரிட்டிஷ் போராட்டத்தில் ஒரு பங்கு வகித்தன என்ற வரலாற்றுச் செய்தியை இப்பாடல் அளிக்கிறது. கான்சாகிபின் கடைசிக் கால வரலாற்றைப் பற்றிப் பல செய்திகளேயும் அளிக்கிறது.

பாளேயங்கோட்டை,
5-12-70

நா. வானமாமலே
பதிப்பாசிரியர்.

நன்றியுரை

இக்கதைப் பாடல் எழுத மூன்று பிரதிகளைப் பயன்படுத்தி யுள்ளேன். 60 ஆண்டுகளுக்கு முன் வெளியான பழைய அச்சுப் பிரதியொன்று—இது சென்னையில் வெளியானது. இப்பிரதியை மயிலை சீனிவெங்கடசாமி அவர்கள் எனக்கு அனுப்பினார்கள். நெல்லையில் ஒரு கையெழுத்துப் பிரதி கிடைத்தது. இதுவும் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்டிருக்கலாம். அதில் எழுதிய ஆண்டு குறிக்கப் பட்டுள்ளது. இவையிரண்டையும் ஒப்பிட்டு இந்தக் கதைப்பாடலில் மூலம் எழுதப்பட்டிருக்கிறது.

முன்னுரை எழுத திருநெல்வேலி கெஜட்டியர், திருநெல்வேலி ஜில்லா சரித்திரம் (கால்டுவெல்) திருநெல்வேலிச் சீமை சரித்திரம், யூசுப்கான் பற்றிய வரலாற்று நூல்கள் பயன் பட்டிருக்கின்றன. இந்நூலை எழுத உதவிய பிரதிகளை அனுப்பிய நண்பர்களுக்கும், இதனை வெளியிட்ட மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும், அதன் துணை வேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களுக்கும் எனது நன்றியையும், நாட்டுப் பாடலில் ஆர்வமுள்ளவர்களின் நன்றி யையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நா. வானமாமலை

நாட்டுக் கதைப்பாடல்

விருத்தம்

காப்பு

சீர்வளர் மதுரை தன்னிற் சிறக்கவே செங்கோலோச்சிப்
பார்வளரமுதம் போன்ற பாக்ஷாநபாபு மெச்சும்
கார்வளர் பிரபு டீகக் கான்சாயபுகதையைப் பாடத்
தார்வளர் கூடல் மேவுந் தந்தி பொற்பதங் காப்பாமே.

தாம் தனதந்த நாஞ தன
தாம்னனம் தஞதந்த நாதந்த நாஞ

மகுடமுடிடால் விருதிலங்க ஜன்னல்
மதயானை வளர்த்தெடுத்தவரிவேங்கைக் குட்டி
விகடமிடுவோர்கள் குல காலன் வெற்றி
விசையாலீம்குலம் விளங்க வருதீரன்
ரதகஜதுரகப் படையாளன் நல்ல
நடனமிடுபரிநகுலதுடிநிபுண கொடியான்
மதனதுரை கானுகதை பாட எனக்கு
வரந்தர வேணுமடி மதுரை மீஞட்சி
கள்ளரைக்கருவறுத்த தீரன் நல்ல
கனமான மதுரை நகராண்டிடுஞ் சூரன்
உழக்கரிசிகானுகதை படிக்க நாளும்
உலகந்தழைக்கவேணும் சிக்கந்தர் சாயுபு
படைவீரன் கானு கதை பாட சௌ
பாக்கியம் நீகொடடி பாண்டியன் மகளே
கடல் சூழும் புவியெல்லாம் விளங்க நல்ல
கானுகதை தமிழிஞற் கழறவே நினைத்தேன்

இளமை

பிறந்தது பனையூர் மண்ணு கானனை
பிள்ளை போல எடுத்துவளர்த்தான் முசலாவி
சிறந்த வெள்ளைக் காரனிடத்தில் கானு
சீராய்மூன்றரை வருஷம் பிள்ளையாய் வளர்ந்தான்

அவனை மோசஞ்செய்ய நினைந்தான் என்று
அப்போதேதுரத்திவிட்டான் முசலாலி[1] வெள்ளைக்காரன்
அவனை விட்டு தட்டுகெட்டுத் தெரிந்து கானன்
அன்பான பிரட்டினிடம்[2] பிள்ளைபோல் சேர்ந்தான்.
பிரட்டினிடம் பிள்ளைபோல் வளர்ந்து நல்ல
புலிக்குட்டிகான்சாயபு பெரிய வனுமானுன்
மிரட்டுமொரு பாஷைகளும்[3] படித்து நல்ல
வீரன்மம்முதலி[4] நவாப்பு துரையிடத்தில்
தண்டலிலே சேவகமாயிருந்து கானு
தைரியமாய் சேவகஞ் செய்து வருநாளில்
மண்டலீகன் மாயாமிக மகிழ்ந்து அப்போ
வழிச்சாரி ஆயத்தொழில் கொடுத்தார் நபாபு
வழிச்சாரி ஆயத்தொழிலெடுத்து நல்ல
மம்முதலி சாயபுக்கு பணங் கட்டி வந்து
வழிச்சாரி சேவகத்தை[5] விட்டு கானன்
வாங்கினுன் சிப்பாயி ஆடுதலி[6] தன்னை
ஆடுதலிசிப்பாயி ஆகி அதில்
ஆறேழு மாதமாய்த் திரிந்துவரு நாளில்
நீடு நாய்க்கர் உத்தியோகங்[7] கொடுத்தார் கானன்
நிலையாகப் பதினேழு மாத மதிலிருந்து
நாய்க்கருத்தி யோகத்தைவிட்டு கானன்
நலமாக அவுல்தாருத்தியோக மெடுத்து
டீக்காகச் சிலகாலந் திரிந்து அப்போ
திறமையாயதைவிட்டு சமேதாரு[8] மானுன்
சமர்பொருது சமேதராயிருந்து கானு
தளக்குதிரையிரு நூற்றுக்குச் சுபேதாரு[9] மானுன்
சுபேதாருத்தியோக மெடுத்து அப்போ
சுந்தரமாய் சேவகஞ்செய்து வருநாளில்
தக்கோலம் பேராம்பூர் தனிலே யிருந்து
சந்தாசாயபுபடே சாயபு[10] வந்திறங்கிவிட்டான்
திக்கெலாம் வெகு கூச்சலாக அங்கே
சேனைகளெல்லாம் நெருங்கியேயிருக்கும் வேளையிலே

---

1. முசலாலி—பிரஞ்சுக்கார அதிகாரி
2. வெள்ளைத் தளபதி.
3. உருது, இங்கிலிஷ், பிரெஞ்சு—தமிழல்லாத மிரட்டுகிற மொழி.
4. மம்முதலி—முகம்மதலி—ஆர்க்காடு நவாபு.
5. Body guard.
6. ஆர்டர்லி சிப்பாய் வேலை பெற்றுன்.
7. நாயக் என்ற ராணுவ வேலை,
8,9. ராணுவ வேலைகள், உயர்ந்த பதவிகள்.
10. வரலாற்றில் காணப்படும் சந்தாசாகிபு—முகம்மதலியின் விரோதி.

5977.

பசப்பாக பறங்கிமலே மேலே அப்போ
படைகூட்டிப் புதுச்சேரி வெள்ளைக்காரதுரைகள்
முசுப்பாருடன் பறங்கிமலே இறங்க அதை
மூதண்ட நபாபுபாத[11]ருங்கேட்டு
முசியாப்[12]பறங்கி வெள்ளைக்காரன் பெரிய
முசாலிதுரை கன்னல்கேமலேயழைத்து
முசியாப் பரும பெரிய பிரட்டன் நல்ல
முடி மன்னன் நீர்மேல் நெருப்பையு மழைத்து
சீரானதுரை சின்னபிரட்டன் இவர்களை
சீக்கிர நவாபுதுரை கூட்டிவரச் சொல்லி
ஆரையனுப்புவோ மென்று அப்போ
அதிவீரன்மம் முதலிநபாபுதுரை கேட்டார்
கன்னல்[13]துரைகம்சல் கூடிப்[14]பேசி அப்பேய
தடமதனன் கான்சாயபை வரவழைக்கச் சொல்லி
தன்னகரில்லாத துரைபிரிட்டன் பார்த்துத்
தைரியமாய்க் கானுதனக் கேது சொல்வானும்

பறங்கிமலேப் போர்

வாடாநீகான் சாயபு துரையே பறங்கி
மலேக்கோட்டை நாலெட்டில் பிடிப்பையே யானல்
நீடாக திசைமதுரை தனக்கு நல்ல
நிசமாக கும்தானய்[15]வைக்கிறே னென்று
அன்னேரமுறுதியாய்ச் சொல்ல கானன்
அப்போதே கோட்டைவிட்டு வெளியிலேவந்து
கர்னல் பட்டாளம் பனிரண்டு நல்ல
கல்கட்டர்[16]பட்டாளம் பிர்கெட்டு[17]ரெண்டு
ஐந்நூறுகுதிரை முதல் நடத்தி அப்போ
யாளிமுக பீரங்கியிருபது நடத்தி
முன்னேறுமுடிமன்னர் நடக்க நல்ல
முனைவீரன் பிரட்டனிடபட்டாளஞ் சூழ
துடிகொண்டு ரிஜிமெண்டு நடக்க கோடி
சோல்தார்[18]கருஞ்சட்டைக் காரர்புடை சூழ

---

11. பெரிய நவாபு—முகம்மதலி.
12. முசியா—சோர்வில்லாத (குமரி மாவட்டம் பாமரவழக்கு குமரி-பா.வ).
13. கன்னல்—Colovnel
14. கம்சல்—Council
15. கும்தான்—கம்மந்தான்—கமாண்டர். இது ஒரு கோட்டையின் ராணுவ அதிகாரிப் பதவி
16, கல்கத்தா 17. அதிகாரிகளின் பெயர்கள்.
18. சோல்ஜர்—Soldier

கோடிகொண்ட பாளையமும் நடக்க அப்போ
கோஷ்டமிட்டு முல்கார் பாளையஞ் சூழ
கெடிகொண்ட தம்பூரடிக்க நல்ல
கெர்ச்சனையாயாறு புல்லாங் குழலூத
முடிவேந்தன் கான்சாயபு துரையும் தம்பூர்
முழங்கியே பாளையத்தை நடத்தினைப் போ
ஆற்காடு வீதியுந்தாண்டி கானன்
அடர்ந்தேறி வேலூர் விசலூருந்தாண்டி
தீர்க்கமுட நெல்லூர் தாண்டி அப்போ
சேனுதிபதி பறங்கிமலை கோட்டைவெளியில்
பறங்கிமலை கீழ்பாரிசத்தில் கானு
பட்டாள மத்தனையு மணியாய் நிறுத்தி
இறங்கியைந்து நாழிகைக்குள்ளே அப்போ
யேற்றினன் மோர்ஜா[19] விலேழு பீரங்கி
கருமருந்து போட்டுச் சேத்திடித்து அதிலே
கனமான சஞ்சலி கணக்காகப் போட்டு
தருமிரும்புக்குண்டு வெடிகுண்டு கருப்புச்
சட்டை போட்டேயிடித்துத் தீர்த்திட்டான் பளித்தா[20]
குமுறுதே காரிடிகள் போலே கானன்
கொளுத்தினன் பீரங்கிசொல்லக் கூடாது
சமர்முகத்தி லக்கினியைப் போலே குண்டு
தான் பார்த்த விடமெல்லா மோடுதே நெருங்கி
மழைமாரி பொழியுதே குண்டு அதிர்ந்து
மானங் குமுறுதே பீறங்கி வேட்டு
களை சூழ்ந்த பறங்கிமலைக் கோட்டை அங்கே
கல்லெல்லாந் தூளாய்ப்பறக்குதே குண்டால்
கோட்டைதனில் முசுப்பாருமேறிப் பார்த்துக்
கொத்தளந்தன்னிலே சத்தமுகில் போலே
வேட்டாயிரம் பளித்தா தீர்த்தான் குண்டு
மேலாடிக்கானுதுரை பாளையத்தைச் சாட
ஏறிட்டுதுரை தானும் பார்த்து இன்றைக்
கெப்படியுங் கோட்டை பிடியாமல் விடேனென்று
வீறிட்டு குதிரைகள் கனைக்க அப்போ
வேந்தனுங் கான்சாயபு தீர்த்திட்டான் பளித்தா
மண்டி வரக் கண்டந்த சாயபு குண்டை
வாரியே யிரைத்தான் மழைமாரி போலே
அண்டியே துரைகானு சாயபு குண்டு
அஞ்சாமல் வரக்கண்டு நெஞ்சம் பதைத்து

---

19. வரிசை.
20. பளித்தா—சுடுதல்.

ஏழு பீரங்கி தலை கீழாய் நிறுத்தி
ஏராளமாய்ச்சல்லி வாரியதிற் போட்டு
முழக்கி யக்கினி மாரிபோலே வைத்து
முழக்கினன் குமுகுமென பீறங்கி வேட்டு
மேலாடி பாளையம் நெளிக்க கானு
விழிதி வந்து சாராயப் பீப்பாயைத் திறந்து
காலால்கள் சோல்தார் படைக்கு அப்போ
கண்டபடி கொடுத்திட்டானெவ் வொரு கிளாசு
சாராய வெறி கொண்டு ஜனங்கள் நிற்க
தாங்காமல் நடவென்று சாத்தினன் பிரம்பால்
பூராயமாய்ப் பட்டாளத்தை நடத்தி கானன்
புகழ் பறங்கிமலைக்கோட்டை மதிலோரம் வந்து
ஏணி மரமெழு நூறுசாத்தி ஜனத்தை
யேற்றிய பிரம்பாலே சாற்றினன் கானன்
அணியணியாய் சிப்பாய்களேற முசாபர்
அக்கினிபோல் கண்சிவந்து கொப்பறை தன்னில்
மூவாயிரந்துலாமீயங் காய்ச்சி அப்போ
முழுயிருப்பு கரண்டியால் சிப்பாய்கள் மேலே
காவலர்கள் வாரி யிறைத்திட்டார் அதைக்
கண்டவுடன் சிப்பாய்கள் தலைகீழாய் விழுந்து
நெளித்தோடச் சோல்தார் சினந்து அதட்டி
நெறுநெறன் றடர்ந்தேறிக் கோட்டை மேற்கொண்டு
முழித்துப் பாராமற் கோட்டையின் மேல் நின்று
மூன்று பளித்தா திர்த்து ஆணு தலையாக
சீறிய கோட்டைக்குள் குதித்தார் அப்போ
சிப்பாய்கள் பட்டாளம் பின்தொடர்ந்தேறி
ஏறிய கோட்டைக்குட் குதித்து வந்து
எதிரிட்ட முசுப்பரைக்[21] கைப்பிடியாய் பிடித்து
முசுபர்தனைப் பறங்கிமலைக் கோட்டை தன்னில்
முதல்வெட்டு பட்டாவால் வீசின பின் கானன்
வசும் பாகத்தைனுத்து வைத்து பாளையத்தை
வளைத்துப் போய் தக்கோலம் பேராம்பூர்பிடித்து
நெல்லூர் சிராப்பளியும் பிடித்து கானு
நேராக ஆற்காடு வீதி தன்னில் வந்து

மாஷாவைக் காணுதல்

மல்லூரு ஆற்காடு தன்னில் பறைச்சி
மாசாவைக் கண்ணாலே கண்டானே கானன்

21. முசாபர் - கோட்டை அதிகாரி.

மாசாவைக் கண்டு மயலாகி நல்ல
மதனதுரை கான்சாயபு ஆள் விட்டுப் பேசி
மாசாவை கல்யாணஞ் செய்தான் அப்போ
மதுராபுரிக் கோட்டைக்கு வந்ததடா யோகம்
திரும்பினுன் ஆற்காடு வெளியில் கானன்
செயங்கொண்டு வரக்கண்டு சீரான துரைமார்
விரும்பியே சந்தோஷமாகி துரைமார்
வீரான மதுரைக்கும் தானென்று[22] சொன்னுன்

மதுரைக்கு அனுப்புதல்

அதுசேதி யர்க்காருஞ்சொல்ல அப்போ
அதிவீரமம் முதலிநபாபு துரை சொல்வான்
சதுர் முகனே துரை பெரிய பிரட்டா நான்
தானுக வொரு சேதி சொல்லுகிறேன் கேளு
கும்தான் கலகமொரு பக்கம் பிரட்டர்
கூகுசாயபு கலகமோ சொல்லக் கூடாது
வர்மமாய் மயலாடிக் கள்ளர் பயமும்
மகமதியர் கலகமும் சொல்லப் போகாது
மறவர் குடி பெருத்தந்தத் தேசம் அந்த
மதுரைக் கனுப்பினுல் மோசம்வரு மென்முன்

பிரிட்டன்—நவாபு உரையாடல்

திறமிகும் துரை பெரிய பிரட்டன் நவாபு
தேவடியிலேயிருந் தேது சொல்லலுற்முன்
பன்னிரண்டு வருஷங்களாச்சு அந்த
பாண்டியன்பதி சீமை தன்னரசு விட்டு
இனி நமது கானுதனையனுப்பி சீமை
யெல்லா மடக்கியொரு குடைக்கீழ் நிறுத்தி
வடக்கே வந்து பயணஞ் சேரும்படியாய் இவனை
மதுரைக்கனுப்பினுல் வசமாகுமென்முன்.
திடமாக மம்முதலிசாயபு அப்போ
சிந்தை தனிலெண்ணி யாலோசனை பண்ணி
புவனமெல்லாம் புகழ் பெரிய பிரட்டன் நல்ல
புலிக்குட்டி பாபு நான் சொல்லுகிறேன் கேளு
இவனை மதுரைக் கனுப் பிவைத்தால் நாளை
யெதிராளியாவானே திருச்சினுப்பள்ளிக்கு

22. மதுரைப்பகுதி, மதுரை என்றழைக்கப்பட்டது. அங்கு பாளையக் காரர்கள் நவாபுக்கு அடங்கியிருக்கவில்லை. அந்த நிலைமையைக் கூறி, அவர்கள் நவாபு ஆட்சியை ஒப்புக்கொண்டு, வரிகட்டுமாறு செய்ய படையோடு கான்சாகிபை, மதுரையிலேயே கமாண்டராக இருக்கச் செய்யவேண்டும் என்று பிரிட்டன் சொல்லுகிருன்.

கானனையனுப்ப வேண்டாமென்றார் அப்போ
கர்னல் துரைபிரட்டன் நவாபைப் பார்த்து
நான் வளர்த்த பிள்ளையந்தக் கானன் சாயபு
நம்மோடெதிர்த்தவன் சண்டைக்கு வந்தால்
எண்ணி எட்டு நாளைக்குள்ளாக நெருப்பா
யெரித்து நான் மதுராபுரி பிடித்திடுவேனென்றான்
புண்ணிய நவாபுதுரை பார்த்து பிரட்டாவுன்
புத்திக்குச் சரியானபடியென்று சொல்லி
கானுதனை பக்கத்திலழைத்து நபாபு
கனமாகத் தாம்பூலங்கையில் கொடுத்து
நானும் உனையனுப்புகிறேன் தெற்கே எனக்கு
ரண்டகஞ்[23]செய்யாதே யென்றார் நவாபு
கானனு மனது மகிழ்வெய்த பிரட்டன்
கன பிரியமாகவே யேது சொல்வானும்
காயிதங் கைதனிலே கொடுத்து சாமி
காரியங் கண்ணுகப்பார்த்து வரச் சொல்லி
நேயமுடன் நடமதுரைக் கென்று பிரட்டன்
நிசவுறுதியாய்ச் சொல்லி அரண்மனை போய்ச் சேர்ந்தான்

மதுரைக்குப் பயணம்

சேர்ந்தவுடன் கானு துரை தானும் பிரட்டன்
திடவுறுதி சொன்ன பின் வெளியிலே வந்து
மாசாலைக் காடியின் மேலேற்றி சேனை
மருங்கில் நெருங்கி வரக் குதிரை மேலேறி
ஆசார வாசல் வழி தாண்டி நல்ல
அழகான சென்னைபுரி கோட்டை வெளி தாண்டி
திருச்சினு பள்ளி கோட்டை தாண்டி கானு
செயனு மங்கலம் விராலி மலை தாண்டி
வரிசையாய் மணப்பாரை கடந்து தோகை
மலைதாண்டி நம்மன் குரிச்சியிலிறங்கி
நம்மன் குரிச்சிப் பூச்சியனை யழைத்து கானு
ராஜாதி பதியவனு மேது சொல்வானும்.
கமையாக உனது பெரும் சேனை தன்னில்
கள்ளர் பயமேதடா காடுவழி தன்னில்
இராப் பகலாய் பாளையம் வருது இனிமேல்
இவ்விடந்தன்னில் களவு நடந்துதேயானல்
தப்பாக் நீயிருக்குந் தேசம் எல்லாந்
தவிடு பொடியாக்கி ரண தூளியாயடித்து

23. ரண்டகம்—துரோகம்.

எவனெவனி ருந்தாலும் பாரேன் உன்னை
ஏழுமலைக் கப்பாலே விரட்டு வேனென்று
அவனை பயப்படுத்தி வழிபதனம் என்று
அதட்டி வலுவாகி நடந்திட்டானப் போது
துவரங்குருச்சி யதுதாண்டி உயிர்
தோகக்குருச்சியெனுநத்தம் வந்துசேர்ந்து
நத்தத் துலிங்கனை யழைத்து கானு
நலமானவொரு சேதிதிடமாகச் சொல்வான்
கள்ளர் பயமிக்காட்டில் மெத்த வென்று
கனமான நபாபுதுரை சொன்னரடா பாவி
எவ்வளவு பாதை வழிதனிலே லவுண்டி
இனிமேலும் பாதையிலே கள்ளர்பய மானல்
எட்டுநாளையில் கச்சைகட்டி உன்னை
ஏலேலோ தூக்கிலே போட்டிடுவேன் கள்ளா
மட்டுள்ளவழி பாதைபதனம்[24] என்று
மன்னன்வருகிருன் திசைமதுரைநோக்கி
அழகர்மலைக் கொம்பையுந்தாண்டி நல்ல
அழகான தேனூர் மைதான வெளிதாண்டி
தளம்பெரிய நால்சேனை சூழ நல்ல
சௌரியமுடனே நல்ல குளமதிலிறங்கி
கொடி முரசுதம் பூரடிக்க நல்ல
கோட்டைமிடு தனது வைபட்டாளஞ்சூழ
துடியாக வானமுகடதிர நல்ல
தோகையர்கள் நடனமிட வெண்கவரி வீச
கும்பினிமுரசு வெள்ளைக்காரரர் தளமும்
கூட்டி மதுராபுரியில் ஒயிலாகச் சேர்ந்தான்
இப்புவியெலாஞ் செவிடுபடவே பீரங்கி
இருபத்தொரு வேட்டு தீர்தார் நகர்தன்னில்
கோடை காலத்திடிகள் போலே வைத்துக்
கொளுத்தினன் பீரங்கி சொல்லக் கூடாது
வாடாமலர் மதுரை நகர் தன்னில் வாழும்
மதிகூகு சாயபு அவன் ஏறிட்டுப் பார்த்து
பேசியிந் நகர் போச்சு தென்று தனப்
பெருக்குடனே திருச்சினப்பள்ளிக்கோட்டை சேர்ந்தான்
மதயானை கானுதுரைசாயபு கோட்டை
மதுராபுரியலங்கமீது நின்று பார்த்தால்
கதையான மதுராபுரிக் கோட்டை தன்னில்
சூன்யமும் வீரியமுஞ்சொல்ல முடியாது

24. வருகிற வழியிலுள்ள பாளையக்காரர்களிடம் கள்ளர்களது கொள்ளை நடவடிக்கைகளை அடக்கச் சொல்லுகிருன்.

தேங்காய் தண்ணீரிலே மோதும் துய்ய
சிறு மல்லிகைப்பூ சொரியுந் திசைமதுரைக் கோட்டை
மாங்காய் காய்த்துக் குலையுதிரும் நல்ல
மங்கையர்கள் பந்தடிக்கும் மணிமதுரை வீதி
வெள்ளானை விளையாடும் மதுரை நல்ல
வெண்கதலிக்குலை நெருங்கு மிக மதுரைக் கோட்டை
வெள்ளமிர்தம் சொரியும் திசை மதுரை நீண்ட
வீதிகளெல்லாம் கதம்ப வாசமது வீசும்.
மந்தாரை முல்லை யிருவாட்சி செண்பக
மலர்சொரிந்து தேனொழுகு மணிமதுரைக் கோட்டை
நந்தாதி மதிமணி மேடை வீதி நல்ல
நவமணிகள் குவிந்திருக்கும் நல்ல மதுரைக் கோட்டை
வாழைகுலை சாய்ந்திடு மதுரை நகரில்
மந்திகள் பிலாக்கனிகை மத்தளங் கொட்டும்
தாழைதனில் மயில் தோகையாடும் வண்டு
தான் கீதம் பாடி மலர்வாசத்தைத் தேடும்
எழுபத்திரண்டு கொத்தளமாம் கிணற்றில்
எழிலான கடல் குதித்துத் திரிந்து விளையாடும்
வழுதி சேரதிசயங்களனைத்தும் வாயால்
வழுத்த முடியாது மனமகிழ்ந்து பார்த்திருந்தான்
இருந்ததொரு கான்சாயபு நீலன் நல்ல
இயல்பாகப் பின்னுமவனேது செய்வானும்
நானூறு பொன்கையில் கொடுத்து அந்த
நாழிகையில் மீனாக்ஷிக்குச் சிறப்பு செய்யச் சொல்லி[25]
பானுமதி சூடுமீனம் பாள் பாதம்
பணிந்து சொக்கேசரையும் வலமாக வந்து
கர்த்தாக்கள்[26] வந்திருக்குமேடை அந்தக்
கருங்கல்லுச் சவுக்கையிலே ஒயிலாகச் சாயந்து
மீனாட்சி கிருபைகளினாலே நல்ல
வெங்கலக்கதவு தனைப் பேர்த்தவனெடுத்து
திரனெனும் கான்சாகிபு துரைதான் அதிலே
வொருகோடி திரவிய மிருக்க மனமகிழ்ந்து
விஸ்தார அரண்மனையுங் கட்டி அதிலே
மேல்வீடு மாளிகையுந்தானுண்டு பண்ணி
அரண்மனையில் மகிழ்வாக விருந்து இன்னும்
ஆறேழு நாள் பொறுத்து யோசனைகள் செய்து

25 கான்சாகிபு முன்பு இந்துவாயிருந்தவன். பதவிக்காகவே முஸ்லிம் மதத்திற்கு மாறியவன்.

26. கர்த்தாக்கள்—நாயக்கமன்னர்கள். இவர்கள் தங்களை விஜயநகர ராயர் ராணுவ காரியகர்த்தாக்களென்று தமது சாசனங்களில் தங்களைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொள்ளுகிறார்கள்.

பிரமலேயின் மேல் களியென்று கானு
பேசியைந்து மணி வேளைப் பயணமென்று
சொல்லியே பாளையத்தை நடத்திச் சென்று
சூழவே பிறமலைநாட்டாரை வளைத்து
வில்லுக்கருச் சுனன்போல பார்த்த
விடமெல்லாம் பிணக்காடாக வெட்டியிழுத் தெறிந்து
அடங்காத பிறமலை நாட்டாரை வளைத்து
ஆறுபொதிதலை வெட்டியடக்கினன் கானும்.

கான்சாயபு காவல்

ஒடுங்காத மயிலாடிக்கள்ளர் தன்னை
ஊருக்கு இருபேரை கீர்த்தியாய் வைத்து
வண்டிகொண்டு குடமுட அடித்து கானு
வழிமீதில் பதின்மூன்று வராகனையெறிந்தான்
எட்டியதைப் பார்க்க முடியாது அதிலே
ஈயெறும்பு மொய்க்காமலிருந்து தடாபணமும்
கரையானுமருகில் நெருங்காதே நல்ல
கருக்குருவியதின் மேலிருக்க முடியாது
கட்டாமலே யடித்து விட்டான் காட்டிக்
கருங்குருவி மாடு மேச்சு வரலாச்சு மதுரை
ஒரு நாளறுத்த பிணமெல்லாம் கானும்
ஒன்பது நாள்வரைக்கு முலாத்தியே போட்டான்
கட்டேது காவலறியார்கள் தேசம்
கறந்துபால் வெளிவைத்தால் காகமணுகாது.
மாசா மேலாணை யிட்டபேர்க்கு அந்த
மறியலிலே நின்றவர்க்கு வெகுமதிகள் கொடுப்பார்
கூசாமலாணை மிஞ்சினோரை பிடித்துக்
கொண்டுவந்தேழுபேரை விலங்கினில் போட்டான்
வருகையிலே கும்தானென்று வந்தான் அந்த
மதுரைக்கு வந்த பின்பு ராசாவுமானான்[26a]
இருகையிலும் பணமேந்திக் கொண்டு எட்டி
விசைந்து வழி நடக்க வேயிருந்தரசு செய்தான்
இரட்டப்ப நாய்க்கன் வணங்க[27] நல்ல
இரிசப்ப நாய்க்கனூரங் கண்டு சந்திக்க
கட்டபொம்ம நாய்க்கனும் வணங்க அந்தக்
களக்காட்டூர் வன்னியன் சந்திக்க

26a. கோட்டைக் காவலதிகாரி(கும்தான்)யாக வந்தவன் ராசாவாக அதிகாரம் செலுத்த ஆரம்பித்தான்.

27. பாளையங்காரர்களை நவாபிற்கு அடங்கி நடக்கச் செய்தான்.

சாத்தூரு நாய்க்கன் வணங்க நல்ல
சன்னப்பநாய்க்கனுஞ் சொல்லியே கேழ்க்க
சேத்தூருமுடி மன்னன் வணங்க நல்ல
சிவகிரி வன்னியன் கண்டு சந்திக்க
தலைவெட்டியம்மையன் வணங்க அந்த
வடக்கத்தான் புலிதேவன்[28] சொற்படி கேழ்க்க
தும்பிச்சி நாய்க்கன் வணங்க நல்ல
துடிவளருங் கலங்காதகண்டனும் வணங்க
ஒன்பதூர்க்களையான் வணங்க மதி
யூகியெனும் அப்பாஜிமறண்டவனும் நடுங்க
காஞ்தமலையர்களத்து ராஜன் ஏழு
காரானைகொடுத்தனுப்பிக் கப்பமுங் கட்ட
நானுவிதவிருது பாக்ஷிவணங்க நல்ல
நலங்கொண்டவனுவந்து சொற்படி கேழ்க்க
நத்தத்துலிங்கையன் வணங்க நல்ல
நம்மன்குரிச்சிப் பூச்சையன் சந்திப்புக்கண்டு
முத்தையன் மூப்பன் வணங்க நாளு
முனைகொடுத்த தென் மலைவன்னியன் வணங்க
இணங்காத வுத்தமன் வணங்க இப்படி
ஏழரைவருஷமிதிலிருந்தரசு ஆண்டேன்.[29]
வணங்காத பேரெல்லாம் வணங்க அந்த

சிவகங்கைத் தளவா க்குக் கடிதம்

மறவருடதளகர்த்தன்வணங்க வரவில்லை
அடிக்கிறேன் மறவன் மேல் சாரி[30] நாளை
பிடிக்கிறேன் திருப்புவனக்கோட்டையென்று சொல்லி
எழுத்தாணி கையிலேபிடித்து கானும்
இயல்பாக வக்கணையாயெழுதுகிறனப்போ
முடிமன்னன் சேதுபதிதளவா[30a] நல்ல
முனைவீர தாமோதரபிள்ளையே கேளும்
அரேபாய்தாமோதரம்பிள்ளை உன்னுடைய
அசையாதபள்ளிமடைகொடியைவிடுபாவி

---

28. வடக்கத்தான்—நெல்கட்டாஞ்செவல் பூலுத்தேவன்.

29. இங்கே ஏழு ஆண்டுகாலம் என்பது சரியல்ல. இரண்டு ஆண்டுகள் திருநெல்வேலியில் பாளையக்காரர்களோடு போர்புரிவதில் கழிந்தது. அவர்கள் அனைவரையும் அடக்கி மதுரையில் இருந்து கான்சாகிபு நவாபின் பிரதிநிதியாக ஆண்டான்.

30. தாக்குதல்.

30a. கடிதத்தில் எழுதுகிற கருத்து.

திருப்புவனம் விட்டுவிட வேண்டும் உன்னுடைய
சிவகங்கை மேல்கத்தியெடுக்கிறதேயில்லை
திருப்புவனம் கொடுக்காமற் போனால் நல்ல
சிவகங்கை மேல்சாரி வருவேண்டாவென்று

கடிதம் சென்ற விதம்[31]

வகைவிபரமாகவேயெழுதி அப்பா
பங்காரு நாய்க்கன் வசம் அனுப்பிவிட்டான்
வருகிறான் மணலூருதாண்டி அந்த
வகையான திருப்புவனகோவலூர் தாண்டி
சிங்காரமாகவே நடந்து நல்ல
சிவகிரி பொன்னுங்குளமதைத் தாண்டி
சிவகங்கைபேட்டைக்குள் நுழைந்தான் நல்ல
தீரனெனுந்தாண்டவன்கையில் கொடுத்தான்
விருப்பமுடனெழுதிய காயிதத்தை பாதர்
விறல்பெருகுசிவகங்கை மறவர்தளகர்த்தன்
காயிதவக்கணையைப் பார்த்துக் கோபந்
தான்மீறித்திருப்புவனக் கோட்டையில் வந்து
திண்டுதிமாசு மேற் சாய்ந்து நல்ல
திடமாகவேலையைச் சீராய் பிடித்து
தாண்டவராய தளமந்திரி கோபந்
தான்மீறி மறுநிருபந்தானெழுதினனே

தளவாயின் பதில்

வேண்டா மதுரை தானுமுல்லை நானும்
வேளாள னொருவுறுதி சொல்லுகிறேன் கேளு
நெல்லூர்சிராப் பளியிலிருந்து நீயும்
நேர்தெற்கே மதுரைக்கு வருகிறபோது
சொல்வார்கள் கும்தானென்று இப்போ
துடிவளருமதுரைக்குத் துரையானாய் நீயும்
மச்சினனென்று வுறவாடி உன்னுடைய
மாசாவைத் தங்கையென்றுறவாடியிருந்தேன்
முச்சீறுவுடுப்புநான் கொடுத்து உனக்கு
முதல்வரிசைமதுரைக்குக் கொடுத்தனுப்பிவிட்டேன்

---

31. கான்சாகிபுவிற்கும், தாண்டவராயனுக்கும் நடந்த விவாதம் கடிதப் போக்குவரத்து நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. இது நாட்டுப்பாடல் காவிய உத்திகளுள் ஒன்றாகும். உண்மையில் இத்தனை கடிதப்போக்குவரத்து நடக்கவியலாது.

மதுரையிலேயுனக்கு மகன்பிறக்க என்னுடைய
மாணிக்கச்சிவகங்கை சர்க்கரைவழங்க
எதிராதேநெஞ்சு துணிந்து கானு
என்னுடையதிருப் புவனங்கேழ்ப் பையோவென்று
எழுதியே காயிதந்தன்னில் அப்போ
இயல்பான சேவகர் கையில் கொடுத்தனுப்ப

பதில் கடிதம் மதுரைக்கு வந்தது

மதுரைகான் சாயபு கையில் கொடுத்தார் அந்த
மதயானே கான்சாயபு வாசித்துப் பார்த்து

கான்சாகிபு மறுபடியும் எழுதிய கடிதம்

மதிமந்திரிதாண்டவராயா கானு
மதயானே யொருவயணஞ் சொல்லுகிறேன் கேளு
வேலூரு விசலூரிலிருந்து நானும்
வீருகமதுரைக்குவந்ததின் பிறகு
எனேக் கண்டு வணங்காதபேரை தீயா
யெரித்து நிர்த்தூளிப் படலமாய் நொறுக்கி
மனேயூரு மாங்காய் பிடுங்கி நானும்
பத்துநிலேவழிப் பாதை மடிமாங்காய் போட்டு
ஒரு மாங்காயதிலே குறைந்தாக்கால் பாதர்
ஒன்பதுகாய் வட்டி வாங்கினேன்சிங்கம்
தருவோங்குஞ் சிக்கந்தர் மலேயில் பாதை
தன்னில் வெகு திரவியத்தை முடிந்து நானெறிந்தேன்
ஏழுநாளப் படித்தானே அதிலே
ஈயெறும்புமொய்க் காமலிருந்து தடாபணம்
நாளுமதிலேருது கரையான் அதிலே
நலியாது கருங்குருவி நாடாது பணத்தில்
அப்படியடித்தேன் துரைதானு எனக்கு
ஆரடாபணங் காட்டும் மறவனே யெதிரி
என்று சொல்லி கான் சாயபு நீலன் நன்ருய்
எழுதியே காயிதத்தை திருப்புவனம் அனுப்ப
வந்ததொரு காயிதந்தன்னே நல்ல
வரிசைபெறு வேளாளன் பார்த்தேது சொல்வான்

தளவாயின் இரண்டாவது பதில் கடிதம்

அடாயிப்படி சொன்னியே கானு நல்ல
தாகட்டுமொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
குடிக்கிறது பனங்காட்டுக் கள்ளு மறவர்
எடுக்கிறதுடல்கட்டு மொக்குவளே தடிதான்

அடிக்கிறது கரண்டக் கால் பார்த்து நாங்கள்
பிடிக்கிறது கொண்டைமயிர் தப்பாது சொன்னேன்
நாங்களடித்துப் பறியா விட்டால் எங்கள்
நலங் கொண்ட காடு மட்டு மடித்துப் பறித்திடுமே
தங்கியிங்கு வருக நினையாதே உன்னை
க்ஷணத்திலே வீசிடுவேனென்ருன்
இன்னம் பலபல சேதியெழுதி அவனும்
இயல்பாக வனுப்பினுன் மதுரைநகருக்கு

தளவாய் கடிதம் மதுரைக்கு வந்தது

வந்துதேமறவருட நிருபம் கானும்
வாசித்துப் பர்த்து மவனேது சொன்னுனும்

கான்சாகிபு மறுமொழி

இத்தனை வீரியஞ் சொன்னுல் பயலே
இனிமேலுங் கானுதுரை சொல்லுகிறேன் கேளு
வெத்திலை கொழுந்து கிள்ளுஞ்சாதி நீயும்
வேளாவள வம்மிசம் இல்லை[31a] மணிமார்பா
மேழிபிடித்துவுஞ் சாதி பாரில்
விளங்கவே யெழுத்தாணி பிடித்தெழுதுஞ் சாதி
நாளுங் கொடிக்கால் பார்க்குஞ் சாதி நீங்கள்
நதிகுல[32] மென்றேயிருந்த ராஜ்ஜியங்களறியும்
பட்டோலை யெழுதுமுங்கள் சாதி உனக்கு
படைவெட்டத் தெரியுமோ தாண்டவராயா
இப்படிக் கான்சாயப் பெழுதியனுப்ப அதற்கு
எதிர்நிருபமெழுதுகிருன் தாண்டவராயன்

தாண்டவராயன் பதில் கடிதம்

பட்டோலை யெழுதுகிறதென்று நல்ல
பரிநகுலதுரை கானு சொன்னையேவுன் வாக்கால்
மறநாட்டோலை யினுலுன்னை இந்த
மாமரத்துக் கிளையில் தூக்காமல் விட்டால்
சந்தரகுலமுத்து வடுகையர்[32] எங்கள்
சாமியுட வாசல் பிரதானி நானல்ல்

30.a சிவகங்கை தளவாய் வேளாளன். கான்சாகிபுவும் மத மாறுமுன் வேளாளன்தான். வேளாளச் சாதியை அவன் கேலி செய்கிருன்.

31a. நதிகுலம்—கங்கைகுலம் என்று வேளாளர் குலத்திற்கும் பெயர். அதையே ஆற்றின் பெயர் என்று கூறுகிருன். உழவவும் ஏட்டில் எழுதவும் பழகிய வேளாளன் வாள் பிடித்து போர்புரிய முடியுமா என்றுதான் கேட்கிருன்.

32. முத்துவடுகன்—சிவகங்கைப் பாளையக்காரன். வேலுநாச்சியார் கணவன். பிற்காலத்தில் மருதுசகோதரர்களை வளர்த்தவன். பிரிட்டிஷாரை எதிர்த்து பீரங்கியால் அடிப்பட்டு இறந்தவன்.

மீறு புகழ் வேளாளனல்ல சிங்கம்
விரித்ததுவும் தீவாசுக்கும் பளியு மல்ல
பிடித்ததுவு மெழுத் தாணியல்ல சிங்கம்
போட்டதுவும் தளகர்த்த மோதிரமல்ல
விசைய னெனுந் தாண்டவராயன் நிருபம்
எழுதியே யனுப்பிவிடக் கானுதுரைதானும்
வந்ததொரு காயிதந்தன்னை நல்ல
வரிசை பெரு கான் சாயபு பார்த்தேது சொல்வான்

கான் பதில் கடிதம்

இந்த மொழி சொன்னையே பயலே நானும்
இன்னமொரு சம்ரதாயஞ் சொல்லுகிறேன்கேளு
கர்த்தகளமர்ந்திருக்கு மேடை நல்ல
கருங் கல்லுச் சவுக்கைதனைப் பேர்த்துநான் பார்த்தேன்
பத்தாயந்தனிற் பண மிருந்து அதனில்
பதிவான பட்டயமு மெழுதி யிருந்துதடா
இரட்டை வெங்கலக் கதவு நிலைதான் அதிலே
நேராய் கிடக்கு தென்றெழுதி யிருந்துதடா
இதம் பெறவே சேனைகளைக் கூட்டி அந்த
எழிலான வெங்கலக் கதவு நிலை யெடுத்தேன்
கதவு நிலையாக வைத்தாண்ட ஆதி
கர்த்தாக்கள் முன்னதிலே போட்டுயிருந்துதடா
தென் புறத்து வரிக் கல்லு மேலே தேடி
திரவியமிருக்கு தென் றெழுதியிருந்துதடா
இதற்கு வகையே தென்று எண்ணி நானும்
இயல்பாக நானதிலே யோசனைகள் செய்து
ஐம்பதுபேர் தச்சர்களை யழைத்து நானும்
அரை க்ஷணத்திலாறு வரிக்கீழிறங்கி
திரவியத்தைப் பேர்த்தெடுக்கையிலே அதிலே
திசை மதுரை கர்த்தர் களெழுதியிருந்ததைக் கேள்
பரமேஸ்வரி மீனுளுக்கு கெதிரே வாயிற்
படியில் வெகு தங்கப்பாள மிருக்கு தென்றிருக்க
இப்போது திசை மதுரை மீனுள் தாயே
எனக்கிந்த திரவியத்தைக் கொடுக்க வேணு மென்றேன்
அப்போது திசை மதுரை மீனுள் எனக்கு
அறியவே யொரு வயணஞ் சொன்னதைக் கேளு
மலைக்காதே துரை கானு நீலா நானும்
வைத்திருந்த திரவியத்திலாசை யாயிருந்தால்

தச்சன்பிள்ளை பெண்பிறந்த மங்கை அவளும்
தலைச்சன்பிள்ளை யுண்டா யிருக்க வேணும்
பிராமணப்பெண் கொண்டுவந்து[33] எனக்கு
பொலிவெட்டிப் பொங்கலிட்டு கொடுப்பையேயானல்
திரவிய மிருக்கிறதை நீயும் கானு
திடமாயெடுக்க வென்றுவுத்தரவாச்சு
ஆகட்டுமென்று சொல்லி நானும் அப்போ
அன்பாக ஆள்விட்டு விசாரித்துப் பார்த்தேன்
நாலுபுறம் ஆள்விட்டுப் பார்த்தேன் அப்போ
நலங்கொண்ட சோழநகர் தன்னிலிருந்தாள்
எழுநூறு பொன்கையில் கொடுத்து நானும்
ஏழுபேர் சிப்பாய்விட்டு தள்ளிவரச் சொல்லி
நற்பொலி வாங்கிக் கோதேவி என்று
ராசாதி கையினல் வெட்டினேன் கானு
திரவியத்தைப்பேர்த் தெடுக்கையிலே அதிலே
செப்புநல்ல பட்டயமுமெழுதி யிருந்ததடா
புட்பவனம் திருப்புவனமும் உன்னுடைய
புகழானபள்ளியறை மதுரையுடன் சேர்க்கை
தேவர்கள் பூசைபண்ணுங் கோட்டை உன்னுடைய
திருமதுரைச் சேர்க்கையுன் திருப்புவனக் கோட்டை
சிவகங்கைபட்டனமும் நல்ல என்னுடைய
சீரானமதுரைக்குப் பண்ணைக்கிராமம்
வைடூரியந்தங்கம் விளையும் என்னுடைய
மாணிக்கப்பாத்திபனூர் மதுரையுடன் சேர்க்கை
திருச்சினப்பள்ளி மடையெல்லாம் முன்னே
திருமலைக்கர்த்தாக் களாண்டிருந்ததேசம்[34]
இப்படி விபரமாயிருக்க நீயும்
வீணிலே திரிந்தலைந்து போகவே வேண்டாம்
விட்டுவிடு தாண்டவராயா சும்மா
வீணிலே பழிபோர்க்க போகாது சொன்னேன்
எட்டுவருஷ காலமானலும் நானும்
எதிராடித் திருப்புவனம் வாங்குவேன் பாவி
என்றெழுதி அர்க்காடு[35] கையில் கானு
இயல்பாயனுப்பினன் திருப்புவனம் நோக்கி

---

33. புதையல் எடுப்பதற்கு முன் நரபலி கொடுக்க வேண்டுமென்ற நம்பிக்கை இன்னும் கிராம மக்களிடம் உள்ளது. பல கதைப்பாடல்களில் இத்தகைய சர்பவங்கள் கூறப்பட்டுள்ளன. பொலி—பலி.

34. இவன் சிவகங்கையிலிருந்து பிரித்து மதுரையோடு சேர்க்கவேண்டுமென்று கேட்கும் ஊர்கள் முன்பு திருமலைநாயக்கர் காலத்தில் மதுரையோடிருந்னவாம். அக்காரணத்தால் மதுரையைத் தற்காலம் ஆளும் தனக்கு அவை சொந்தமென்று உரிமை கொண்டாடுகிருன் கான்சாகிபு.

35. அர்க்காடு தூதன்.

தளவாயின் பதில் கடிதம்

வந்ததொரு காயிதந்தன்னை முல்லை
வேளாளன் வாசித்து யோசனைகள் செய்து
"என்னுடையராச்சிய மென்றறிந்து நீயும்
இப்படிக்கெல்லா மெழுதினையே துரையே
கனமான மகுடமுடி மன்னு முல்லை
காராளனொரு வார்த்தை சொல்லுகிறேன் கேளும்
மைத்துனன் கான்சாயுபு நீலா ஒரு
வார்த்தைநான் காராளன் சொல்லுகிறேன் கேளும்
மதுராபுரி பிறக்கையிலே கானு எங்கள்
மகாபுனலிங்க மது கூடப் பிறந்ததடா
சதுர்மதுரைக் கோட்டை பிறக்கையிலே மறவர்
சமஸ்தானங்கூடப் பிறந்த தடாகானு[36]
மதுராபுரிக் கோட்டையிலே இதுவும்
மறவருடமண்ணி தென்பார் கேட்டுக் கொள்கானு
முடிக்கிறாய் சம்பரதாயம் வீணில் செம்பொன்
முடிமன்னன் திருப்புவனக் கோடிவருமோ
குடிக்குமோ பூனை யந்தப்பாலை அதனைக்
குடிக்கவென்று நினைத்தாலும் வலதுகாலாலே
தட்டிக்கவிழ்த்திடு வேன்கானு உன்னுடைய
சம்ப்ரதாயங்களை நிறுத்திவிடு சொன்னேன்"
மன்னனெனுந் தாண்டவராயன் எழுதி
மதுராபுரிதனக் கனுப்பி விட்டானப்போ

கான்சாகிபு பதில் கடிதம்

வந்ததொரு காயிதந்தன்னை அந்த
வள்ளலெனுங் கானுதுரைப் பார்த்ததேது சொல்வான்
" அரேபிள்ளை தாண்டவராயா அந்த
ஆண்பிள்ளை கான்சாயபு சொல்லுகிறேன்கேளு
கெட்டியா யிவ்வயணஞ் சொன்னாய் சிங்கம்
கிரீடிநான் துரை கானு சொல்லுகிறேன்கேளு
சிந்தையுடன் முல்லைமணிமார்பா அந்தத்
திருப்புவனங் கொடுப்பதில்லை யென்றாயேபாவி
வந்து நிர்த்தூளியா யடித்து திருப்பு
வனம் வாங்கி சிவகங்கை கம்பளி விரித்து

---

36. மதுரை ராஜ்யம் உண்டாகும் பொழுதே மறவர் பாளையங்களும் தோன்றி விட்டதாகத் தளவாய் சொல்லுகிறான். இது வரலாற்று உண்மையல்ல.

கெடித்தல மெல்லாங் கொள்ளையடித்து உன்னுடைய
அங்காளம்மன் கொத்தளத்தில் வைக்காவிட்டால்
வீராதி வீரரண சூரன் ஜன்னல்[37]
வெள்ளைக்காரன் வார்த்தெடுத்த பிள்ளையே நானும்"
மாலான கான்சாயபு நீலன் தனது
மைத்துனன் தாண்டவராயனுக் கனுப்ப
வந்ததொருகாயிதந்தன்னை அந்த
மன்னனெனும் வேளாளன் பார்த்தேது சொல்வான்

தளவாய் பதில் கடிதம்

"போராடத் துணிந்தியே நீகானு நல்ல
புலிகுட்டியொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
திருப்புவனங் கோட்டை யேயானால் வடக்கே
திருச்சினப்பள்ளிக் கோட்டை சீராய் நடந்து
பருப்பதப்பொன் வெள்ளி யிறங்கி நம்மிட
பாட்சா நபாபு தன்பேட்டி நான் செய்து
லாட்டு மேலாட்டையு[38] மழைத்து நல்ல
நலமான நீர்[38a] மேல் நெருப்பையு[39b] மழைத்து
வாட்டமுடன் அலம்பியைக் கூட்டி கர்னல்
மாட்டியன்[40] மேஜர்துரை ஜன்னலை யழைத்து
சின்னப்பிரட்டனையுங் கூட்டி நல்ல
கேமல்துரை முகியாப் பறங்கியை யழைத்து
ஜென்னல் வெள்ளைக்காரனையுங் கூட்டி
ஜெயம் பெற்ற பிரட்டனையுங்கையோட யழைத்து
முப்பது பட்டாளத்தைத் திரட்டி நல்ல
முடிவேந்தன் வண்டியூரில் கூடாரமடித்து

தளவாயின் சபதம்

ஐப்பசி மாதத்திற்குள்ளாக உன்னை
அணியான புளியமரச் சோலையில் தூக்காவிட்டால்
நரகுலசிங்கம் நானல்ல பெரிய
நாலுகோட்டை தளகர்த்தனல்ல கானும்

---

37. ஜனரல்

38. லாட்டு, மேலாட்டு – பிரபுக்கள்.

38a நீர்—watter (இதனை watter என்று கருதி மொழி பெயர்த்துள்ளார்)

38b Agnew—இதை அக்கினி என்று கருதி நெருப்பு என்று மொழி பெயர்த்துள்ளார். நகைச்சுவை தோன்ற இவ்வாறு கூறினர்.

39. அலம்பி—ஆலன்பி Allenby, ஆங்கிலேயன் பெயர்.

40. மார்ட்டின் Martin.

தேவர் புகழ் முத்துவடுகைய ராச
சிங்க மகிழதிகாரி நானல்லகானும் ”
எழுதியே கான்சாயபுக்கனுப்ப. நல்ல

கடிதம் கண்டு கான்சாகிபு சொல்வது

இயல்பான கான்சாயபு பார்த்தேது சொல்வான்
வடக்கே நான் போறேனென்று சொல்லி மெத்த

பதில் கடிதம்

வலுவாகச் சொன்னியே நீ தாண்டவராயா
வடக்கேயு மென்னுடைய மனிதன் அதிலே
வரிசையுடனிருக்கிறான் துரை பெரியபிரட்டன்
பிரட்டனொரு தலையிருக்கு மட்டும் சிங்கம்
பிடிப்பாண்டா யெப்படியுந்திசை மதுரைக்கோட்டை
பிரட்டனொரு தலைபிளந்து போனால் நாளை
பருந்தெடுத்த குஞ்சல்லோ நபாபுசாயபு[41]
திருச்சினாப்பள்ளி கோட்டை முதலாய் அடித்துத்
திசை கம்பநாட்டியே தோரணங்கள் கட்டுவேன்
துரைசிங்கம் சமர்த்தை யறியென்று நல்ல
துடிவளரும் துரைகானு வாக்காலே சொல்லி
சொன்னதொரு சேதிகளையெல்லாம் கானு
துடியாகக் காயிதத்தில் கண்டேயெழுதி
வரவிட்டான் சாயபு நீலன் நல்ல
மங்கையர் வேள்தாண்டவன் மனதிலுட் கொண்டு
இன்னமொரு யோசனைகள் செய்து நல்ல
இதமுடனே வேளாளனேது சொல்வானும்
கங்கைகுல தாண்டவராயன் நல்ல
கன்னிமாசாவின் மனதறிய வெண்ணி

மாஷாவிற்குத் தளவாய் கடிதம்

“தங்கச்சி மாசாவே கேளு உனது
தன்கணவன் சேதிகளை கேழ்க்கிலையோ தங்காய்
திருப்புவனங் கேழ்க்கிறான் தங்காய் உன்னுடைய
செல்வமுள்ள பாத்பதினார் கேழ்க்கிறான் தங்காய்

---

41. பிரிட்டன் என்ற தளபதியின் துணையில்லாவிட்டால் நவாபு முகம்மதலிக்கு வலுவில்லை என்று கான்சாகிபு சொல்லுகிறான்,

திருப்புவனம் விட்டுவிடுவேன் நாளை
சிவகெங்கை குடியிருப்பு நிலைக்க வொட்டான் கானன்"
என்றெழுதி காயிதத்தையனுப்ப நல்ல
இயலான மாசாவும் பார்த்தேது சொல்வாள்

மாஷாவின் பதில்

"அண்ணே நீ தாண்டவராயா தங்கச்சி
அன்பாகவொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
சிங்கத்தின் குட்டி நீயண்ணே இதற்குச்
சிந்தைதனிலே நீங்கள் கவலை கொள்ள வேண்டாம்
தங்கையாய் நானிருக்கும் போது உந்தன்
தலை சீமைக்கொரு நாளும் அழிவுவராது
சொல்லியும் கானுதுரை வந்தான் எனக்குத்
தோரணச் சீட்டெழுதித் தருகிறேனெ"ன்று
பவளம்போல் சிவந்திடுவாயால் நல்ல
பைங்கொடி யெழுதினதை தாண்டவராயன்
பார்த்துமன மகிழ்ச்சியாயிருந்து நல்ல
பண்பாகச் செங்கோல் செலுத்திவரு நாளில்
மதுரைநகர் கான்சாயபுதுரையும் அப்போ
மண்டலிகன்[42] யோசித்துயேது செய்வானும்

மாஷாவிடம் கான்சாகிபு கூறுவது

ஏழுமணி வேளையிலேகானு அப்போ
எழுந்திருந்து மாசாவினரண்மனைக்குள்வந்து
முடிமன்னன் துரைகானு சாயபு நல்ல
மோசமி குமாசாவை யேறிட்டுப் பார்த்து
"அடிபெண்ணே துரைமகளே மாசா கானன்
ஆண்பிள்ளையொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
மலையாளம் பார்த்து வரவேணும்" பெண்ணே
மன்னுரு கோவிலும் பார்த்து வரவேணும்
இப்படி கானுதுரை சொல்ல மாசா

மாஷாவின் பதில்

ஏறிட்டுப் பார்த்தவனுக்கேது சொல்வாளாம்
"மலையாளம் போய் பார்த்த பேர்கள் அங்கே
மாண்டவர்களல்லாமல் மீண்டவர்களில்லை

---

42. மண்டலிகன்—மதுரை மண்டல அதிபதி. 'சுபேதார்' என்று நவாபு அரசாங்கத்தில் அப்பதவியின் பெயர்.

வேசிபெருத்ததுவு மதுரை நல்ல
வெள்ளாட்டி பெருத்ததும் தட்சணபூமி
வாசமுடனென் முகம் பாராமல் சாமி
மறுமுகம் மதுரையிலே பார்த்த காலத்தில்
மதுராபுரி கோட்டையு மாண்டு நீயும்
வயணமாய் செங்கோல் செலுத்தவுமாட்டாய்
எதிராடி வடக்கே பகையாதே நமது
ஈஸ்பர நபாபுதுரை சேதி தெரியாதோ
மேற்கே பகையாதே துரைமகனே அந்த
விருதுபெற்ற ஐதரென்றால் பொல்லாதவண்டன்[42a]
ஏற்கவே தெற்கே பகையாதே அதிலே
ஏழுதண்டிக்கைக்காரர் பொல்லாத போக்கர்[42b]
கிழக்கே பகையாதே துரைமகனே அந்தக்
கீழ்க்காட்டு மறவருட சேதிதெரியா தோ
பழக்கமாயிரு பேருமிருந்தால் நாளும்
படைமதுரைக் கொருநாளு மெதிரொருவரில்லை"
என்றுமாசாவும் புத்தி சொல்ல கானு
இயல்பாக மறுத்துமவனேது சொல்வானும்

கான்சாகிபு கூறுவது

"இப்படி சொன்னயடி பெண்ணே கானு
இன்னமொருசம் பிரதாயஞ் சொல்லுகிறேன் கேளு
டப்பைப் பாளையக்காரர் வணங்க விருது
ராஜகேசரியென்று ராஜாதிரையளக்க
முனேகொடுத்த பறங்கிமலை கோட்டை தன்னை
மூன்று நாளை பொழுதில் வாங்கினேனுனும்
பனங்காட்டு மறவனெனக் கெதிரோ நானே
பார்க்கிறேனவன் சமர்த்தை பாரடி பெண்ணே
பன்னிரண்டு வருஷமானாலும் நானும்
பார்த்திபனூர் திருப்புவனம் பிடித்திடுவேனெ"ன்று
துடிநகுலன் கான்சாயபு சொல்ல அப்போ

மாஷா கூறல்

திலோர்த்தமை யெனும் மாசாயேது சொல்வாளாம்
இனியொருவரு மெதிரில்லை யென்று நீரும்
இப்படி சொல்லலாமோ கான்சாயபு துரையே
இலங்காபுரிக் கோட்டை யாண்டு முன்னே
இருந்தானே ராவணன் பத்து சிரசோடே

42a. முரடன் 42b. போக்கிலிகள்

துளங்கு மகாமேருதனை யெடுத்தான் அவன்
துடியான வாழ்வெங்கே போய்விட்டான் துரையே
கற்புடைய சீதா தேவியினுல் இலங்கைக்
காவலழிந்ததைக் கேட்கலை யோதுரையே
அப்படியே மறவரும் பகைத்தால் நம்மிட
ஆதீன[43] ந்தப்பாமலெடு படுஞ்[44] சொன்னேன்
மறவனென்ருல் பெரிய வீட்டுக்காரன் அதிலே
மறவனென்ருலுடன் பிறந்த பிறவிதானெனக்கு
மறவர் மேற்படை யெடுப்பையானல் நானும்
மங்கிலியங்களைந் துந்தன் மடியின் மேற்போட்டு
மைந்தனையுங் கையோடே கூட்டி நாளை
மலையாளம் போய்விடியச் சேருவே னெ"ன்று
மாசாவுங் கோபமாய்ச் சொல்ல நல்ல
மதுராபுரிகானுதுரைய ரண்மனைபோய்ச் சேர்ந்தான்
நடந்ததோர் சேதிகளனைத்தும் மாசா
நலமாக வெழுதியே தாண்டவனுக்கனுப்ப
வஞ்சியர் வேள்தாண்டவராயன் அப்போ
மாசாவின் காயிதத்தை வாசித்துப் பார்த்து
அன்னேரம் வரிசையுடுப்புகளை நல்ல

தளவாய் மாஷாவுக்குப் பரிசுகள் தயாரித்தல்

அன்புடன் மாசாவுக்கனுப்ப வேணுமென்று
முன்னூறு வுலப்பை மணிசெய்து நல்ல
முடிமன்னன் கைகொலுசு பொன்னுலே செய்து
வெள்ளியாலுரிக்கயிறு செய்து நல்ல
விலைமதியாவுரிக்கலையம் பொன்னுலே செய்து
அள்ளியதில் சீனிசர்க்கரை போட்டு நலமாய்
அடுக்கியிருபதுவுரியும் அழகாகச் சேர்த்து
மங்கையவளிருந்து விளையாட நல்ல
தங்கத்தால் பல்லாங் குழியொன்று செய்து
தங்கத்தால் பலகணை செய்து நல்ல
தங்கத்தால் ஈர்க்கொல்லி பொன்னுலே சீப்பும்
மாசாவுக்குச் சீனத்துரவிக்கை நல்ல
வச்சிரமணி மூக்குத்தி பொன்னிருற்செய்து
மாசாவின் மகனுக்கென்று சொல்லி நல்ல
வயிடூரியக்குல்லாவில் வச்ரரேககல்லழுத்தி

43. ஆதீனம்—ஆட்சி.
44. எடுபடும்—கலைந்துபோகும், ஒழிந்துபோகும்.

கானனுக்கு முத்தாலே அங்கி வச்சிரக்
கல்லிழைத்த மோதிரமுங்கனக்கவே செய்து
முளகுசம்பா நெல்லரிசிதனிலே நல்ல
மூவைந்து பதினைந்து பொறியதுயிடித்து
அழகு சீரகசம்பா நெல்லில் அப்போ
ஆரேழு மரக்காலைய வலிடிக்கச் சொல்லி
சரியாகச் சர்க்கரை கலந்து நல்ல
தளமானயாழ் பாணபட்டு மெடுத்து
இருநூறு பொன் பெற்றபட்டு ஒரு
இழையிழைக்குச் சரிகையினல் குச்சுகள்கட்டி
பாற்பகவு பாலாடு நடத்தி நல்ல
பண்பான செங்கரும்பு கண்டு பனிரெண்டு
சேல்போலும் விழிமாசா மகிழ மதுரை
திசைநோக்கி னுப்பினன் தாண்டவராயன்

பரிசுகள் வருவதை கான்சாகிபு அறிந்தது

வருகுது மறவரிட வரிசை என்று
மதுரைதுரை கான்சாயபு காதினற் கேட்டு
தெருவீதி மேடை நடந்து கானு
திருமலை கர்த்தாக்கள் சாவடியுந்தாண்டி
சித்திரக் கற்கூடமுந்தாண்டி கானு
தேவடி விட்டரண்மனைச் சாவடியுந்தாண்டி
கர்த்தாக்களமர்ந்திருக்கு மேடை அந்தக்
கருங்கல்லுச் சவுக்கையி லொயிலாகச் சாய்த்து
நரசிம்மநாய்க்கனை யழைத்து நல்ல
நரசப்பன் குருவப்பனை வரவழைக்கச் சொல்லி
திறமிகு கான்சாயபு நீலன் அந்த
சீனிச்சிராவ்[45] முரசு வெள்ளைக்காரனை யழைத்து
படேபடே சாய்பையுமழைத்து மல்லி
நாய்க்கன் சேகரியை வரவழைக்கச் சொல்லி
தடமதனன் முத்தழகுபிள்ளை நல்ல
சண்முக வேலாயுதமுதலியை மழைத்து
தானப்பநாய்க்கனை யழைத்து நல்ல
தளவாய் முதலி தன்னை வரவழைக்கச் சொல்லி

45. சீனிச்சிராவ்—சீனிவாச ராவ். உயர்தர அதிகாரி. முரசு வெள்ளைக்காரன்–மார்ச்சஞ்த் என்ற பிரெஞ்சுக்காரன்-பீரங்கி செய்வதற்காக அழைத்து வரப்பட்டவன். வேறு பெயர்கள் கற்பனைப் பெயர்களாகத் தோன்றுகின்றன. அவை வரலாற்றுச் சான்றுகளில் காணப்படவில்லை.

வாய்த்ததொரு மீனாட்சியையன் தனையும்
வகையாகச் சீக்கிரங் கூட்டிவரச் சொல்லி
பனிரெண்டு துரைமாரைப் பார்த்து, கானு

படையெடுப்பை அறிவித்தல்

படைமதுரைச் சாவடியில் சாய்ந்திருந்து கொண்டு
"நாளை பனிரண்டு மணி வேளைக்கெல்லாம் அந்த
பாங்கானதிருப்புவன மேற்படைகள் பயணம்
நாளைக்கு மறவன்மேல் சாரி என்று
நம்முடைய சேனைகளுக்குறுதி சொல்லுமெ"ன்றான்
அந்த வேளைதனில் மறவருட வரிசை அதுவும்
வீறாக வண்டியூர் செங்கையிலிறங்கி
தூதுவனை முன்னாலேயனுப்ப அவனும்
துரிதமாயோடி வந்து மாசாவுக்குச் சொன்னான்
இது சேதி மாசாவுங் கேட்டு பர
மேஸ்பரி மீனாட்சியை மனதிலே நினைத்து
சந்தோஷமாகியே மாசா அவளும்
தயாராகிபாப்பாசு காலுக்கணிந்து
மகனையுங்கக் கத்திலிடுக்கி மாசா
வருகிறாள் ராணுவச் சாவடி கடந்து
சின்னக் கடையுங்கடந்து கானு
தேவடிவிட்டாள் மனைச்சாவடியுந் தாண்டி
சேர்ந்த கோபுரவாசல் தாண்டி இந்த
செகமகிழ்ந்துவிடும் வடக்கு வாசலுந்தாண்டி
மடல் வாழைக் கனிசொரியும்துறை அந்த
வையையாற்றுக் கரையில் வந்து நின்றுகொண்டு

மறவர் பரிசுகளை மாஷா கண்டது

உடுப்புவகை வரிசைகளை யெல்லாம் மாசா
உத்தர ஆற்றுவெளி கொண்டுவரச் சொன்னாள்
வருகுதே மறவருட வரிசை அது
வந்திருக்கும் வேடிக்கை சொல்லமுடியாது
அதிசயத்தைக் கண்டுகுளிரப் பார்த்து மாசா
அகமகிழ்ந்து மாணிக்கப் பெட்டியைத் திறந்து
மாசாவும் வரிசைகளையெடுத்து அப்போ
வகையுடனே கண்ணாலே யேறிட்டுப் பார்த்து
மாணிக்கப் பெட்டியைத் திறந்து அந்த
வச்சிர மணிகுல்லாவை மகன் தலையில் வைத்து

கானனுக்சனுப்பியே முத்தங்கி அதையுங்
கனமாக வொருதட்டில் தானெடுத்து வைத்து
தங்கத்தின் தொட்டிலே யெடுத்து அதிலே
தன்மகனைச் சற்றுநேரம் போட்டாட்டிப் பார்த்து
தனக்குத் தந்த முத்துர விக்கை எடுத்துத்
தான் பூட்டிக் கண்ணாலேதானழகு பார்த்தாள்
செப்பரிய மூங்கிற் குழாய் திறந்து மாசா
சீனத்துப் பட்டெடுத்து தானுடுத்திக்கொண்டு
இப்படியுடுப்புகள் வந்ததற்கு இனி
என்னதான் சொல்லுவாரோ பாதகன் கானன்
என்மனது போலயடி மீனாள் தாயே
இருக்கவேணுங் கானனுட மனதென்று சொல்லி
நன்மைதர வேணுமடி மீனாள் கானன்
நல்லவாக்கு சொல்லவேணு மீனாட்சி[46] யென்று
நடந்து வந்தாளப் போதுமாசா கானு
ராசாதிபதி முன்னேவரும் வேளைதனிலே

கான்சாகிபு கோபம்

கானகத்துப் புலிபோலச் சீறி கானன்
கண்சிவந்து பொறிபறக்கப் பார்த்தேது சொல்வான்
"ஏதடி புதுச்சேரிப் பெண்ணே உனக்கு
இத்தனை யுடுப்புகள் கொடுத்தவர்களாரு
கனகோபமாகவே கேட்டான் அப்போ
கன்னியவள் மாசாவுமேது சொல்வாளாம்
ஆண்டவனே துரைகானுசாய்பே எங்கள்
அண்ணன் தாண்டவராயன் கொடுத்தனுப்பி வைத்தான்
மாஷாவு மிதுசேதி சொல்ல அப்போ
மதனதுரைகான் சாயபுயேது செய்யலுற்றான்
மகன்தலை யிலிருந்த குல்லாவை கானு
வாங்கிவரச் சொல்லிரண்டு கல்லையுங் கழட்டி
உகந்த சராப்பை[47] யழைத்து இது
ஒரு கல்லுவிலையென்ன பெறுமென்று கேட்டான்
"அரண்மனை விலையாக விற்றால் ஒன்று
அறுநூறு பொன்னுக்கு வாங்கலாங்கல்லை

46. மாஷா, கத்தோலிக்க கிறித்தவச்சியாயிருந்து முஸ்லிம் ஆனவள். அவள் மீனாட்சியை வணங்கியிருக்கமாட்டாள். ஆனால் கதை கேட்பவர்கள் இந்துக்கள். எனவே பாடகர் மாஷா மீனாட்சியை நினைப்பதாகச் சொன்னார்.

47. ஷராப்—தங்கம், முத்து, வைரம் முதலிய பொருள்களின் விலையை மதிப்பவன்.

இருகல்லுங்கூடி விலையில் விற்ருல் ஒவ்வொன்று
ஏழுநூறு பொன்னுக்கு விற்கலாமெ"ன்ருன்
இப்படி கல்விளையுந் தேசம் அங்கே
இருக்குதோ மறவருட புவனத்திலவுண்டி
இப்படி கல்லு பெருத்தா லவுண்டி
என்பேச்சை எள்ளளவுங் கேள்ப்பானே அவன்தான்
அடிக்கிறேன் மறவன்மேல்சாரி நாளை
பிடிக்கிறேன் திருப்புவனக் கோட்டைதனை பாதர்
முடிக்கிறேன் சம்பிரதாயம் லவுண்டி என்று
முழுநீல கானுதுரை தழுவணையிற் சாய்ந்தான்

மாஷா கூறல்

பொருப்புலவுந்துரை கானுசாய்பே உந்தன்
புகழ்பெற்ற மனையாட்டி சொல்லுகிறேன்கேளு
திருப்பூவனம் வேணுமென்று கேட்டால் நானும்
ஸ்ரீதனம் போல வாங்கித் தருகிறேனென்ருள்
இப்படி மாசாவுஞ் சொல்ல அப்போ
இயல்பாக கான்சாயபுயேது சொல்வானும்

கான்சாகிபு கூறல்

பெண்சாதி மானியந்தனிலே லவுண்டி
பதம் பெற்றதுரை கானு ஆள்வேனே தேசம்
நாளைக்கேயொரு பளித்தா தீர்த்து நானும்
வாங்குவேன் திருப்புவனக் கோட்டை நான்சிங்கம்
மண்டியே வொரு பளித்தா தீர்த்து நாளை
வாங்குவேன் மறவருட பாத்திபனூரென்ருன்,
மாலான கானுதுரைசொல்ல நல்ல
மங்கையர் சிகாமணி மாசாவுக்கப்போ
கோபங்கள் சொல்லமுடியாது மாசா
குவளை விழி சிவப்பேறிச் சபைதனிலே நின்று
"இராவணனய் நீவந்து பிறந்தாய் அதற்கு
இராமசாமியாகப் பிறந்திட்டான் மறவன்
சூரனய் நீவந்து பிறந்தாய் சிவ
சுப்பிரமணியராகப் பிறந்திட்டான் மறவன்
கோரமிகு கஞ்சனய்ப் பிறந்தாய் அவனைக்
கொன்றதோர் கிருஷ்ணனய்ப் பிறந்திட்டான்
மறவன்[47a]

47a. புராணங்களில் கதாநாயகர்களான தெய்வங்களின் எதிரிகளை வரிசைப்படுத்தி கான்சாகிபுவுக்கு உவமையாக மாஷா கூறுகிருள். இது போலவே மதுரா விஜயம் என்னு ் நூலில் கங்காதேவி மதுரை சுல்தான் களை புராணங்களின் வரும் அசுரர்களுக்கு ஒப்பிடுகிருள்.

துரியோதனனுகப் பிறந்தாய் குரு
தேசிகன் தருமரைப் போல் பிறந்திட்டான் மறவன்
அரிய கீசகன் போலப் பிறந்தாய் அதற்கு
அதிவீரன் வீமனைப்போல் பிறந்திட்டான் மறவன்
திறல் விஜயன்போல் மறவன் பிறந்தான் அதற்குத்
துரியோதனன் போல் பிறந்தாய் திசைமதுரை காக்க
ஆரோடே பகைத்தாலுமுனக்கு துரையே
அவர்களா லொருநாளுந் தாழ்வு வராது
மறவருடன் பகைத்தகாலத்தில் இந்த
மதுராபுரி மண்ணுனக்குத் தக்காது சொன்னேன்
மறவனென்ருல் பெரிய வீட்டுக்காரன் மறவன்
மந்திரி வெள்ளாளன் வெகுதந்திரக்காரன்[48]
வெள்ளியாய் முளைத்தாலுமுளைப்பான் அவனும்
வேந்தனுய் முளைத்தாலு முளைப்பான் வேளாளன்
வெள்ளியெதிராகப் போனுலும் அந்த
வெள்ளாளனேடு மட்டுமெதிர்க்காதே வேண்டாம்
காராளனுக்கருமை தெரியாது நமது
கருவையறுத்திடுவான் தாண்டவராயன்
மாசாவுமிப்படிச் சொல்ல கானு

கான்சாகிபு கூறல்

மன்னவனுங் கண்சிவந்து யேது சொல்வானும்
"அடுப்பூதத் தெரியுமாலவுண்டி உனக்கு
ஆஸ்தான சங்கதிகள் தெரியுமோ பெண்ணே
சோருக்கத் தெரியுமடி பெண்ணே" உனக்கு
துரைகளுட சம்பிரதாயம் தெரியுமோ லவுண்டி
கஞ்சிகாச்சத் தெரியுமடி பெண்ணே உனக்குக்
காவலர்கள் கெடிஸ்தலங்கள் தெரியுமோலவுண்டி
மிஞ்சிப் பேசுவதோ லவுண்டி இத்தனை
வீரியங்களேதடி புதுச்சேரிப் பெண்ணே

மாஷாமீது கான்சாகிபு கோபித்தான்

உருவியே தங்கமாஷாவை கோபித்து
உறைவிட்டு மாஷாமே லெறிந்திட்டானப்போ
இருபது பொன்சகலாத்து மருந்து நல்ல
இளந்துடையில் மாசாவுக்கு காயங்களாச்சு

---

48. மறவர்கள் வீரர்கள்—மறவர் மந்திரியான தாண்டவராயன் தந்திரீ என்று மாஷா கூறுகிருள்.

முசுரேடே பேசமுடியாது என்று
முகந்திருப்பிமாசாவும் வெளியிலேவந்து
அசுமான கிரிதனிலே நின்று மனதி
லன்பாகமாஷாவும் யோசனைகள் செய்து
துரோகியிநன்மை யெல்லாமறிந்தோம் மதுரை
தேவி நன்மையினியறிய வேணுமென்று

மீனாட்சிக்குச் சிறப்புச் செய்தல்

வராகி செகசோதி கௌமாரி மதுரை
மகமாயி சன்னதிக்கு திக்குவந்தனைகள் செய்து
எண்ணூறு பொன்னெடுத்துக் கொடுத்து மதுரை
ஈஸ்பரி மீனாட்சிக்குச் சிறப்பு செய்யச் சொல்லி
முந்நூறு குடந்தண்ணீர் கொண்டு வந்து
முழுகியே மாசாவும் பட்டுடையுடுத்தி
மந்தாரை முல்லையிருவாட்சி நல்ல
மகிழம்பூ செவ்வலரி மாலைகளணிந்து
நந்தா குடமல்லிதரித்து நல்ல
நளினி மிகுபுனுகு சவ்வாதுகள் தானணிந்து
சதுராகக் கோபுரங்கடந்து மீனாள்
சந்நிதியில் மங்கையர்கள்தான் சூழவந்து

மாஷாவின் பிரார்த்தனை

திருமலைக் கர்த்தாக்கள் நாட்டில் ஆயி
தேவியாய் வந்தவளே பாண்டியன் மகளே
சாதியிலே புலைச்சிநான் தாயே உந்தன்
சந்நிதிக் கெதிராக வருகிறேனடியாள்
மாடுதின்னும் புலைச்சி நான் வாரேன் என்று
மனதிலே யெள்ளளவுங் கவலை வைக்கவேண்டாம்
கொஞ்சமாய் மனதிலே நினைந்து ஆயி
கோபித்துக்கொள்ளாதே பாண்டியன் மகளே
வஞ்சக மனதில் நினையாதே பெற்ற
மாதாவு நீயுந்தான்மதலை நானடியாள்
துரைகானு பங்கிலே நீயிருந்தால் எனக்கு
துடியாக வலதுபுறஞ் சொல்ல வேணுந்தாயே
இரவிகுல[49] மறவர் பங்கிலிருந்தால் எனக்கு
இடதுபுறஞ் சொல்லென்று கேட்டாளே மாசா

49. மறவர்குலம் ஆரிய குலம் என்று மாஷா சொல்கிறாள்,

தென்புறத்தில் சொல்லாதபடிக்கு மீனுள்
திருவிருப்பில் இடதுபக்கங் கெவுளியது சொல்ல
என்மனது போலேயடி மீனுள் தாயே
இருந்ததுவுன் மனது பாண்டியன் மகளே
என்று சொல்லித் திரும்பியே மாசா தனது
எழிலான மாளிகையினுள் வந்துசேர்ந்து
விரும்பி துருமர்க்காரமுத்தை அழைத்து
மிக்கதள கர்த்தனுக்கு விரைந்தெழுதலுற்ருன்

மாஷா தாண்டவராயனுக்கு எழுதிய கடிதம்

ஆடுமாடு பதனமடா அண்ணே உனது
ஆண்டவன் துரைமகன் பத்திரஞ் சொன்னேன்
மாடுதின்னும் புலேச்சி நானண்ணே என்னே
மார்க்கமாயுற வென்று நம்பினேயே அண்ணே
சொல்லாத சேதியெல்லாஞ் சொன்னேன் அந்தத்
துரைமூடன் கானனுக்கு விசுவாசமில்லே
பொல்லாத முழுமூடன் கானன் நானும்
புத்தி சொன்னுல் கேழ்ப்பானே கேழ்க்கவேமாட்டான்
கானனே ஜெயித்திட்டாலண்ணே உனக்கு
கலக்கங்க ளொன்றுமில்லே முல்லே மணிமார்பா
குறிப்பாக வெள்ளம் வருமுன்னே அணே
கோலிக்கொள் வடக்கு சென்று நபாபிடத்திற் சொல்லு
என்னே நம்பி நீயிருக்க வேண்டாம் உனக்
கியன்றபடியார் முல்லேத் தாண்டவராயா
மனதுரம்மியமாக வெழுதி மடித்து
மாரியர்க் கார்கையில் கொடுத்தனுப்பி வைத்தாள்
மாரியெனும் அக்காரும் வாங்கிக் கொண்டு
மணலூருதாண்டியே திருப்புவனஞ் சேர்ந்து
மண்டலீசன் கொலுவுக்கு முன்னே வைத்து
வசையாகச் சேதி சொல்லி கும்பிட்டு நின்ருன்
மாசாவின் காயிதத்தைப் பார்த்து அந்த
மந்திரி தாண்டவராயன் சந்தோஷப்பட்டு
மருமகனே கைலாசப்பிள்ளே தங்கை
மாசாவின் காயிதத்தை வாசியென்று சொன்னுள்
மருமகனுங் காயிதத்தை வாங்கி அய்யோ
வாசிக்கத் தளகர்த்தன் காதாரக்கேட்டு

தாண்டவராயன் சிந்தனே

சிங்க மேயர்க் காரமாரி
    சேதி நான் வேளாளன் சொல்லுகிறேன் கேளும்
தங்கச்சியென்றல் லோயிருந்தேன் எனக்குச்
    சத்ராதியானு[50] ளேதிசை மதுரை மாசா
மைத்துனன் என்றல் லோயிருந்தேன் எனக்கு
    மாத்தானுய் வந்தானே மதுரை திசைகானன்
துரிசா[50a] உன்னுறவு பகையாச்சே என்று
    சொல்லு போமோ சாவுக்குள்ளே பலிமாறி
இனிமேலுந் திருபுவனமிருந்தால் நம்மை
    இருக்கொட்டான் வடக்கே தானடக்க வேணுமென்று
தனிவீர தாண்டவராயன் அந்த
    க்ஷணத்திலே பயணமென்றுதன் சேனேக்குரைத்து
மாப்பிள்ளே சுப்ரமண்ய தேவா ஒரு
    வார்த்தைநான் வேளாளன் சொல்லுவேன் கேளு
தப்பாமல் திருபுவனந்தனிலே நீங்கள்
    தயாராயிருக்க வேணுங் கானுதுரை வருவான்

தளவாய் ஆற்காடு செல்லுதல்

ஆற்காடு போரேன் தம்பி ஆறு
    மாசமோ ஆறுவருஷமோ தெரியாது
மார்க்கமாய் நான் வருமட்டும் நமது
    மறவர் திருப்புவனம் பத்திர மென்று
உறுதிகளும் வெகுவாகச் சொல்லி அந்த
    உத்தமனுங் குதிரைமேல் சீனிவைத்தேறி
நடந்திட்டான் தாண்டவராயன் அந்த
    நாழியிற் சிவகங்கைப் பேட்டைவந்து சேர்ந்தது
தடம்பரவும் பொன்மலர் செய்து நல்ல
    தங்கமலர் வெள்ளிமலர் தன்கையிலெடுத்து
விருதுரண பேரிகை முழங்க குதிரைக்
    மேலிட்ட நகப்யத்துங்கா முழங்க
இருபுறமும் வெண்கவரி வீச நல்ல
    எறியீட்டி வெடிக்காரர் முன்னே நடக்க
சுத்திக்குடைக்காரர் சூழ குதிரைக்
    காரபர்டை வீருடனே கடல்போல் நடக்க
வெறி வெண்சாமரைகள் வீச முல்லே
    வேளாளன் புறப்பட்டான் சொல்ல முடியாது

---

50. சத்ராதி- சத்துரு, விரோதி.
50a துரிசா—விரைவாக

மிக்காஞ்சிரங்காலுங் கழித்து நல்ல
வீருன நால்கோட்டை சோழபுரந்தாண்டி
ஒலக்கூர்மைதானந்தாண்டி நல்ல
உத்தாருந்தபட்டி ஒப்பமுந்தாண்டி
அரளிக்கோட்டை யாசாரந்தாண்டி அந்த
ஆஸ்தானந்திருக் கொடியர் மைதானந்தாண்டி
திறல்விஜயன் தாண்டவராயன் அப்போ
சீக்கிரம் வயிரவன்பட்டி போய்ச் சேர்ந்து
சலுகைப் பெரியுடை[51]யானின்ற நல்ல
சுவர்னகர் மிகன்முத்து வடுகையன்

சிவகங்கை மன்னனைக் காணல்

சந்திப்பு கொடுக்கவேணு மென்று துரைக்குத்
தயாராகப் பூப்பந்தல் போட்டிடச் சொல்லி
மஞ்சுதவழ் கனிவாழை நாட்டில் நல்ல
மகர தோரணங்கள் கட்டி மாங்கனிகள் தூக்கி
அஞ்சடுக்குப் பஞ்சு மெத்தை விரித்து அதிலே
ஐங்கல மல்லிகைப்பூ காம் பரிந்து கொட்டி
பச்சை திண்டுதலையணிகள் வைத்து அதிலே
பாங்கானதிண் டொன்று கொண்டுவைத்து சாத்தி
இச்சை பெறசல்லாவை விரித்து நல்ல
இதமாகவொப்புறப் பன்னீர் தெளித்து
வண்மையுடன் சோடித்து வைத்து சுக
பண்டலேஸ்வான் துருவன் முத்து வடுகையன்
கண்டவளர் விபூதிதனைப் பூசி நல்ல
கஸ்தூரிபொட்டுஞ் சவ்வாதுந்தரித்து
ஒருபிடி பூநூல் துலங்க[52] நல்ல
உத்திராட்சப் பொன் கிளையூஞ்சலிட்டாட்ட
மறுமுத்துத் தாழ்வந்துலங்க காதில்
மோடியுடன் மரகதக்கல் கடுக்கனு மின்ன
இருக்கை யிலுந்தவங்களை யிலங்க சிரசில்
ஈரைந்துமுத்து கொண்டை பாகையுந்துலங்க
பூவாலே பந்தலபோட்டு நல்ல
பூலோகந் தேவேந்திரன் வெளியில் வருகையிலே
வடக்குநடக்க கிடுகிடென்றதிர நல்ல
வாங்கா [52a] வலம்புரிச்சங்கு நின்றூத

51. பெரியுடையான்—பெரிய உடையாத் தேவர்
52 மறவர்குல ஜமீந்தார்களுக்குப் பூணுல் கிடையாது.
52a. வாங்க- சின்னம், வாங்கா என்பன வாத்தியங்கள்.

இடிபோல பேரிகை முழங்க நல்ல
இசையான சங்கீத மேளந்துலங்க
திடமுடைய நகுலாபராக்கு [53] உலகில்
தேவதேவேந்திராதீரா பராக்கு
வடக்கரைப்புலி பெரியவுடையார் தேவர்
வங்கிஷம் [54] விளங்க வருமாலே பராக்கு
இப்படி கட்டியங்கூற பூலோக
வந்திரனுதிபதி கொலுவந்து சேர்ந்து
கெற்புலி முத்து வடுகையா பாதர்
கிரீஷகொலுசேர்ந்தவுடன், தாண்டவராயன்
திருப்பாகரை தனக்கு வந்து வெள்ளி
செம்புதனில் சுத்த ஜலமதைமொண்டு கொண்டு
திருப்பாகரையிதை கடந்து துரை
தேவேந்திரன் கொலுவில் சென்று தளகர்த்தன்
ஒருபிடிவராக னெருதட்டில் கொட்டி
உத்தமன் தளகர்த்தனிரு கையிலேந்தி
துருவனெதிரில் திஷ்டி [55] சுத்தி அதைச்
சுழற்றியெறிந்து முல்லை தாண்டவராயன்
வேதமொரு முறையோர்கள் துரையை
வேளாளான் மூன்றுதரஞ் சுற்றிவந்து நின்று
பாதமதில் பன்னீர் செரிந்து பின்
பட்டிழையீரமது தானே துடைத்து
தங்கமலர் வெள்ளி மலரெடுத்து வரை
சாமியுடபாதத்தில் தானுஞ் சொரிந்து
செங்கை குவித்தே முல்லை மார்பன் நல்ல
செகமண்டலேஸ்வரன் திருவடிதனியே

முத்துவடுகன்—தளவாய் உரையாடல்

திடீரென்றுயிருகையால் தாங்கி துரை
சீர்பெற வாசீர்வதித் தெழுந்திரென்று சொல்லி
மோதிரக் கையினுலே தாங்கி அண்ணே
முடிமன்னுகாராளா சொல்லுகிறேன் கேளு
வயதுக்கு மூத்தவன் நீயண்ணே என்னை
வணக்கமாய்க் கும்பிடுதல் ஞாயமல்ல சொன்னேன்

53. பராக்கு - இது எச்சரிக்கைக்காரர் கூறுவது.
54. வங்கிஷம், வங்கிசம் (பா.வ) அரசர் முன்னிலையில் கட்டியக்காரர் கட்டியம் கூறுவது.
55. திஷ்டி- கண்ணூறு, திருஷ்டி வராமலிருக்க.

முடிசாய்ந்துத் தாண்டவராயன் துரை
முத்து வடுகையரது பாதத்தில் வீழ்ந்தான்[56]

முத்துவடுகன் தளவாய் உரையாடல்

திடீரென்று யிருகையால் தாங்கி துரை
சீர்பெற வாசீர்வதித் தெழுந்திரென்று சொல்லி
மோதிரக்கையினலே தாங்கி அண்ணே
முடிமன்ன காரளா சொல்லுகிறேன் கேளு
வயதுக்கு மூத்த வன்நீயண்ணே என்னே
வணக்கமாய்க் கும்பிடுதல் ஞாயமல்ல சொன்னேன்
ஆதிக்கநிலை நிறுத்தி வைத்தாய் அண்ணே
ஆஸ்தானம் நிலை நிறுத்திவைத்தவனே நீதான்
என்ன சங்கதி கொண்டுவந்தாய் அண்ணே
எந்தனுக்குச் சொல்லென்று கேட்டாரே துரையும்
ஆண்டவனே முத்துவடுகையா உனது
அடிமை நான்காராளன் சொல்லுகிறேன் கேளு
உனைக் காணவந்தவகை சாமி
உள்ளபடி வேளாளன் சொல்லுகிறேன் கேளு
திருச்சினப்பள்ளி கோட்டைதனிலே யிருந்து
திசை மதுரைக் கோட்டைக்கு வந்தானே கானன்
நெல்லூர் சிராப்பள்ளியிலிருந்து கானன்
நேர்தெற்கே வடமதுரைக் கோட்டை வருகையிலே
வரும்போது கும்தானென்று வந்தான் அந்த
மதுரைக்கு வந்தபின்பு கானுதுரையானன்
அவனை மைத்துனனென்று றவாடி அவன்
மாசா தனைத் தங்கையென் றெண்ணி
உடுப்புகள் வெகுவாகக் கொடுத்தேன் அந்த
உலோபியாங் கானனுக்கு விசுவாசமில்லை
கட்டாத வுடுப்பைக் கட்டியனுப்ப துரையே
கானனுக் கெவ்வளவும் விசுவாசமில்லை
திருப்புவனம் விட்டுவிடுவேன் நானே
சிவகங்கை குடியிருப்புநிலைக் கொட்டான்* கானன்
இப்படி தாண்டவராயன் சொல்ல நல்ல
இயல்முத்து வடுகையருஞ்சொல்வார்
வேணுமென்று கானுதுரை கேட்டால் அண்ணே
வீணிலே சனியனை யிழுக்காதே வேண்டாம்

56. ராஜாவென்று பட்டம் பெற்ற ஜமீன்தார்களைப் பிறர் வணங்கும்முறை. மேல் 10 வரிகளில் கூறப்பட்டது.
*நிலைக்கவொட்டான் (பா. வ)

நாலு கோட்டை கொம்புமே போதும் அந்த
நலங்கொண்ட பாத்திபனூர் விட்டுவிடு மென்றூர்.
மேலுமவனுடனே பகையாதே சண்டை
மேற்கொண்டு மவுனுடனே யெதிர்க்க முடியாது
எந்தெந்தச் சீமை கேட்டாலும் அவனுக்
கில்லையென்று மாத்திரஞ் சொல்லாதே வேண்டாம்
மாபோசன் மதுரையுடன் சேர்க்கை திருப்பு
வனக்கோட்டை விட்டுவிடு மதிமந்திரி யென்றூர்
இப்படி துரைமகனுஞ் சொல்ல நல்ல
இயல்பாக வேளாளனேது சொல்வானும்
போபோ பேய் கொண்டதுரையே உமது
புத்தியுமிம்மட்டோ முத்து வடுகையா
சுண்டுவிரலிடங் கொடுப்பேனே சாமி
துரைவாசல் மதிமந்திரி யதிகாரியடியேன்
கண்டறியு முனதடிமை சேதி என்று
காராளன் சொன்ன மொழி காதாரக் கேட்டு
இப்படி தயிரியங்கள்* சொன்னுய் அண்ணே
எப்படியவனைச் செயங்கொள்வை யென்றூர்
அப்போது முல்லை மணிமார்பன் சிங்கம்
ஆண்டவன் முகம் நோக்கியேது சொல்வானும்
ஆற்காடு நானுமிப் போ சுடந்து நல்ல
அனைவர் புகழ் நபாபுதனை கண்டுசந்தித்து
தாக்கவே படை திரட்டி அந்த
சற்சனன்துரை பெரிய பிரட்டனையுங் கூட்டி
மேசர்கிரீட முசலாலி கானன்
மேசர்துரை முசலியர் பறங்கியையு மழைத்து
ஆவணி மாதத்திற்குள்ளாக அவனை
யனைவோருமறியவே தூக்காமல் விட்டால்
என்பேரு தாண்டவனல்ல சிங்கம்
எடுத்தது வுந்தளகர்த்த மோதிமுமல்ல
பிடித்துவு மெழுத் தாணியல்ல பாதர்
போட்டதுவுந் தீ வாசுக்கம் பளீயுமல்ல
நன்னகர் சிறந்த புவிபோற்றும் நல்ல
நாலுகோட்டை தளகர்த்தனுமல்ல வென்றூன்
ஏற்கவே வீரியஞ் சொன்னுய் அண்ணே
இதற்குநான் மறுவயணஞ் சொல்லுகிறேன் கேளு
ஆற்காடு போகிறது அண்ணே எனக்கு
அன்பாகத் தோற்றவில்லை தாண்டவராயா

---

* தைரியம்,

துலுக்கனை நம்பலாமோ அண்ணே அந்த
துரோகி பறங்கிகளை நம்பவுங் கூடாது
மேலுக்காயிதுவரைக்கு மிருந்தோம் அம்மா
விருதாவிலே வடக்கே போகிறுயண்ணு
கொள்ளுதான் பெருத்திருக்குந் தேசம் அதிலே
குடிமெத்தவுண்டு திருச்சிராப்பளியில்
ஏழரை வருஷத்துப் பகுதி நாமும்
எள்ளளவும் வடக்குமுகங் கொடுத்தனுப்பவில்லை
போன நாழியிலே நபாபு உன்னைப்
பிடித்தல்லோ பாராவில் போடுவா னென்றுன்
மகானு பாவா முத்துவடுகையா உனது
மதிமந்திரி பிரதாபஞ் சொல்லுகிறேன் கேளு
காலாலே முடிவேனெரு முடிச்சு அதனைக்
கையினுல விழ்த்தால் தானவன்தான் நவாபு
மாலான மும்மதலி சாயபை பொன்
மலைவெளியிருந்து வந்து பேட்டியுஞ் செய்து
அவனிடத்தில் வெகுமதியும் வாங்கி சாமி
அவன் செவியை நான் பிடித்தாட்டு வேனென்றுன்
கவனமுடன் முல்லை மணிமார்பா வடக்கே
கனமுடனே போய்வர யோசிக்கிறுயண்ணே
ஆர்க்காடு போனவர்களண்ணே கொழுத்த
யானைவாயில் கொடுத்த கரும்பல்லோ[57] மந்திரி
மண்ணைத் தாளுண்டவர் களண்ணே இந்த
மண்ணிலுங் கோடியடா முல்லைமணிமார்பா
என்றைக்கு நிச்சயமோ அண்ணு இப்போ
என்மனதுக் கெவ்வளவுஞ் சம்மதிகளில்லை
எந்தெந்தத் தேசங் கேட்டாலும் அவனுக்
கில்லையென்று மாத்திரஞ் சொல்லாதே வேண்டாம்
இந்தமொழி சொன்னீரே சாமி தேவர்
இப்படியோ செங்கோல் செலுத்தவே போறீர்
ஒருகாசு செலவழிக்காமல் சாமி
உனதடிமை திசை மதுரைபிடியா மற்போனும்
தரும குணமுத்து வடுகையா உமக்குத்
தலையான பிரதானியாவனே வென்றுன்
என் வார்த்தை கேளாமற்போரு யுன்னை
என்றைக்கு காண்பேனே முல்லை மணிமார்பா
சாமியுட திருநாமந்தன்னை அடியேன்
தலையின்மேல் வைத்துக்கொண்டு ஆற்காடு சென்று

57. பழமொழி. யானை வாய்க் கரும்புபோல.

திசைகட்டு ஒருகட்டாய் கட்டி நாளைத்
திருப்புவனத் திசையாகப் பாளையங்கை கூட்டி
மறவருட தளகர்த்தனென்று இந்த
வையக முழுதுமெனச் சொல்ல வேணுமென்றான்
ஆற்காடு போகிறபோது நல்ல
*டீக்காகப் போவென்றார் முத்துவடுகையர்

தளவாய் முத்துவடுகநாதனிடம் கூறுதல்

சிங்கமே கவுரிவல்லையா[58] ஒரு
சேதிநான் வேளாளன் சொல்லுகிறேன் கேளு
உரியரிசி பஞ்ச காலத்தில் கெவுரி
ஒருகோடி ஜனத்தையும் ரட்சித்த நாதா
ஒற்றைக் குதிரை யேறாதே சாமி
உள்சுற்றுக் காட்டு வழி மிஞ்சி நடவாதே
நான் போயிவரு மட்டுந்துரையே நம்முட
நாயகன் காளையார் கோயிலிருக்க
இவிடத்திலின்ன மிருந்தால் நாளை
மோசங்கள் வந்துவிடு முத்துவடுகையா
சொல்லிய வாய்மூடு வதற்குள்ளே அப்போ
துரைமகனும் அண்ணன் முகமேறிட்டுப் பார்த்து

முத்துவடுகன் தளவாயிடம் கூறுதல்

அண்ணவே தாண்டவராயா இப்போ
அன்பாக வொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
இவிடம் விட்டு ஆற்காடு போனால் உன்னை
என்றைக்கு காண்பேனோ தாண்டவராயா
பொன்மிகுந்த திருச்சினாப் பள்ளிக்கு நீயும்
போகிறையோ உன்னழகு பார்க்கவேணு மென்று

முத்துவடுகன் பரிசுகள் வழங்குதல்

ஆண்டவன் முத்துவடுகையர் அந்த
நாழிகையில் காளாஞ்சி கருப்பனை யழைத்து
ராயப்பன் சேருவையயழைத்து அப்போ
நலங்கொண்ட யானை தன்னைக்கொண்டு வரச்சொல்லி
நேயமுடன் சித்திரங்ளெழுதி அதிலே
நேராகப் பூச்சக்கிர அவதாவும்[59] வைத்து

58. முத்து வடுகநாதனுக்கு மறு பெயர்.
59. ஹவுடா-(உருது) அம்பாரி.
* டீக்காக - ஆடம்பரமாக (உருது)

முத்துநாய்க்கனையு மழைத்து நல்ல
முடிமன்னன் பொக்கிஷ வீட்டைத் திறந்து
உக்கிராண வீட்டைத் திறந்து ஒரு
பெட்டியைத் திடீரென் றெடுத்துவரச் சொல்லி
வச்சிரமணிப் பெட்டியைத் திறந்து அப்போ
வரிசைகள் வெளிதனிலே திடீரென்றெடுத்துப்
பத்துப்பொன் பொன் போருவையெடுத்து நல்ல
பச்சைக் கடுக்கனொடு பாகை[60]யுங் கொடுத்து
தங்கவளை முன்கை மூதாரி பசுந்
தங்கமோகன மாலை சரப்பளி கொடுத்து
துங்கமிகத் தகட்டு நிலையங்கி நல்ல
துதிபெறு வெள்ளாளனுக்கு வெகுமதிகள் செய்து
அழகு நான் பார்க்க வேணுமண்ணே சற்றே
ஆனைமேல் நீயேறி வாவென்று சொன்னார்
தளகர்த்தன் வெகுமதிகள் வாங்கி வெகு
தளத்துடனே யானைதனை மூன்றுதரஞ் சுற்றி
நேராய்ச்சலாம் வாங்கி நின்று அப்போ
நேரில் நிற்கு முத்துவடுகையரைப் பார்த்து

முத்துவடுகன் பேசியது

மெத்த வெகுதுடித்தனஞ் செய்யாதே நம்மிட
மேனாட்டு கள்ளருடனெதிர்த்து பகையாதே
பேட்டிநான் செய்து வருமட்டும் நல்ல
பேரான சின்னையா நல்லண்ணே தேவா
தெற்கு தென் பாரிசந்தனிலே நல்ல
திடமாக யானைகட்டுங்கல்லுக்கு மேற்கே
சாருநிகர் மேல் வீடுதன்னில் முத்துக்
சுவர்ணகாமி மகன் கொலு வினிலிருந்தார்
வலுவீரகெம்பீரா பராக்கு என்று
மதிமந்திரி யானை மேலிருந்து கும்பிட்டான்
ஆண்டவனே முத்து வடுகையா என்று
அரசர் புகழ்காராளன் கும்பிடும் போது
சலுகைப் பெரியுடையானீன்ற ராஜ
சுவர்ணகாமி மகன் முத்து வடுகையன்

முத்துவடுகருடன் பேச்சு

உத்தரவு முல்லை முத்துவடுகன் மணிமார்பா இப்போ
உன்னழகு கண்ணலே பார்த்தேனடா அண்ணே

60. தலைப்பாகை.

செத்தாலு மோட்சமுண்டு அண்ணே என்று
திருஷ்டிசுற்றி போய்வாரு மென்று சொன்னரப்போ
தீரனும் போய்வா வென்றுரைக்க அப்போ

தளவாய் பயணம்

திருப்பினன் பாளையந்தனே தாண்டவராயன்
கட்டியம் பராக்கென்று கூற நல்ல
கண்வளரும் வயிரவன் பட்டியுந்தாண்டி
திருபத்தூர் சீதேவிதாண்டி வளர்
சிராவயலுடன் மருதங்குடி கடந்து
சிராவயல் ஒப்பமுந்தாண்டி தனது
திருவளருங் குன்னக்குடி வந்தங்கே சேர்ந்து

குன்றக்குடி முருகனை வணங்கல்

ஐம்பது பொன்னெடுத்துக் கொடுத்து நல்ல
ஆண்டவன் குமரகுருக்குச் சிறப்புச் செய்யச் சொல்லி
மந்தாரை முல்லை யிருவாட்சி நல்ல
மகிழம்பூ குடமல்லி சாத்தென்று சொல்லி
வெள்ளிமலர் பொன்மலருஞ் சாற்றி நல்ல
விதமான வில்வமலரர்ச்சனையுஞ் செய்து
தாண்டவராய தளமந்திரி நல்ல
தயிரியமாய் கும்பிட்டு ஏது சொல்வானும்
வடக்கேதான் போய் வரலாமென்றால் சுவாமி
வலதுபுறங் கெவுளியது சொல்லவேணும் சுவாமி
வடக்கே நான் போகலாகா தென்றால் சுவாமி
இடது புறஞ்சொல்ல வேணுமென்றான் வேளாளன்
கேட்டுவாய் மூடுவதற்குள்ளே நல்ல
கெம்பீரமாய்த் தெட்சண முத்தரவுமாச்சு
சுவாமியினுத்தரவு தன்னை நல்ல
தளமந்திரி தாண்டவன் முந்தாணியில் முடிந்து
சந்தோஷமாய் வெளியில் வந்து நல்ல
தாண்டவராய தளமந்திரி மகிழ்ந்து
வையாபுரிக் கரையினிலேறி மண்ட
லாதிபதி தீவாசுக்கம்பளி யிலிருந்து

ராமநாதபுரம் தளவாய்க்குக் கடிதம்

தம்பி தாமேதரம்பிள்ளை இப்போ
தயிரிமாயொரு சேதி சொல்லுகிறேன் கேளு

வம்பனும் சின்னமறவனேலே உனக்கு
வருதென்று சந்தோஷங் கொள்ளாதே அண்ணே
வனஞ்சிறந்து வரப்புறிந்து போனல் அந்த
வாய்க்காலும் நிற்குமே அல்லிகுல மன்ன
உன்சீமை யழிந்து நவாபு கையிலே நிலைத்து
இருக்குமோ உன்சீமை ராமநாதபுரந்தான்
சிவகங்கை பேட்டை போகையிலே நிலைத்து
நிற்குமோ உன்னுடைய ராமநாதபுரம் கோட்டை
மலைக்கோட்டை துருவமதிலிருந்து நமது
மதுராபுரி கோட்டைக்கு வந்தானே கானன்
மதுரைவளர் கான்சாயபு துரையே நானும்
மைத்துன னென்று சொல்லி யொப்பாரிபிடித்து
மாசாவை தங்கையென்று சொல்லி இப்படி
மரியாதையாய் நானும் யோசித்திருந்தேன்
எள்னவுபசாரஞ் செய்தாலும் அவனுக்
கெள்ளளவும் மனதிலே விசுவாச மில்லை
நிலையான திருப்புவனமும் உன்னுடைய
நேரான பார்த்திபனூர் கேழ்க்கிறுன் கானன்
உன்னுடைய திருச்சினப்பள்ளி சீமை
யொருமிக்கக் கேழ்க்கிறுன் கான்சாயபு நீலன்
ஆற்காடு நவாபை யழைத்து வந்து அவனே
அடிக்கவே ணும்திசைம துரைபிடிக்கவே ணும் தம்பி
இவ் வோலைகண்ட நாழிக்கு தம்பி
எழும்பிநீ குன்னக்குடி வராமலே போனல்
நவாபை நானழைத்து வரும்போது எல்லோருமாக
நகைக்கவேயுன் சீமைமுதற் கொள்ளையடிப்பேன்
என்று சொல்லி காயிதத்தை யெழுதி அப்போ
இருபேரர்க்கார்கையில் கொடுத்தனுப்பி வைத்தான்
மண்டலம் புகழ் நகரந்தாண்டி கல்வி
மருவு பகலுறவாடி செங்கமடை தாண்டி
ஆனந்தராயனூர் தாண்டி நல்ல
அழகான வடக்கூர் யஜனூர்தாண்டி
சீரான ஆண்ட ங்குடி தாண்டி நம்மை
சிறந்தோங்கும் காலனூர் தன்னையுங் கடந்து
ராமநாதபுரக் கோட்டை தனிலே நல்ல

தாமோதரம் பிள்ளை கடிதத்தை வாசித்தான்

நராதிபன் நல்ல தாமோதிரம் பிள்ளை யரண்மனையில்
சவுக்கையிலே தாமோதரம் பிள்ளை அப்போ

தயவாக திண்டுமேல் சாய்ந்திருக்கும்போது
காயிதத்தை கொண்டுவந்து அர்க்காரன் நல்ல
கனமிகு தாமோதரம் பிள்ளை முன்வைத்தான்
வாசித்துக் கண்ணுலே பார்த்து ஓலே
வக்கணை யெலாமறிந்து மனமுருகிக்கொண்டு
யோசித்து பின்னுமவனு மெழுந்து தளவாய்
ஒரு நொடியில் தாய்பாதத்தில் விழுந்து கும்பிட்டு
ஆத்தாளே தாயே மாதாவே இதற்கு
ஆலோசனை மறுவயணஞ் சொல்லென்று கேட்டான்
பூத்தமலர் திரிலோக மாதா நமது
புனிதகுண பிள்ளையை யேறிட்டுப் பார்த்து
நானென்ன சொல்வேனடா தம்பி நமது
ராமநாதனிடஞ் சென்று கேளுபோ வென்ருன்

ராமநாதபுரம் பயணம்

போவென்று சொன்னவுடன் தளவாய் நல்ல
புகழ்பெற்ற ஆசாரவாசலது தாண்டி
சீரான பிள்ளை மடந்தாண்டி நல்ல
சிறப்பாக மண்டபம்தோணிரைத்து வந்து
இராமுழுதும் நித்திரை செய்து நல்ல
நற்பாலன் விழுந்துபின் தோணிமேலேறி
சிங்கமெனும் தாமோதரம்பிள்ளை அந்த
க்ஷணத்திலேயே ராமேஸ்வரம் தனக்குவந்து
ராமலிங்கத்தை பூஜைசெய்து ராம
நாயகர் பாதமதில் தெண்டனிட்டு
வடக்கே நான் போகவேணுமென்று நானு
மனதாக விருக்கிறே னுன்னுடைய தொண்டன்
திடத்துடன் வடக்கே போகவென்ருல் எனக்குத்
தெட்சணஞ் சொல்லவேணும் சீரான கெவுளி
வடக்கே நான் போகவேணுமென்ருல் எனக்கு
இடதுபுறந் தெட்சணஞ் சொல்ல வேணுமென்ருன்
செயமாகும் வடக்கே போவென்று ராமர்
திருவுறுப்பில் தெட்சணங் கெவுளியது சொல்ல
இயல் ராமருத்தரஞ் சொல்ல டில்லி
எமசேதுபுரம் வரைக்கும் வெல்லுவேனென்று
மாப்பிள்ளை தேவனுக் கோலே முன்னே
வைத்தக்கால் பின்வாங்காமல வனுக்குமோலே
குண்டையூர் மறவருக்கு மோலே சர்க்கரைக்
கோட்டை நாகல் நாட்டார்க்கு மோலே

கண்டெழுதி நான் வடக்கே போறேன் போய்
காரியம் நவாபிடத்திற் பேசிவரும் மட்டும்
என் சீமைதனிற் களவுபோனல் நெருப்பா
யெறித்திடுவனுங்களை யென்றெழுதி யனுப்பி
பஞ்சவர்ணடால் விருது துலங்க நல்ல
பரிநகுல தாமோதரம் பிள்ளை வெளிவந்து

தாமோதரம் பிள்ளை பயணம்

கொம்புபேரிகை முழங்க சிங்கம்
கொடி மறக்கொடி கருடக்கொடி யூஞ்சலாட
தம்பூரு புல்லாங்குழல் முழங்க வீச
தவுண்டை முருமல்லாரி தாரிகை முழங்க
இருபதுகோடு கதைப்பு நல்ல
ஏழுஒட்டை[61]மீதிலே பேரிகை முழங்க
அருகில் மயிரீட்டியொரு கோடி நல்ல
அழகான தேரீட்டிக்காரரொரு கோடி
கத்தி கேடையக்காரர் சூழ குதிரைக்
காரர்படைபின் நூறுமுன்னே நடக்க
வெற்றிவளை தடிகாரர் புடைசூழ நல்ல
வெடிக்கார எறியம்புக்காரர் புடைசூழ
வெண்கவரியால வட்டம் வீச கட்டியர்
மேலெச்சரிக்கை பராக்கென்று கூற
சிங்கமுகச் சிவிகையிலேறி பாதர்
செயசிங்கம் தாமோதரம் வடக்கு முகம் நோக்கி
உறவாடி செங்கல்மடை தாண்டி அப்போ
உயர்ந்த தோர் அனுமந்தக் குடியும்கடந்து
பெருநாட்டுக் கல்வியுந்தாண்டி அப்போ
பேரான தாமோதரன் கூடாரமடித்தான்

இரு தளவாய்கள் சந்தித்தல்

கூடாரமடித்ததோர் சேதி நல்ல
கெம்பீரமாய் நல்ல தாண்டவனுங்கேட்டு
பெரிய வீட்டுக்காரன் வாருன் என்று
பேசிய தாண்டவராயனுமெழுந்து
இருவர் சமஸ்தானமு மொன்று நாமும்
எதிர்கொண்டு காண வேணுமென்று நினைத்து

61. ஒட்டை - ஒட்டகை. (இதன்மீது பேரிகை வைத்து அடிக்கிறார்கள்)

காரைக்குடி கோவிலுந்தாண்டி நல்ல
கழனி சேர்ராம் பதிக் கெடித்தலமுந்தாண்டி
கனமிகுங் கலிப்புலிமைதானம் தன்னில்
காராளரிரு வருஞ்சரி பேட்டி செய்து
தனதாகக் கூடாரந்தன்னில் திண்டு
தலைகாணி மேற்சார்ந்திரு பிள்ளைமாரும்
மன்னவன் தாமோதரம் பிள்ளை செம்பொன்
மருவுதாண்டவராய பிள்ளைதனைப் பார்த்து
அண்ணே வாதாண்டவராயா என்னை
யழைத்ததொரு காரியஞ் சொல்லென்று கேழ்க்க
தம்பி வாதாமோதரம் பிள்ளை இப்போ
தயிரியமாயொரு சேதி சொல்லுகிறேன் கேளு
உனையழைத்த சேதிதனை நம்பி நானும்
உள்ளபடி சத்தியமாய் சொல்லுகிறேன் கேளு
நெல்லூர் சிராப்பளியிலிருந்து முன்னே
நேர்தெற்கு கான்சாயபு மதுரைக்கு வந்தானே
வருகையிலே கும்தானென்று வந்தான் அந்த
மதுரைக்கு வந்தபின் துரையானவனும்
வினையான திருமதுரை கானன் மெத்த
மிரட்டியே நம்மையெய்த்து பகட்டுகிறான் தம்பி
அன்பாய் வடக்கே போய் பேசி அவனை
அடிக்கவேணுந் திசை மதுரை பிடிக்கவேணு மென்றான்
இப்படியா தாண்டவரர்ய அண்ணே நாம்
இருபேரும் நவாபெதிரில் போகக்கூடாது
புலித்தேவனிருக் கிறானண்ணே'[62] நாமும்
போனவுடன் கோளு சொல்லுவானண்ணே
தோப்புரு பணத்துக்கு[63] நம்மை அண்ணே
தொந்தரை செய்தொற்றைக் காலில் நிற்க
வைப்பானண்ணே
ஆற்காடு போகுவது அண்ணே நமக்
கழகல்லவே தாண்டவராயா

---

62 இவன் பூலுத் தேவன், நெல் கட்டாஞ் செவலில் கான்சாகிபை எதிர்த்துப் போரிட்டவன், கோட்டை பிடிபட்ட பிறகு அவன் முடிவு என்ன வாயிற்றென்று அறிய முடியவில்லை. அக்காலத்து வெள்ளை அதிகாரிகளின் குறிப்புகளில் அவனது போர்களைப் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன. அனல் முடிவு பற்றித் தெரியவில்லை. ஆனல் இப்பாட்டில் அவன் நவாபிடம் இருந்தாகச் சொல்லப்படுகிறது.

63. தோப்புரு- ஜமீன்தார்கள் நவாபிற்குச் செலுத்த வேண்டிய நிலவரிப் பகுதி.

ஏழரை வருஷப்பகுதி நா
மிருபேருமொரு காசுங் கொடுக்கவேயில்லை
இப்படி தாமோதரன் சொல்ல அதற்
கேது சொல்வான் முல்லை மணித்தாண்டவராயன்
போபோ பேய் கொண்ட தம்பி உன்னுடைய
புத்தியுமிவ்வளவோ தாமோதரம் பிள்ளை
காலாலே முடிவனெரு முடிச்சு அதை
கையால விழ்த்தால்தான் நவாபு
துடியான நவாபுதுரை சாய்பை நமது
சொற்படியே கேழ்க்கவே செய்வேனுனென்றான்
ஏனிந்த வாலோசனையண்ணே நவாபை
இழுத்து வந்தால் பொல்லாத மோசம் வருமண்ணே
வருபாதை தெரியாமலண்ணே அவனும்
வடக்கேயிருக்கிறான் மம்முதலி சாய்பு
மார்க்கமாய் வெகுபடைகளிருக்க நமது
மடக்கு கத்திமுன் னூறுவகைக்குமே யிருக்க
பதினயிரம் பட்டாளமிருக்க கையில்
பதினைந்து பீரங்கி தபாராயிருக்க
குதிரையொரு நூறுமேயிருக்க ஈட்டி
கோடான கோடி யிருக்குதடா அண்ணே
இருபோதனத் தையுங்காட்ட முப்பத்
தேழாயிரஞ் சனங்கள் கூடுமடா அண்ணே
திருணவலி கீழ்க்காடு வரைக்கும் நாமும்
திசை கம்பம் நாட்டியே தோரணம் கட்டிடலாம்
கான்சாய்பு வந்தெதிர்த்தாக்கால் எனது
கைச்சிரத்தை பாரடா அண்ணே
இப்படி தாமோதரன் சொல்ல நமது
இயலான தாண்டவனுமேது சொல்வானும்
ஏனீந்த வீம்புதான் தம்பி உனக்கு
என்னளவும் புத்தியில்லை தாமோதரம் பிள்ளை
அவன்—கருமருந்துக்காரனடா தம்பி அந்த
கானனுடன் சண்டை ஜெயிக்க முடியாது
இருபேர்க்கும் ஜனச்சேதமாகும் நாமும்
எதிர்நிற்கக் கூடாது துரைகானனோடே
நவாபையழைத்து வந்துவிட்டு நாமும்
நலியாமலிருந்தழகு பார்க்கலாமென்றான்
பூபாலன் தாமோதரம்பிள்ளை அண்ணே
புத்திக்குச் சரிப்போனபடி யென்றுரைத்தான்
க்ஷணத்திலே பொன் கொளியாண்டி யப்பன்
தன்னைத் தளகர்த்தன ழைத்துவரச் சொல்லி

பாளையம் போய்வரு மட்டும் இதற்குப்
படிச் செலவிருவர்க்கும் தளப்பெருக்கதிகம்
வேளைக்காயிரம் பொன் செலவாகும் அதற்கு
விவரமாய் நீயென்னதருவை என்றுகேட்டான்
சாடிதாருகிறேன் சொல்லும் பணமெல்லாம் கானு
சாயபை நீர்தூக்குமேற்றி விடுமென்ருன்

இரு தளவாய்கள் பயணம்

இருபேரும் சந்தோஷமாகி வந்து
இறங்கினர் குன்னக்குடி வையாபுரிகரையில்
வையாபுரிக் கரைதனிலேயிறங்கி நாளை
வடக்கேதான் பயணமென்றுறுதியாய்ச் சொல்லி
இருபேரும் யானையின்மேலேறி முப்பத்
தேழாயிரஞ் சனமுமெண்ணிக் கொண்டு
மூன்ருனைமேலே நகபத்து அப்போது
முழங்குதேஒர் ஒட்டைமேலே நகரு
முப்பதுசோடு கனதப்பு பாதர்
முடிமன்னன் நாற்பது பேரிகைமுழங்க
திருக்கிழக் குடிதனிலே வந்து நல்ல
சிவலாயத்தை மூன்றுதரம் வலமரகவந்து
அறுபது பொன்னெடுத்துக் கொடுத்து சுவாமிக்கு
அர்ச்சனை செய்தபின் தெரிசனைகள் செய்து
மறவருடன் சிவலூருதாண்டி நல்ல
மன்னவர்களிரு பேரும் மைதானந்தாண்டி
பாம்பூரு மைதான வெளியில் அப்போது
பாளையமு மிறங்கியங்கிருந்த மாத்திரத்தில்
தொண்டயின் நமனபூபாலன் அந்த
துரைராசன் தளகர்த்தன்தனு வண்ணபிள்ளை
அண்ணே வா தனு வண்ணப்பிள்ளை வடக்கே
ஆற்காடு நவாபை தான் காணவே போறேன்
கோட்டையுட வளப்பந் தெரியாது உனக்கு
குபீரென்று சந்திப்பு வயணந்தெரியாது
மறுவயணத்திறமுஞ் சொல்லி எனக்கு
வரவிடவேணுமென்றெழுதியே யனுப்ப
தனுவண்ணப்பிள்ளை யதை வாங்கி அப்போ
தயிரிய மாய் வக்கணையை வாசித்துப் பார்த்து
சிங்கமே தாண்டவராயா ஒரு
சேதி நான் சொல்லுகிறேன் கேளு தளகர்த்தா
சனத்தை விட்டு உங்களிருவரையும் அவன்
தப்பாகக் கோட்டைக்குள் வரச்சொல்வாணண்ணே

கோட்டைக்குள் போக வேண்டாம் வெளியே
கோணமலை மைதானமதில் துரையை வரச்சொல்லி
இருபேரும் பேட்டி செய்யுமென்று அப்போ
எழுபேர் தலையில் உலுப்பை கட்டியனுப்ப
தனுவண்ணனுலுப்பைகளை யெல்லாம் அப்போ
தளகர்த்தரிரு பேருங்கண்ணுலே கண்டு
பூரணியை வாசித்துப் பார்த்து அப்போ
பொங்கமாயிரு பேருஞ் சந்தோஷியாகி
இதுமட்டுஞ் சொன்னதே போதும் என்று
இலுப்பையூர் மைதான வெளியுங் கடந்து
சாத்தனூர் :வெளியுங் கழித்து நல்ல
தைரியமாய்ப் பொன்மலைக்கு மேற்பாரிசத்தில்

திருச்சி வந்து சேர்தல்

கோட்டைக்குத் தென் பாரிசத்தில் அப்போ
குபீரென்று யிருபேரு மிறங்கின மாத்திரத்தில்
சிங்காரத் தோப்பில் நவாபு அப்போ
தீவாசு கம்பளியில் நித்திரை போம்போது
கோட்டை மேலிருந்த சிப்பாய் அப்போ
கோட்டையிடிபோல் ராமன் ஏறிட்டுப்பார்த்து
அலங்கம் விட்டுக் கீழே குதித்து நல்ல
யானைகட்டி மண்டபத் தெருவுங் கடந்து
ராமசாமி வாசற்படி தாண்டி அப்போ
நவாபு தேவடியில் வந்து நின்று ராமன்
அவுல் தார் சுபோரு தாருமாரை நம்மிட
ஆண்டவன் நவாபுதுரை யெங்கெயென்று கேட்டான்

கோட்டைக்குள் நுழைதல்

சிங்காரத் தோப்பில் நவாபு இப்போ
தீவாசுக்கம்பளியில் நித்திரைகளென்ருர்
சொல்லி வாய்மூடு முன்னே ராமன் நவாபு
சிங்காரத் தோப்பிற்குள் சீக்கிரமாய் வந்தான்
மம்முதலி நித்திரை வேளை அப்போ
மறத்திமகன் புலித்தேவன் துடைகுத்தியிருக்க*
தட்டியெழுப்பி புலிதேவா கோட்டை
தளங்கொண்டு இன்றைக்கு களவு போகுதென்ருன்

*குத்திட்டு உட்கார்ந்து

திடீரென்று மம்முதலி யெழுப்ப வெளியே
தென் பாரிசந்தன்னில் கனகதப்பு* முழங்க
கனகதப்பு முழங்குதொரு பக்கம் அதனே
கண்வளரீ நவாபுச்சாயபேதென்று கேட்க
ஆருடைய களமோவது சாமி அதனே
அறியவே கூடவில்லை நவாபுசாயபு
கார்மேகம் வந்து வளைந்தாற்போல் அங்கே
காக்காதோப்பு வெளிகொள்ள விலை சாயபு
கேமலும் வந்திட்டான் முன்னே இதிலே
கெடிசிங்கம் முரசு நகீ பெரியதுரை வந்தான்
சின்னபிரட்டனும் வந்தான் அப்போ
சீராகமூவரும் சலாம் வாங்கிக் கொண்டார்
அப்போ மம் முதலீ சாய்பு பாதர்
அஞ்சாதசின்னப் பிரட்டனைப் பார்த்து
வந்தவர்களின்ஞரென்றறிந்து நீயும்
வகையாக எந்தனுககு சொல்லென்று சொல்லி
சீனி கண்ணுடி[64] வைத்து பிரட்டன் அந்தத்
திசைநோக்கி யேறிட்டுப் பார்த்தேது சொல்வான்

பிரட்டன் துரை கூறல்

ஆண்டவனே மம்முதலீ சாயபே உமது
அடுமை நான் பிரட்டனினி சொல்லுகிறேன் கேளு
ஐவருட பாளையமல்ல சாய்பு
அன்பான மூவரசர் பாளையமல்ல
தஞ்சாவூர் பாளையமுமல்ல நம்
சாதித்துரைமார்கள் பாளையமுல்ல
கருங்காட்டு மறவர்களைப் போல எனக்குக்
காணுதுகையீட்டி தோணுது சாய்பு
சண்டைக்கு வந்தவர்களல்ல இவர்கள்
சந்திப்புக்கு வந்தாகக் காணுது என்ருன்

நவாபு தளவாய்களைக் காண வருதல்

அபெபா திடீரென்று நபாபுசாய்பெழுந்து வெளியே
தெற்கே போகவேணுமென்று நடக்கும் வேளையிலே

64. டெலிஸ் கோப்.

*கனகதப்பு—தங்கத் தப்பு—தப்பு—ஓர்புறம் தோல் கட்டிய கொட்டு.

மகுதுமல்லியான துரையும் வருக[65] அந்த
மன்னவன் கேமல் துரைபின்னால் வருக
துரை பெரிய பிரட்டனும் வருக பாதர்
துடியான கர்னல் துரைபின்னால் வருக
பாட்சாதி கோதண்டத்துடனே நெருங்கி
பத்துபாரா சிப்பாய்களும் வருக
தேவேந்திரன் கொலுப் போலே சாய்பு
தெற்குக்கோட்டை தலைவாசல் அலங்கத்திலேறி
குபீரென்று ஏறிட்டுப் பார்த்து அப்போ
கோபமுடன் மம்முதலி கலக்கமே கொண்டு
பீரங்கி சாய்புகளை யழைத்து மூன்று
பீரங்கியைத் திருப்பவுத் தரவுசெய்து
மந்தி சத்துருப்பிலே நூறு நல்ல
வகையான கொண்ட துருப்பிலேயும் நூறு
பிரட்டன துருப்பிலேயும் நூறு இப்படி
பிரியமாய் முந்நூறு குதிரைகளை கூட்டி
வந்தவர்களாரடா பூலி அவர்கள்
வளப்பந் தெரியுமோ பார்த்துச் சொல்லென்றான்
சேதுபதி சின்னமறவன் சேது
சமஸ்தானமென்று சொல்ல கேட்டிருப்பேனென்றான்
ஆனைக்கால் அர்க்காரராமு அவர்க

யாரென்று அறிய ராமனை அனுப்புதல்

ளாரென்று போய் நீயும் கேட்டுவாவென்று
மம்முதலிதேவடி போய்ச் சேர்ந்தார் ராமன்

ராமன் தளவாய்களை நோக்கி வருதல்

வருகிறான் தெற்குக் கோட்டை தலைவாசல்தாண்டி
காமிய்யா பள்ளியுந் தாண்டி நல்ல
கனமான தஞ்சைநகர் காலனிகழித்து
ரெட்ட மலைவீதியும் தாண்டி அப்போ
நேரிட்ட காக்கா தோங்கையுங்கழித்து

தளவாய்கள், ராமன் சந்திப்பு

பொன் மலை மைதான வெளியில்
பிள்ளைமார் சமுகத்தில் வந்து நின்று கொண்டு

---

65. வருக- வர. இதற்குப் பின்னால் சில அடிகளில் வருவதையும் இவ்வாறே படிக்க வேண்டும்.

வந்தவர்களா ரென்று சொல்லி ஒரு
வசனம் நவாபுதுரை கேட்டு வரச்சொன்னர்
மறவருட பிரதானி நாங்கள் இங்கே
வந்தோம் நவாபிடம் சொல்லுபோ ராமு
சண்டைக்கு வந்தீரோ நீங்கள் இப்போ
சந்திப்புக்கு வந்தீரே கேட்டுவரச் சொன்னர்
தகப்பனது வளவுக்கு ராமு நாங்கள்
சந்திப்புக்கு வந்தோமென்று சொல்லுபோ ராமு
திரும்பினர் அர்க்கார ராமு பாதர்

ராமு–நவாபும் திரும்பிவந்து செய்தி சொல்லுதல்

சிங்கம் நவாபு துரை தேவடியில் வந்து
ஆண்டவனே மம்முதலி துரையே நான்
அறிந்து வந்த சேதிகளைச் சொல்லுகிறேன் கேளு
மறவருட பிரதானியவர்கள் சாய்பு
வந்திருக்கும் வேடிக்கை சொல்லமுடியாது
இவர்கள் இப்படி வந்தால் இவர்கள்
துரைவந்தா லெப்படியிருக்குமோ வென்ருன்
புறத்திலேயிருந்த புலித்தேவன் நல்ல
புலிக்குட்டி நவாபுதுரையை யேறிட்டுப் பார்த்து

புலித் தேவன் கோள் மூட்டுதல்

வெகு மோடியாய் வந்தாருன்னு மெத்த
வீரியமாச் சொன்னனே யர்க்காரராமன்
மூத்தவர்கள் சீமையிலே விளையும் சாய்பு
ரசக்கிணறு சேதுபதி சீமையிலேயுண்டு
முப்போகம் விளையுமவர் சீமை அப்போ
*முசியாத வையை நதிசேர்ந்ததவன் தேசம்
பனங்காடு பெருந்ததவன் சீமை அதிலே
பத்து நிலையேறி கள்மெத்தவுண்டு
கல்லுப்படாததொரு சோறு அதிலே
முள்ளுப்படாத மீன் மறவருட சீமை
காசி முதலாகத் திரிந்தாலும் மறவர்
சீமையைப் போலொரு தேசங்கிடையாது சாய்பு
இருபத்திஞலு லட்சம் பொன் சீமை
இவர்களேயாளுராரிரு பிள்ளைமாரும்
இருபிள்ளை மார்களையும் பிடித்தால் தேச
மெல்லாமொருகுடைக் கீழாளலாமென்ருன்
இரு பிள்ளைமார்களையும் பிடிக்க தந்திரம்
புலித்தேவ மறு வயணஞ்சொல்லென்று கேட்டார்

*முசி – சோம்பல் (இங்கு) - வற்ருது. (நாஞ்சில் நாட்டு பா. வ)

சனத்தோடே வந்தேனேயானல் முல்லைத்
தாண்டவராயனே வெல்லப்போகாது
முப்பது நோன்பென்று சொல்லி நவாபு
முடிமன்னர் வெளியில் வரக்கூடாதிப்போ
கத்திக் கேடயம் முதலாய் வேண்டாம் உனது
கனமான அடப்பக்காரர் முதலாக வேண்டாம்
இரு பிள்ளைமாரையும் நவாபு இந்த
நாழிகையில் கோட்டைக்குள் வரச்சொல்லுமென்றுன்

ராமன் மீண்டும் தளவாய்களைக் காணப்போதல்

அப்படி புலித்தேவன் சொல்ல ராம
னிடத்திலே நவாபுசாய்பு சங்கதியைச் சொல்லி
தந்திரமாயிரு பிள்ளைமாரை இந்த
நாழிகையில் கோட்டைக்குள் கூட்டிவாவென்றுர்
வருகிருனர்க்காரராமன் அப்போ
மம்முதலி தேவடியைக் காணவுந்தாண்டி
தெற்கு கோட்டை வாசலுந்தாண்டி ராமன்
திடீரென்று பிள்ளைமார் சமுகத்தில் வந்து
அரேபிள்ளை முல்லை மணிமார்பா பாதர்
அனைவர் புகழ் நவாபு சொல்லுகிறுரண்ணே
முப்பது நோன்பெங்கள் துரைக்கு இப்போ
முடிமன்னன் கோட்டைவிட்டு வெளியே வரக்கூடாது
மனிதர்களொரு வருங் கூடாது நல்ல
வயணமுடனே கத்திகேடயமும் வேண்டாம்
இரு பிள்ளைமாரையும் நவாபு இந்த
நாழிகையில் கோட்டைக்குள் கூட்டிவரச் சொன்னுர்
நீங்கள் வந்தவேளை நல்லவேளை இப்போ
இருவரு மெழுந்திருந்து வாங்களென்று சொன்னுன்
இப்படியர்க்காரன் சொல்ல அதை
இந்திரன் தாமோதரன் பிள்ளையுங்கேட்டு
அண்ணே வாதாண்டவராயா இப்போ
அன்பாக ஒருவயணஞ் சொல்லுகிறேன் கேளு
குன்னக்குடி தனிலேயிருந்து திருக்
கோட்டை யூர்வரைக்குஞ் சொன்னேனே புத்தி
கேளாமல் வந்தையே நீயண்ணே இப்போ
கேடுவந்து நேர்ந்துதே யென் செய்வோ மென்றுள்
போ போ பேய்கொண்ட தம்பி உனது
புத்தியுமிம்மட்டோ தாமோதரம்பிள்ளை
வாடா நீ அர்க்கார ராமு ஒரு
வார்த்தை நான் வேளாளன் சொல்லுகிறேன் கேளு

பெண்டாட்டி பிள்ளையும் விட்டு நாங்கள்
பெரியோர்கள் சமஸ்தான மாளிகையும் விட்டு
துரைமகன் குழந்தையும் விட்டு இந்தச்
சுபானு வருஷத்து பஞ்சகாலத்தில்
தகப்பனைக் காணவேணுமென்று இத்தனை
தளத்தோடோ வந்தோமேஅர்க்கார ராமு
இருவரையும் வரச்சொல்லி சொல்ல உங்கள்
ஈஸ்வரன் அல்லாவுக்கேற்குமோ ராமா
இருவரையும் வரச்சொன்ன போதே எங்கள்
இருதயங் கலவரமாயிருக்குதடாராமா
சந்திப்பு எங்களுக்கு வேண்டாம் உங்கள்
சாய்புகிட்ட மறுவயணஞ் சொல்லுபோராமு
போகாதே முல்லை மணி மார்பா எங்கள்
புலிக்குட்டி நவாபீடத்தில் சேதி சொல்லிவாரேன்
அதுவரைக்கும் பாளையத்தை நிறுத்து என்று

ராமன் நவாபிடம் திரும்புதல்

அர்க்கார ராமனுடன் நடந்துவிட்டான் திரும்பி
திடீரென்று சமுகத்தில் வந்து பாதர்
சிங்க நவாபை சலாம் பண்ணிக்கொண்டு
ஆண்டவனே நவாபு சாய்பே உனது
அடிமை நானொரு வயணம் சொல்லுகிறேன்கேளு
அதிலொருவன் பட்டாணி வாருன் அவனும்
அல்லாவை வணங்குகிருன் சொல்லப்போகாது
அறிந்து இருப்பையடா பூலி அவ
ஞரடாவயணஞ் சொல்லென்று கேட்டான்
அவன்தான் தாண்டவராயன் அவன்
வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லமுடியாது
இப்படி பூலியுஞ் சொல்ல கேட்டு
ஏது சொல்வான் நவாபுக்கு அர்க்காரராமன்
தகப்பனைக் காணவேணுமென்று இத்தனை
தளத்தோடே வந்தானும் தாண்டவராயன்
இருவரையும் வரச் சொன்னபோதே அவனுக்கு
இஷ்டமேயில்லையாம் இவ்விடம் விட்டுப்போக
சந்திப்பு மூறிந்த தென்று சொன்ஞன் அவன்
சனத்தோடே சிவகங்கை போரென்று சொன்ஞன்
நவாபை கண்டுவருமட்டும் உமது
நலமான பாளையத்தை நிறுத்தென்று வந்தேன்
இதற்கு நீ மறுவயணம் சாயபு எனக்கு
இப்போது சொல்லென்று கேட்டானே ராமன்

நவாபு ராமனுக்குக் கூறுவது

மறத்தி மகன் சொல் மொழியைக் கேட்டு பாதர்
மம்முதலி சாயபு துரையேது சொல்வானும்
கோட்டைக்கு தென்பாரிசத்தில் அங்கே
குளிர்ந்த தோர் காக்காத் தோப்பு வெளிதனிலே
மூன்று நல்ல கூடாரமடித்து அங்கே
மூன்று நல்ல பீரங்கி தானுமேயேற்றி
பதினைந்து குறுக்கு வெளியிற்பரப்பி, அங்கே
பண்பான பூப்பந்தலலங்கரிக்கச் சொல்லி
நாற்பது பறங்கி நாற்காலி அதிலே
சச்சவுக்கமாகவே போட்டிடச் சொல்லி
ஏழுபாரா சுற்றிலும் வைத்து நல்ல
ஈஸ்வரன் நவாபு துரை புறப்பட்டார் வெளியில்
ஏறினர் வெள்ளை அவுதாவில் அப்போ
இருபுறமும் தம்பூரு முழங்குதொரு பக்கம்
நகபத்து [66] முழங்கு தொரு பக்கம் அங்கே
நகரா[67] முழங்குது சொல்லப் போகாது
முன்னூறு துருப்புகுதிரை நெருங்கி
முன்னணியாகவே வருகுது பிறகாலே
கருஞ்சட்டை காரரொருபக்கம் நல்ல
கறுப்பு வர்ண பறங்கிகளைச் சொல்லமுடியாது
செஞ்சட்டை காரனொரு பக்கம் சூழ
சிங்க நவாபுதுரை வெளியிலே வருகையிலே

நவாபு வெளியே வருதல்

காலையில் செம்மான* மெழுந்தாற்போல் பாதர்
கனகமுடி நவாபுதுரை புறப்பட்டார் வெளியில்
துரை வந்து கொலுவிருந்தா ரென்று அப்போ
துடியாகத் தாண்டவனும் வெளியிலே வந்து
தம்பி வாதாமோதரம் பிள்ளை நல்ல
தனவானே அவுதாவிலேறடா வென்றான்
அவுதாவில் நானேறமாட்டேன் சும்மா
ஆனைமேல் நீயேறிவாவென்று சொன்னான்
பெரிய வீட்டுக்காரனல்லோ நீயும் தம்பி
உன்னைவிட்டு யானைமேலேறமாட்டேனனும்
அதினாலே சந்தேகமொன்றுமில்லை சும்மா
ஆனை மேலேறடா முல்லை மணிமார்பா

66, நகபத்து 67 .நகரா—முரசுகள்
*செம்மானம்—செவ்வானம்

ஆனைமேல் நானேறியிருந்தால் இறங்க
அரை நாழி செல்லுமே முல்லை மணிமார்பா
ஏறுவது பஞ்சகல்யாணி இன்றைக்
கெடுக்கிறது ரெண்டுகையில் ரெண்டு முகப்பட்டா
நவாபுகவுல்தனஞ்[68] செய்தாக்கால் நமது
நாய்க்கன் மறவனுக்குப் பேரிருக்க வேணும்
வெட்டுறேனொரு வெட்டுபாதர் என்று
மீசை மேலே கைபோட்டான் தாமோதரம் பிள்ளை
ஏது வந்து நேர்ந்தாலுந்தம்பி நமது
ஈசன் மகன் குமரன் கிருபையிருக்கு தென்று
இருபேரு மெண்ணிக்கை கொண்டு முப்பத்
தேழாயி ரஞ்செனமும் கை கொண்டு
துப்பாக்கி யொருபுறம் வகுத்து அப்போ
தனங்கொண்ட வேல்காரரொரு பக்கம் வகுத்து
மின்னல் மழை மாரியதுபோலே அதிலே
வெள்ளி கட்டு துப்பாக்கி சொல்லப்போகாது
ஆயிரந் துப்பாக்கி மட்டுந் தனது
யானைதனைச் சுற்றிவரச் சொன்னான் காராளன் அப்போ
மூன்றானை மேலே நகபத்து
முட்டினானே மொட்டை மேலே நகரா.

யானை மீதேறி தளவாய்கள் வருதல்

அனுமந்தடா லுந்துலங்க நல்ல
அழகா வலம் புரிச்சங்கு நின்றூத
சகசம்படா லுந்துலங்க அதிலே
சந்திரகாந்தி பட்டாடை யிருபுறமும்வீச
மகரக்கொடி விருது நின்றிலங்க நல்ல
வளமான பூச்சக்கரக்குடை துலங்க
திருமலை நாய்க்கனுக்குத் தொண்டன் டப்பை
எழுபது பாளையக்காரருக்கு முண்டன்
சத்ராதிகொட்ட மடக்கியென்று நல்ல
பயங்கரமா யிருபுறமுங் கட்டியங்கூற
தேவேந்திரன் வந்தாற் போலே பாதர்
திடீரென்று இருபேரும் புறப்பட்டார் வெளியில்

பூலித்தேவன் நவாபிடம் கூறுவது

புறத்திலேயிருந்த புலித்தேவன் அப்போ
புலிக்குட்டி நவாபு சாய்பேது சொல்வானும்

68. வஞ்சகம்

ஆண்டவனே மம்முதலி சாய்பே உனது
அடிமை நானொரு வசனஞ் சொல்லுகிறேன்கேளு
எத்தனையோக மிருந்தாலும் இவர்கள்
பட்டோலே யெழுதுகிற வெள்ளாள ஜாதி
ஆண்டவர் நீர் கீழிருக்கையிலே அவர்கள்
ஆனைமேல் வருகிறது சம்மதியொ வுமக்கு
யானைவிட்டுக் கீழேயிறங்கி அவரைக்
கால் நடையாய் கூட்டிவரச் சொல்லுங்களென்று

ராமுவை தளவாய்களிடம் அனுப்புதல்

அர்க்கார ராமனையழைத்து துரை
ஆலோசித்து மம்முதலியேது சொல்வானும்
பிள்ளைமாரிருவரையும் ராமா இப்போ
கால்நடையாய் வரச்சொல்லி கூட்டிவாவென்முன்
ஒரு பட்டாளந்தன்னைக் கூட்டி ராமன்
உயரானை தும்பிக்கையை மால்பிடித்து
அரேபிள்ளை முல்லை மணிமார்பா நமது
அரசன் நவாபுதுரை சொல்லுகிறுரப்பா
ஆண்டவன் கீழிருக்கையிலே நீயும்
ஆனைமேல் வருகிறது சம்மதியோ உனக்கு
ஆனைவிட்டுக் கீழேயிறங்கென்று அப்போ
ஆயிரந்துப்பாக்கி குந்தாவினுலே
ஒரு பளித்தாயானையின்மேல் மோத பாதர்
உத்தமன் தாமோதரன் ஏறிட்டுப்பார்த்து
ஏறினுன் பஞ்ச கல்யாணி அப்போ
இடதுகையில் வாங்கினுன் ரண்டுமுகப்பட்டா
வலது கையிலேந்து மணிக்குறடா பாதர்
வாங்கியே கடிவாளந்துடை தனிலணைத்து
ஆனைதனை மூன்றுதரஞ் சுற்றி பாதர்
அதட்டி நவாபுதுரை பாளையத்தைப் பார்த்து
யானைவிட்டு விலகுவிலகென்று நல்ல
அழகானயானை தனையடிக்கிறுப் போலே
குதிரைதனை யடிக்கிறுப்போலே வைத்து
கொளுத்தினுன் நவாபு சனத்தின் மேற்பூசை 69
ஒருத்தரோடொருத்தர் தட்டுக்கெட்டு அவர்கள்
ஒருமிக்கப் பின்வாங்கி நெளிக்கும்வேளையிலே
அவுதாமேலிருந்த தளமந்திரி நல்ல
அதிவீரன் முல்லை மணித்தாண்டவராயன்

69. தளவாய் தாமோதரன் குதிரை மேலேறி யானையை அடிப்பது போல நவாபு படையை அடித்தான்.

மிஞ்சாதே பொறுபொறு தம்பி இது
வெள்ளைக்காரர் பெருந்தவிடம் தாமோதரம்பிள்ளை
ரண்டு ரேக்கலாவைத் திருப்பிவிட்டால் இது
பனங்காட்டு பாத்தியல்லாமுடனு காடுமுனையும்
மிஞ்சாதே பொறுபொறு தம்பி அது
வேளாளன் அர்க்கார ராமனையழைத்து
முப்பதுபொன் துப்பட்டா எடுத்து அப்போ
முதலான ராமனுடல் மேலே போர்த்தி
அன்ப துவாரசனையுமள்ளி அந்த
நாழிகையில் பாக்கு வெற்றிலை செலவுக்குக் கொடுத்து

ராமுவிடம் தளவாய் கூறல்

கஞ்சாவபின்தின்பான் தம்பி அவனுக்கு
கனமான சாகிபு பொல்லாத துடுக்கன்
அவன் செய்த குற்றத்தைதம்பி நீயும்
அறிக்கையிடாதே ராமா நவாபுதுரைக்கு
நானுமொருசேதி சொல்லுகிறேன் உங்கள்
நவாபுதுரைக்கு நீ சொல்லுபோ ராமு
அதிபதி செகபதியே சிங்கன் இங்கே
நரபதி சேதுபதி நாலுபதியல்லோ
நாலுபதி தன்னிலேநாமும் இப்போ
நாங்ளொரு பதிவந்து சேதுபதி சேர்ந்தோம்
கர்த்தாக்களுக்கு முன்னேபட்டம் வந்து
கனமான தென்னிலங்கா புரிதனிலே
சீதையை சிறைதனிலே வைக்க ராமா
சென்றுமே ராவணனைச் செயித்து
விபீஷணனுக்குப் பட்டங்கட்டி ராமர்
விரைவாக ராமேஸ்வரம் சேர்ந்து
ராமலிங்கத்தை பூசைசெய்து அன்றைக்கு
நலங்கொண்ட கோவிலுந்திரு மதில்கட்டி
சிவபத்தி மறவாதபேர்கள் வேணு
மென்றுசொல்ல ஸ்ரீராமர்தான் வைத்தபட்டம் 69a
துளவு மணிராமர் பட்டம்பெற்ற நாங்கள்
துரை நவாபவர்களிடம் பேட்டிக்கு வந்தால்
கால்நடையா வருவோமோராமா ராவரும்
கால்நடையாய் வரச்சொல்லி சொன்னரேயானல்
சந்திப்பு முறிந்துதடா போபோ உங்கள்
சாயபுகிட்ட மறுவயணஞ் சொல்லாடாராமா

69a– ராமநாதபுரம் பட்டம் பற்றிய புராணக்கதை. தங்களை ராமருடைய வரலாற்றோடு தொடர்பு படுத்திக்கொண்டுள்ளார்கள்.

திருப்பி விடடாயானை முகந்தெற்கே என்று
சிங்கா சனுதிபதி கூட்டினுன் பயணம்
போகாதே முல்லைமணிமார்பா ஒரு
உத்தரவு நவபிடங்கேட்டோடி வாரேன்
அவ்வளவில் பாளையத்தை நிறுத்து என்று
அர்க்காரராமனும் நடந்திட்டான் திரும்பி

ராமன் நவாபிடம் கூறல்

மம்முதலி சமூகத்தில் வந்து ராமன்
வகையான சொல்லை சொல்லலுற்ருனப்போ
ஆண்டவனே மம்முதலிதுரையே உனது
அடிமையொரு வசனம்நான் சொல்லுகிறேன்கேளு
அதிலொருத்தன் பட்டாணிபோல் வாருன் அவன்
அல்லாவை நினைக்கிருன் சொல்லமுடியாது
அவர்முகத்திலே கோபங்கள் துரையே அவன்
முன்னின்று மனிதரால் பார்க்கமுடியாது
அவனுட கைத்திக்கு துரையே நமது
ஆயிரங்கத்தியு மெதிரில்லை சாய்பு

பூலுவிடம் நவாபு கேட்பது

அறிந்து மிருப்பையடா பூலு அவ
ஞரடா மறுவயணஞ் சொல்லடா வென்ருன்
அவன் தானையா பெரிய வீட்டுக் காரன் அவன்
சேது தளகர்த்தன் தாமோதரம் பிள்ளை
வெட்டு நகை தாமோதரம் பிள்ளை சேதி
கட்டுங்கை முல்லை மணி தாண்டவராயன்
இரு பேரு மொன்ருகச் சேர்ந்தால் தேவ
இந்திரனும் வந்தால் வெல்லக் கூடாதென்ருன்
அதுக்குள்ளே ராமனு மெழுந்து பாதர்
ஆண்டவன் நவாபுக்குயேது சொல்வானும்

ராமு பேச்சு

ஆனை மேல் வந்த தளமந்திரி காப்பு
அவன் சொன்ன சங்கதியை சொல்லுகிறேன் கேளு
அதிபதி செகபதி சிங்கம் வர
நரபதி சேதுபதி நாலுபதி யுண்டு
நாலுபதி தனிலே துரையே அவர்கள்
தானுமொருத் தன் வந்து சேதுபதி சேர்ந்தார்

கர்த்தாக்களுக்கு[70] முன்னே பட்டம் பெற்று
கனமான தென்னிலங்காபுரி தனிலே
சீதையை ராவணன் எடுத்துக் கொண்டு போய்
தென்னில்ங்காபுரியில் சிறை வைத்த போது
ராமரெழுபது வெள்ளஞ் சேனே கூட்டி
ராவண சம்மார முடித்த மாத்திரத்தில்
சீதைதனே தேரின் மேலேற்றிக் கொண்டு
தென்னிலங்கை விபீஷணர்க்குப் பட்டமுங்கட்டி
ராமேசுவரம் வந்து சேர்ந்து பின்பு
ராமலிங்கத்தையவர் பூசையே செய்து
சிவபத்தி மறவா தோரிவர்கள் என்று
ஸ்ரீராமர் கொடுத்தாரா மறவறென்ற பட்டம்
நவாபு பேட்டிக்கு வந்தால் நாங்கள்
கால் நடையாக நடந்து வரமாட்டோம்
சந்திப்பு முறிந்து தடா போ போ உங்கள்
சாயபுகிட்ட மறுவயணஞ் சொல்லென்று சொல்லி
திருப்பினன் யானே முகம் தெற்கே நானுஞ்
சிங்கம் நவாபையிப்போ கேட்டோடி வாரேன்
அவ்வளவில் பாளையத்தை நிறுத்து என்று
அடிமை நான் மறுவயணஞ் சொல்லி விட்டு வாரேன்
இதற்கு மறுவயண மென்னய்யா சாய்பு அதை
இப்போதே சொல்லுமென்று கேட்டானே ராமன்

நவாபு தளவாய்களே யானேமேல் வரச்சொல்லுதல்

ஆனே மேல் வரச் சொல்லு ராமா என்று
அனேவர் புகழ் நவாபுதுரை சொல்லிவிட்டானப்போ
திரும்பினன் அர்க்காரராமன்
திடீலென்று பிள்ளே மார்சமுகத்தில் வந்து
இருவரையும் அவுதாவிலேற்றி எங்கள்
ஈஸ்வரன் நவாபு துரை வரச் சொன்னரையா
ஆனேயின் மேல் வாங்களென்று அந்த
அர்க்காரராமனும் உறுதியாய்ச் சொல்ல

தளவாய்கள் நவாபு முன் செல்லுதல்

இருபேரும் யானே மேலேறி முப்பத்
தேழாயிரஞ்சனத்தை முன்னே நடத்தி

---

70. மதுரை நாயக்கர்களுக்கு முன்னரே ராமநாதபுரம் அரசர்கள் பட்டம் பெற்றிருந்ததாகச் சொல்லுகிருர்கள்.

தேவேந்திரன் கொலுப் போலே அப்போ
தீடீரென்று பிள்ளைமார் நடந்திட்டாரப்போ
இரு பிள்ளை மார்களும் வந்து அங்கே
ஏழுபிள்ளை மாரிருக்குமிடத்தில் நின்று
ஆனைவிட்டுக் கீழேயிறங்கி தளவர்
அன்பாக வொன்பது தட்டெடுத்து வரச் சொல்லி
ஒரு தட்டிலொரு சோடு முத்து அப்போ
ஒரு தட்டிலொரு சோடு பச்சையும் வைத்து
ஒரு தட்டில் வைடூரியக் கல்லு அப்போ
ஒரு தட்டில் மரகத கல்லொன்று வைத்து
ஒரு தட்டிலாயிரம் பொன் முடிப்பு அப்போ
ஒரு மிக்கத் தட்டாலஞ் சேகரம் செய்து
தம்பி வா தாமோதரம் பிள்ளை நாலு
தட்டையெடுத்து வாவென்று சொன்னமாத்திரத்தில்
கங்கை குலம் வம்மிசம் அண்ணே நாமும்
காராளல்லவோ முல்லை மணிமார்பா
துலுக்கனுட சந்திக்கு போறோம் நமக்கு
சந்திப்பு எப்படி தெரியுமடா அண்ணே
எத்தனை உயர்ந்த குலமாய் நாம்
இருந்தாலும் குமார வர்க்க பிள்ளையென்று பேரு
திருச்சிராப்பள்ளிக்கு எவன் துரைதான் இந்த
தேசத்து பாளையக்காரரெல்லாம் பிள்ளை
தகப்பனுட வளைவுக்கு பிள்ளை வந்தால்
தனங்கொண்டு போய்வைந்து சலாம் பண்ணவேணும்
காரியங் கொள்ளுமட்டுந் தம்பி அவன்
காலையுங்கூட பிடிக்கவேணு மென்றான்
எனக்கொன்றுந் தெரியாது அண்ணே உனக்
கெப்படியிருக்குதோ அப்படிச்செய் என்றான்
அப்படியே நல்லது தம்பி நீயும்
அசையாமல் தட்டுகளை எடுத்துவாவென்று
இருபேரு மொன்பது தட்டெடுத்து ஏழு
பாராவையுங் கடந்து கூடாரம் வந்து

நவாபிடம் பேசுதல்

நவாபு சமூகத்தில் நின்று நல்ல
நலங்கொண்ட தங்கமலர் பொன்மலர் எடுத்து
தீபாசுகம் பலித்தில் வைத்து திருஷ்டிச்
சீலையைக் கையிலே சீக்கிரமெடுத்து
நவாபை மூன்றுதரஞ் சுற்றி சாயபு
நம்முடை சலாம் வருகுதென்று சலாம் செய்து

இருபேரும் விழுந்து சலாம் செய்து அப்போ
எழுந்திருந்து நவாபுசாயபு கையால் எடுத்து
தூக்கியே மார்போடணேத்து அப்போ
துரிதமாயிரு பேர்க்குமிருக்கவிடங் கொடுத்தார்
இருந்தபின் தாண்டவராயன் பாதர்
இயல்பான பறங்கிகளே கண்ணுலே கண்டு
படபடவென்று மிரண்டு மயலாகி அப்போ
பதறியே திரேகமெல்லாம் வேர்வையொழுக
லேஞ்சு கொண்டு வேர்வைதனே துடைத்து அப்போ
ரெண்டுபேரு விசிறிகொண்டு விசிறின மாத்திரத்தில்
ஆடுதே படபடவென்று மேலும் அதை
அருகில் நின்ற நவாபுதுரை ஏறிட்டுபார்த்து
பாளேயங் கண்டவுடனண்ணே எனக்குப்
பயமாகி யுடம்பெல்லாம் நடுங்குதென்ன வென்ருர்
களேயெறிந்து தாண்டவராயன் அப்போ
கண்திறந்து பார்த்தவனுமேது சொல்வாஞம்
தாய் வயிற்றிலே யிருந்த நானுஞ் சாய்பு
தரையில் விழுந்த நாள்முதலாய் எனக்கு
வந்ததொரு சன்னி நோக்காடு என்னே
மனிதர்கள் கற்றிலும் நெருங்கியே நின்ருல்
நடுக்க மெடுப்பதெல்லாம் போச்சு இப்போ
நலமாயுன்னிடங் கண்டாபோ லேயுனக்கு
இருந்ததொரு பயமெல்லாஞ் சாய்பு உனக்கு
எவ்வளவு மில்லாமலோடியே போச்சு
என்று தாண்டவராயன் சொல்ல நல்ல
இதமாக நவாபவருமேது சொல்வாராம்
சந்தனங் கொண்டுவரச் சொல்லி அப்போ
தயிரியமாய் பிள்ளேமார்க்கு பூச வேண்டுமென்று
ஒருபிடிவராகன் கலந்து வெள்ளி
கும்பாவில் சந்தனமுஞ் சவ்வாதுங் குழைத்து
பூசுங்களிரு பிள்ளேமாரும் என்று
புண்ணிய நபாபுதுரை முன்னெடுத்து வைத்தார்.
சந்தனம் பூசினேமேயாஞல் அந்தத்
தட்சணங்கட்டை வரட்டியெடுக்க வேணுஞ்சாய்பு
சன்னி நோக்காட்டுக்காக துரையே
சந்தனம் பூசுகிறதில்லே யென்று சொன்ஞன்
தாமோதரப் பிள்ளேயுமப்போது முல்லே
தாண்டவராயன் முகம் ஏறிட்டுபார்த்து
நவாபுக்கு காது கேட்காவிடில் இவர்கள்
நலமாக யிருவரும் வாய்சைகையாக

சந்தனம் பூசினலண்ணே நமது
சாதிக்கு ஏற்காதே மூல்லை மணிமார்பா
போபோ பேய்கொண்ட தம்பி உமது
புத்தியு மிவ்வளவோ தாமோதரம்பிள்ளை
சந்தனம் பூசினமேயானல் வெய்யில்
சலுகையிலே தண்ணீர் தாகமதுகாணும்
தண்ணீரு வேண்டுமென்று கேட்டால் அப்போ
தண்ணீரரண்மனையிலிருந்து கொண்டுவந்து
பிள்ளையென்று வந்தீரே நீங்கள் என்னுடைய
தண்ணீர் குடியுமென்று முன்னலே வைப்பான்
குடிக்கவேணும் தள்ளமுடியாது தம்பி
குபீரென்று சந்தனம் பட்டவிடமெல்லாம்
வெந்து விரிந்திடுந்தம்பி என்று
வேடிக்கையாய் ககத்துவாரி கூண்டைதிறந்து
வெளியிலே விட்டிட்டாப்போல் இந்த
வேடிக்கை நபாபு பார்த்தேது சொல்வாராம்
காட்டிலே திரியுமந்த குருவி இதை
என்னதுக்குக் கொண்டுவந்தாய் தாண்டவராயா
சொல்லுவாய் மூடுவதற்குள்ளே இரண்டு
கத்துவாரியை யெடுத்து சண்டைக்குவிட்டான்
ஒருசாம பரியந்தம் மட்டும் அது
ஒன்றுங்கொண்றெதிர்த்து நின்று சண்டைசெய்கிறதை
மம்முதலி கண்ணலே கண்டு பாதர்
மன்னவன் மனது மிகச் சந்தோஷமாகி
காட்டிலே திரியுமந்தக் குருவி இதுவுன்
கையிலே இவ்வளவு பழக்கமாயிருந்தால்
மனிதருன் கையிலகப்பட்டால் அவரை
என்னபாடு படுத்துவையோ தெரியாது நீயும்
என்று சொல்லி வாய் மூடுமுன்னே அப்போ
எண்ணிக்கையாய் மூன்று பணியாரமெடுத்து
பணியாரம் தரைதனி லெறிந்தான் அது
பாங்காக நெளியுறதைத் துரைமக்கள் பார்த்து
ஐந்தாறு வெள்ளைக்காரதுரைகள் அப்போ
ஐந்தாறு பணியாரங் கையிலெடுத்து
பிட்டதனைப் பார்த்தார்கள் துரைகள் சிட்டுக்
குருவியதனுள்ளிருந்து பறக்கிறதைக் கண்டு
சபாசு முல்லை மணிமார்பா இப்போ
தளமந்திரி மதிமந்திரி யுனக்கேதான் செல்லும்
இருபதிங்காத வழிதூரம் நீயும்
என்னைத் தேடிவந்தவகை சொல்லென்று கேட்டார்

தளவாய் கூறல்

ஆண்டவனே மம்முதலி சாய்பே உனது
அடிமைதானொரு வயணஞ்சொல்லுகிறேன் கேளும்
உம்முடைய அரண்மனையிலிருந்து முன்னே
உப்புத்தண்ணீர் தூக்கித் திரிந்தானே பயல்கானு
மதுரைக்கு துரையாக வந்து நல்ல
வைகை வள நாட்டையுமொருமிக்கக்கூட்டி
உமக்கு நான் கொடுக் கிறபணத்தை கானு
தனக்கங்கேதரச் சொல்லி சண்டைக்கு வாரான்
தகப்பனுக்கு வஞ்சனையாய்கானு இப்படி
தகாதகாரியஞ் செய்வதையுனக்கு சொல்லவந்தேன்

நாவபு கூறல்

இப்படி தாண்டவனுஞ் சொல்ல அதற்
கேது சொல்வார்மம் முதலி சாய்பு துரையவரும்
அரேபிள்ளை தாண்டவராயா பாதர்
அன்பாக வொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
ஏழரை வருஷங்களாச்சு நல்ல
இயல்பான கானனையும் மதுரைக் கனுப்பி
ஒரு காசுங் கொடுத்தனுப்பவில்லை எனக்கு
ஒரு பணமும் வடக்கு வந்து சேரவுமில்லை
வழிப்பாதை தெரியாமல் தாண்டா நானும்
தெற்கு முகம் போகாமலிருக்கிறேனிங்கே
தெற்கு முகம் வழிகாட்டிவிட்டால் நானுஞ்
சீக்கிரமாய் பாளையத்தைக் கூட்டி வந்திடுவேன்
நான் வாரேன் திசை மதுரை கோட்டை எனக்கு
நயமான பாக்கு வெற்றிலை செலவுக்கு உனது
சிவகங்கை பேட்டை தனையெனக்கு விட்டு
தரவேணு மென்று சொல்லி கேட்டார் நவாபு

தளவாய் கூறல்

சிவகங்கை பேட்டையுட வளப்பம் ராசா
சிங்கம் நபாபே நான் சொல்லுகிறேன் கேளு
ஐந்தாறு தேவடியாள் வீடு அதிலே
ஆரேழு பாப்பாரவீடு மங்கேயுண்டு
கூவவங்கே கோழி கிடையாது [71] வந்து
குலைக்கவும் நாயதிலே கிடையாது சொன்னேன்

71.- சிவகங்கைப் பேட்டையில் வருமானம் எதுவுமில்லை என்று தளவாய் சொல்லுகிறன்.

அதை விட்டு கொடுத்தென்ன வென்று நல்ல
வன்பரகக்காராளன் சொன்ன மாத்திரத்தில்
அதுபோனால் போகட்டும் பிள்ளை உனது
ஆருரு நாட்டை விட்டுத் தருவையோ வென்றான்
ஆரூர் நாட்டின் வளப்பம் பாதர்
ஆண்டவனே நவாபே நான் சொல்லுகிறேன் கேளும்
காட்டிலே லக்கிரிபிடுங்கி கள்ளர்
ஒட்டிலேய வித்தன்னை தின்பார்கள் சாய்பு
இந்தச் சேதி கேட்டாரேயானால் நம்மை
இருவரையும் வழிமறித்துக்குத்து வார்கள் கள்ளர்
அதுதான் போகட்டுந் தம்பி உனது
ராமநாதபுரக் கோட்டை தருவையோ என்றான் [72]
ராமநாதபுரக் கோட்டை வளப்பம் நமது
ராஜபரமேஸ்வரா சொல்லுகிறேன் கேளும்
ஒருபுறம் மண்ணாலே சுவரு அதிலே
யொருபுறம் வனந்திரக்காடதிலேயுண்டு
பதினைந்து ஊழியக்காரர் வீடு எங்கள்
சேதுபதி குழந்தை வந்திருக்கிறது அங்கே
ராசனிருக்கிற கிராமம் அதனை
நான் விட்டுத் தருவேனென்று சொல்வேனோதுரையே
இப்படி பிள்ளைமகன் சொல்ல நல்ல
இயல்பாக நவாபுதுரையேது சொல்லலுற்றார்

நவாபு கூறல்

தகப்பனுட வளவிற்குப் பிள்ளை வந்தால்
சாப்பிட வேணுமென்று சொன்னார் நவாபு
சாப்பிடமாட்டேனென்று நானும் சாய்பே
தாண்டவராயனுஞ் சொல்வேனே துரையே
முப்பது நாளைக்கு நோன்பெனக்கு நல்ல
முடிமன்னா தாண்டவராயாவென்று சொல்லி
கல்லிழைத்த பச்சை கலாத்து அப்போ
கனமான பிள்ளை மார்கைதனிலே கொடுத்து
நாலுவகை வெகுமதியுஞ் செய்து அப்போ
நவாபு துரையோசித்து சொல்லலுற்றாரப்போ
பிரட்டனொடு பனிரண்டு பட்டாளம் உனக்கும்
பின்கட்டு பாருவுமனுப்புகிறேனிப்போ

72. தெற்கு வந்து கானனை அடக்குவதற்கு சிவகங்கையிலுள்ள ஏதாவது ஒருகோட்டையை விட்டு கொடுக்க நவாபு கேட்கிறான். தளவாய் மறை முகமாக மறுக்கிறான்.

பிள்ளைமார் சிவகங்கைக்குப் பயணம்

முப்பது நோன்பு கழித்தவுடனே நானும்
வருகிறேன் திசை மதுரைக் கோட்டைதனை நோக்கி
இது சேதிமும் முதலி சொல்லி அப்போ
எழுந்திருந்து கோட்டை போய்ச் சேர்ந்தார் நவாபு
இருபிள்ளை மார்களுஞ் சேர்ந்து மெள்ள
இதமாக விடுதி வந்து சேர்ந்தார்களப்போ

கான்சாகிபு சிவகங்கை மீது படையெடுத்தல்

மதுரை வளர்கான் சாயபு நீலன் நல்ல
வரிசைபெறத் தேவடியில் வந்து நின்றுகொண்டு
மைத்துனன் வடக்கே போனனே அவன்
சீமைதனிலொருசாரி நடத்தவேணுமென்று
மறக்குதிரைமேற் சீனிவைத்து மதுரைக்
கான்சாய்பு கோட்டைவிட்டு வெளியில் வருகையிலே
ரேக்கலா ரெண்டையிழுத்து அதற்கு
நேரிட்ட மருந்து குண்டுவண்டியின் மேலேத்தி
மூவாயிரஞ் சனங்கானு அப்போ
முன்னூறு வூருக்குச் சீருக்குதிரையும் நடத்தி
மறக்குதிரை மேலேறிக்கொண்டு மதுரைக்
கான்சாய்பு சிலையுமான் புளியங்குளந்தாண்டி
மலையுமான் புளியங்குடிந்தாண்டி அப்போ
திருவாரூர் வீதியுமை தானந்தாண்டி
திருப்புவனக் கோட்டையிலே வந்து கானு
திடீரென்று கூடாரமடித்தாலோ துரையும்

திருப்புவனம் முற்றுகை

மூணு நல்லா மோர்சாவளத்தி அதிலே
முடிமன்னன் பீரங்கி மேலேத்திவைத்து[73]
மூடியே யொருபளித்தாதீர்த்து அப்போது
மூணுநாள் வரைக்குமே யிறைத்தானே குண்டு
திருப்புவனங் கோட்டை தன்னிலேதான் ஒரு
தேங்காயளவுமே யிடித்துவிழவில்லை
சுப்ரமண்ய தேவரதிலிருந்து நல்ல
துடியான வெங்கல பீரங்கியையிழுத்து

---

73. பீரங்கிமேடு- வரிசையாக மேடுகளை உண்டாக்கி அவற்றின் மீதுப் பீரங்கியை ஏற்றினன்.

முக்குறுணி மருந்து குண்டுபோட்டு அதற்கு
முதலான கிடாவெட்டி பொங்கலுமிட்டு
குபீலென்று ஒரு பளித்தாதீர்த்தான் அப்போ
கொட்டமிடுகான் சாய்பு கூடாரத்தெறிந்து
கூடாரக்கயிறு மறுந்து அப்போ
குபீலென்று ஏழுகுதிரைக் காலுந்தெறிந்து
ஏழெட்டுபேர்கள் தலையுடைய அப்போ
இதைதிகான் சாய்பு கண்ணாலே பார்த்து
நம்மைப் போலேயொரு மனிதன் இதிலே
இருக்கிறான் திருப்புவனம் வாங்கமுடியாது
திருப்புவனம் வாங்கமுடியாது என்று
சிவகங்கைமேல் சாரிநடந்திட்டான் கானன்
ராத்திரிக்கிராத்தியே நடந்து அப்போ
நலமான சிவகங்கைப் பேட்டை தனைவளைத்து
அரண்மனை அக்கினியாய்க் கொளுத்தி மறவர்
ஆறுகால் சவுக்கையை தீயாயெரித்து
மேல்வீட்டுக் கம்பளியை யெரித்து நானு
மீசையின் மேற்கைபோட்டு மேற்குமுகந்திருப்பி
பட்டணமெல்லாங் கொள்ளையடித்து அப்போ
படைமன்னன் கிழக்குமுகந்திருப்பியே கானன்

வேலூர்கள் கொள்ளை

தஞ்சாவூர் வெள்ளிக்குரிச்சி மறவர்
சமஸ்தான பாத்திவனூரரையுங் கொள்ளையடித்து
கானுரணி கணவாயை வெட்டி அப்போ
கான்சாய்பு நடந்திட்டான் திசைமதுரை கோட்டை
சந்திரகுல முத்து வடுகையர் அப்போ
சாமியும் காளையார் கோயிலிருந்து
தாண்டவராய பிள்ளைக்கு அவரும்
தயவாக காயுதமெழுத லுற்றாரப்போ

முத்துவடுகன் தாண்டவராயனுக்கு எழுதுதல்

அண்ணே வாதாண்டவராயா மதுரை
ஆளுகிற கான்சாய்பு சிவகங்கை வந்து
அரண்மனையை யக்கினியாய்க் கொளுத்தி நமது
ஆறுகால் சவுக்கையைத் தீயாயெரித்து
சீமையெல்லாங் கொள்ளையடித்து கானு
திசைமதுரைகோட்டையை போய்ச்
சேர்ந்திட்டானண்ணே

திரும்பலையோ கோட்டைவிட்டுத் தெற்கே என்று
சீக்கிரமாய் நிருபத்தை யனுப்பிவிட்டாரப்போ
வருகுதே வடுகையார் நிருபம் நல்ல
வளமிகுந்தர் திருக்கோட்டிக்குட்டி யுங்கடந்து
பொன்மலை மைதான வெளிதனிலே அப்போ
பிள்ளை மார்பக்கத்தில் வந்துதே நிருபம்
சாமியுட நிருபம் வந்ததென்று நல்ல
தளகர்த்த நிருபத்தை வாசித்துப் பார்த்து
மறுவயண விண்ணப்பமோலை எழுதி
வரவிட்டான் முல்லை மணித்தாண்டவராயன்

தளவாயின் பதில் கடிதம்

ஆண்டவனே முத்துவடுகையா உனது
அடிமைநான் மறுவயணஞ் சொல்லுகிறேன்கேளு
நவாபை நான்பேட்டி செய்தாச்சு சுவாமி
நாலுவகை வெகுமதியும் வாங்கினனடியேன்
ஐந்தாறு நாளையிலே சுவாமி அடியேன்
அதுவே தொழிலாயிருந்து பாளையத்தைக்கூட்டி
பிரட்டனையுங் கையோடேகூட்டி சுவாமி
பொன்மதுரைமேல் வந்திறங்குவேனடியேன்
எந்தெந்த சீமையழிந்தாலும் நமது
திருப்புவனக்கோட்டை பத்திரம் சுவாமி
ஆராரிறந்து போனாலும் சுவாமி
ஆண்டவர் மாத்திரம் கோயிலிருக்க
கோயில்விட்டு வெளியில்வர வேண்டாம் என்று
குறிப்பாக ஓலைதனையெழுதியேயனுப்பி
தாமோதரம்பிள்ளையை யழைக்க முல்லைத்
தாண்டவராய பிள்ளையேது சொல்வானும்

தளவாய்கள் கோட்டைக்குள் போக எண்ணுதல்

வந்துவெகு நாளாச்சுதம்பி நம்மை
மம்முதலி நவாபுசாயப ழைக்கவேயில்லை
கோட்டைக்குள் போகவேணுந்தம்பி என்று
கோபமாய் சேனைகட்கு பயணமென சொன்னான்
தாமோதரம் பிள்ளையுமப்போது தனது
தளங்களைக் கண்ணாலே ஏறிட்டுப்பார்த்து
அவ்வாறு விரற்கடை மருந்து துப்பாக்கிக்கு
அசையாத ரட்டைகுண்டு பாஞ்சுதென்றுசொல்லி

பதினேழாயிரஞ் சனத்தைநிறுத்தி அப்போ
பாங்காய் சனங்களுக்குறுதிகளைச் சொல்லி
பிள்ளைமார் குதிரை மேலேறி நல்ல
பிரியமாய்த் தெற்குகோட்டைத் தலைவாசல்வந்து
திடீரென்று கோட்டை வாயிற்குள்ளே அப்போ
சீக்கிரமாயிருபேரும் வரும் வேளை தனிலே
அர்க்கார ராமனேடிவந்து அப்போ
அரேபிள்ளை முத்து மணித்தாண்டவராயா
மம்முதலி யுத்தரவுயில்லை நீங்கள்
வரக்கூடாதென்று சொல்லித் தடுத்திட்டான்ராமன்
அப்போ தாண்டவராய பிள்ளை பார்த்து
அன்பாக ரா மனுக்கேது சொல்வானும்
தகப்பனது வளவிற்குப்பிள்ளை வந்தால்
தடைசொல்லித் தள்ளுவது நீதியோ ராமா
இப்படி தாண்டவனுஞ் சொல்ல ராமன்
இருமென்று நவாபு தேவடிக்குவந்து
ஆண்டவனே மும்முதலிசாய்பே உனது
அடிமை நாஞெருவயணஞ் சொல்லுகிறேன் கேளு
இருபிள்ளைமார்களும் வந்தால் அடியேன்
எதிர்கொண்டு குதிரைகாரன் ங்கையிலேபிடித்து
சாயபுடைய வுத்தரவுமில்லை நீங்கள்
சனத்தோடே வரக்கூடாதென்று நான்சொன்னேன்
அதைமிஞ்சிக் குதிரைமேலேறி அவர்கள்
அக்கிரமமாய் வருகிருரென்று சொன்ஞன் ராமன்
அப்போது மம்முதலிசாய்பு பாதர்
ஆலோசித்தேது சொல்லலுற்ருர்
நாலுதலைவாசலையுஞ் சுற்றி அப்போ
நலமான பாராவும் வைக்கவேசொல்லி
பட்டாளஞ்சுற்றிலும் வருக[74] அப்போ
பாட்சா நவாபுதுரை புறப்பட்டார் வெளியில்
இருபேருங்குதிரை விட்டிறங்கி அவர்கள்
எழுதரங்குனிந்துப் போகலாம் வாங்கிக்கொண்டு
இருபேருங் கைகட்டிநின்று நல்ல
இஷ்டமாய் துதித்தவர்கள் நிற்கும் வேளையிலே

நவாபு கூறல்

அரேபிள்ளை முல்லை மணிமார்பா நானும்
அன்பாக ஒருவசனஞ் சொல்லுகிறேன்கேளு

---

74. வர.

வரச்சொல்லியனுப்பு முன்னே நீங்கள்
வந்தவகையேதென்று கேட்டார் நபாபு

தளவாய் கூறல்

தகப்பனுட வளவிற்குப் பிள்ளை வந்தால்
தடையென்னவென்று சொல்லி வந்திட்டேனடியேன்
கோபுரங்கண்டு நான் துரையே அடியேன்
பாவங்கள் நீங்காமல் போவேனோ சாயபு
தகப்பனது அரண்மனையைப் பார்க்க நானும்
தடையொன்றில்லாமலே வந்திட்டேனடியேன்

நவாபு கூறல்

இப்படி தாண்டவனும் சொல்ல அதற்
கேதுசொல்வார் மம்முதலிசாய்பு துரையைப்போ
நீயிப்படி வந்தாலே இந்த
நிமிஷத்தில் நாலு தெருவீதியும் பார்த்து
சீக்கிரம் வெளியே போவென்று பாதர்
சிங்கம் நவாபுதுரை சொல்லிவிட்டானப்போ
இந்தமட்டுஞ் சொன்னதே போதும் என்று
எழும்பினான் தளத்தோடே பட்டணத்தைவிட்டு
வடக்கு தெருவீதியிலே வந்து தாயு
மானமலேதாண்டி வடபாரிசந்திரும்பி
சிந்தாமணித் தலைவாசல் வந்து இருவரும்
திடீரென்றுகாவேரி ஸ்நானமது பண்ணி
தளங்களை திருப்பியே வந்து அப்போ
தயவாகத்தான் கோட்டைக்குள்ளே வந்துசேர்ந்து
தாயுமானவர் கோவிலுக்கு வந்து தளவர்
தயிரியமாய்த் தரிசனஞ்செய்ய வேணுமென்று
ஐம்பதுபொன் குருக்கள் கையிலே கொடுத்து அந்த
நாழிகையிலபிஷேகஞ் செய்யவேணுமென்று
ஐம்பதுபொன் பதக்க மெடுத்து அந்த
நாழிகையில் சுவாமியின் கழுத்திலே தரித்து
மாலை சந்தனங்கையிலே வாங்கி அப்போ
மங்கம்மா அரண்மனையைக் கண்ணாலே பார்த்து
நபாபு தேவடியும் பார்த்து பாதர்
திடீரென்று கடைவீதி வருகையிலே

பண்டங்கள் கொள்ளை

கடலையவல் பொரியுண்டைகளுமே அங்கே
கடைகளில் தட்டுதட்டாக யிருக்கிறதைக் கண்டு
கருங்கச்சை சனங்களைப் பார்த்து அப்போ
கடைக்கண்ணை காட்டியே கைகாட்டிவிட்டான்
நெல்லரிசி வாருவார் சிலபேர் அங்கே
நேரிட்ட கடலைபொரி வாருவார் சிலபேர்
இப்படியே கொள்ளையவரடிக்க அப்போ
எங்கேயும் பொல்லாத கூச்சலுண்டாச்சு

நவாபு இதைக்கேட்டு வருதல்

பட்டணங் கொல்லென்று போச்சு அப்போ
பாட்சா நவாபு துரையிது சேதிகேட்டு
நாலுதலை வாசலையடுத்து அப்போ
லாயத்து குதிரைக்கு சீனிவைக்கச் சொல்லி
புறப்பட்டார் மம்முதலி சாயபு சுற்றி
போர்வீரர் வெள்ளைக்காரர் முன்னே நடக்க
வருகிறார் நவாபு துரையும் அப்போ
வலது கையிலேந்து பிடிகயிற்றை யெடுத்து
தாமோதரம் பிள்ளையுமப்போது முல்லை
தாண்டவராயனை ஏறிட்டுப்பார்த்து
என்னதான் சொன்னாலு மண்ணே நீயும்
எவ்வளவுமென் பேச்சை கேட்கிறதேயில்லை
மம்முதலி வருகிற கோவத்தை இப்போ
மன்னவனே தாமோதரம்பிள்ளை
போபோ பேய்கொண்ட தம்பி உனக்கு
புத்தியிவ்வளவோ தாமோதரம்பிள்ளை
நவாபையொரு வார்த்தையினால் கட்டி அவன்
கையிலே வெகுமதியும் வாங்காமற்போனால்
என்பேரு காராளனல்ல நான்
எடுத்ததும் தளகர்த்த மோதிரமுமல்ல
சொல்லியரை நாழிகைக்குள்ளாக நல்ல
துரைமகன் நவாபவரும் வந்துவிட்டாரருகில்
இருபேருங்குதிரை விட்டிறங்கி அப்போ
ஈஸ்பர நவாபுமுன் கைகட்டி நின்றார்
அரேபிள்ளை முல்லை மணிமார்பா உனக்கு
ஆரடா இந்தத் துடுக்குனக்குத் தந்தார்
ராசாவுமிங்கே நானிருக்க எனது
ராச்சியத்தை நீ கொள்ளையிடலாமோ

ஆண்டவனே மம்முதலி சாய்பே உமது
அடுமை நானொரு வயணஞ்சொல்லுகிறேன் கேளு
கரும்பு என் சீமையிலில்லை சாயபு
கடலை பொரியவலுண்டை கிடையாத தேசம்
நெல்லரிசி எங்கள் சீமையிலே இப்போ
எள்ளளவுங் கிடையாது மம்முதலி துரையே
அடுமை நான் சாப்பிடுஞ்சோறு இந்த
வரகரிசி சோறென்று சொன்ன மாத்திரத்தில்
ரண்டுபடி வரகரிசி யவிழ்த்து அப்போ
நேரிட்ட மம்முதலி முன்னாலே வைத்து
அரிசியைப் பார்க்க மனிதர் இவர்கள்
ஆசையாலோடி யெடுத்திட்டார் துரையே
இதற்கு நீர் கோபித்தேரானால் அடுமைக்
கெங்கே குடியிருப்பு மம்முதலி துரையே
அப்போது மம்முதலி பார்த்து ஒரு
ஆலோசனை செய்து சொல்லலுற்றார் துரையும்
செந்நெல் பெருத்ததுன்தேசம் என்று
முன்னமே புலித்தேவன் சொன்னானே எனக்கு
இப்படி சொல்லுகிறாய் நீயும் இதிலே
ஆர்பேச்சை நிசமென்று நம்புவேனானும்
நெல்லரிசி கிடையாதசேதி நீயும்
வந்ததே என்னிடத்தில் சொன்னையே யானால்
உன்சனத்துக் கெல்லாம்படி கொடுப்பேன் முன்னே
உத்தமனே சொல்லாமற்போனாய் என்னிடத்தில்
ரண்டுபை பணமதையெடுத்து அப்போ
நேசமுடன் தளமந்திரிகையில் கொடுத்து
இனசனத்துக்கெல்லாம் நெல்லரிசி தந்து
உத்தமனே படிகொடுமென்றுத்தரவு சொன்னார்
அப்போ தாண்டவராயன் சொல்வான் சுவாமி
ஆண்டவனே நவாபே நான்சொல்லுகிறேன் கேளும்
வந்துவெகு நாளாச்சு துரையே எனக்கு
மன்னவனே மறுவசனஞ் சொல்லுமென்று கேட்க

நவாபு படையெடுக்க உத்தரவிடல்

அப்போது மம்முதலி துரையும் பாதர்
அசையாத பிரட்டன் முகமேறிட்டுப் பார்த்து
வழிபாதை தெரியாமலிருந்தோம் நமக்கு
வழிகாட்ட வந்தார்களிரு பிள்ளைமாரும்
பன்னிரண்டு பட்டாளத்தைக் கூட்டி பிரட்டர்
பாளையங்கூட்டி வடதிசை மதுரைக்கு நோக்கி

நல்லதென்று வெள்ளைக்கார துரைகள் அப்போ
நலமான தம்பூரடித்துப் புறப்பட்டு
காக்காதோப்பு வெளி தனிலே வந்து
காசாகம்பளி சனத்தைக் கூடாரமிறக்கி
கொடிகளையுங் கொண்டுவந்து போட்டு பிரிட்டன்
கூடாரமடித்திட்டான் சொல்லப் போகாது
கானன் பீரங்கி பனிரெண்டு தனது
கறுப்புச் சட்டைக்காரரது பட்டாளமெட்டு
மூவாயிரந் துருப்புகுதிரை சேர்ந்து
முந்நூறு வண்டியில் மருந்து குண்டுமேற்றி
ரேக்லா முப்பதையுங் கூட்டி அப்போ
நேரிட்ட சாராய பீப்பாய்களுமேற்றி
மதுரைக்கு பயணமென்று பிரட்டன் நல்ல
உறுதியாய் கூடாரமிறங்கின மாத்திரத்தில்
தாமோதரம் பிள்ளை யுமப்போது முல்லைத்
தாண்டவராயன் முகம் நேரிட்டுப் பார்த்து
தொண்டிவழி நடந்தோமேயானல் போக
வெகுதூரம் வெகுநாள் செல்லுமேயண்ணே
துவரங்குரிச்சி வழி சென்ருல் மலைப்
பாதையது கல்லுமேல் வண்டியேருது
எந்தவழி போகலா மண்ணே என்று
இதமாக தாமோதரன் கேழ்க்குமளவிலே
தாண்டவராய தளமந்திரி நல்ல
சாதுரியமாய் வார்த்தை சொல்லுகிருனப்போ
அப்படியேஏன் போகவேணுந் தம்பி நமது
நடுச்சீமை வழியாகப் போவோமென்று சொன்னுன்
நடுச்சீமை வழியாகப் போனுல் நமது
தேசத்தை கண்ணுலே பார்ப்பானே பிரட்டன்
திரும்பி வரும்போது பெரிய பிரட்டன் நமது
தேசத்தில் தோரணங்கள் கட்டுவானேயென்ருன்
அப்படியே வழிக்கூட்டிப் போவேன் அந்த
அமைப்பு எனக்குத் தெரியுமோ தாமோதரம்பிள்ளை
ஒருவரையாகிலுங் காண்பிப்பேனே அவனுக்
குகந்துவழி தெரியவோ கூட்டுவேன் பாதர்
பகலெல்லாஞ் செடிக்குள்ளே யடிப்பேன் ராவில்
பாளையத்தை கூட்டுவேனென்று சொன்னுனப்போது

ராணுவம் பயணமாதல்

சொல்லியரை நாழிகைக்குள்ளே பிரட்டன்
துடியாகப் பாளையத்தை யெழுப்பினுன் பாதர்

ரிச்சடு கிரண்டன்* தளமும் அப்போ
அன்பான பாளையத்தை யெழுப்பினுன் பிரட்டன்
பொய் நிலைமைதான் வெளிதாண்டி தெற்கே
புறப்பட்டு ஆமூர்மைதான வெளிதாண்டி
குடுமி மாமலைக் கிழக்காக அப்போர்
குபீரென்று நெறிஞ்சிக் குடிப்பாதையும் கழித்து
கிழக்குமுகம் பாளையத்தை நடத்தி அப்போ
கீர்த்திபெறு திருமயத்தைக் கோட்டைக்குத் தெற்கே
குருவி கொண்டான் பட்டிவந்து சேர்ந்து பிரட்டன்
கூடாரமடித்தங்கே; பாளையத்தை நிறுத்தி
இறங்கியரை நாழிகையிற்குள்ளே தளவா
இருபேரும் பிரட்டனிட கூடாரம் வந்து
சிங்கமே துரை பெரியபிரட்டா ஒரு
சேதி நான் காராளன் சொல்லுகிறேன் கேளும்
மதுரையின்னும் பத்து நாழி வழிதான் நாமும்
வருஞ்சேதி கேட்டு வந்திடுவானே கானன்
பகலில் வழிநடக்கவே கூடாது நாமும்
ராத்திரிக்கு ராத்திரியே நடக்கவேணுமென்ருன்
நல்லதென்று துரை பெரிய பிரட்டன் சனத்தை
ராத்திரிக்கு ராத்திரியே பயணமென்று சொன்னுன்
பகலெல்லாங் கூடாரத்திலிருந்து சாயுங்
காலம் பயணமென்று சாப்பிட்டுப் போட்டு
தம்பூரு வாத்திய முழங்க சாயபு
தாம் பாளையம் பயணமென்று சொன்னுள்
குருவி கொண்டான் பட்டியுங்கழித்து தளவர்
கோட்டையின் மதுக்கூர்க் காட்டுப்பாதை வழிகூட்டி
ராத்திரிக்கு ராத்திரியே நடந்து அந்த
ராத்திரியில் பல்லென்று கிழக்கு வெளுக்கையிலே
பரகணிக்காட்டில் கொண்டுவந்து குதிரை
பாளையத்துடன் தளத்தையிறக்கினுன் காட்டில்
பகலெல்லாமங்கே கழித்து தளவர்
ராத்திரிக்கு ராத்திரி யெழுப்பினர் தளத்தை
பரகணி பாகுங் கடந்து
பனங்களம் தாலுக்கா தாண்டி
மங்ககுடிக் காட்டையுஞ் சீக்கிரமாய் தாண்டி நல்ல
மகாராஜன் பாளையத்தை ராத்திரியே கூட்டி
இராமேஸ்வரப் பாதையாக தளத்தை
இரவெல்லாந்தானடத்தி நெம்பலம் மைதானத்தில்

*Richard Grant

அப்போதுரை பெரிய பிரட்டன் தனது
அசையாத பாளையத்தைக் கொண்டுவந்திறங்கி
தளகர்த்தனே வரவழைத்து திருப்பூ
வனமெவ்வளவு தூரமென்று கேட்டான் பிரட்டன்
ஆண்டவனே துரை பெரிய பிரிட்டா நாம்
ஐந்துமணி வேளைக்குப் போகலாமென்று
பிரட்டன் பனிரெண்டு பட்டாளத்தை பாம்பைப்
பட்டியிலே கொண்டுவந்து நலமாகஇறக்கி
பகலெல்லாமங்கிருந்து போட்டு அப்போ
படை மன்னன் பாளையத்தை ராத்திரியிலெழுப்பி
திருப்பூவனங் கோட்டை வந்து சேர்ந்து அங்கே
சீராக பிரட்டனிட பட்டாளத்தையிறக்கி
முள்ளிய நெம்மலெனுமூரில் இரு
பிள்ளைமார்கள் பாளையத்தைக் கொண்டுவந்து சேர்த்தார்

கான்சாகிபு நவாபு சேனை வருவதையறிதல்

மதுரை வளர்கான் சாய்பு நீலன் பாதர்
வயணமாயிது சேதி காதாலே கேட்டு
தகப்பனுகிய பெரிய பிரட்டன் குதிரை
தளத்தோடு திருப்பூவனமிரங்கினு னென்றறிந்து
போதிகான் சாயவையு மழைத்து சீனி
வெள்ளைக்காரன் மெய்குந்தன் அநுமந்தனையழைத்து
தாதப்பனர ரசப்பனை[74a] யழைத்து கானு
சாய்புதுரை குதிரைக் கொல்லான் சீனிவைக்க சொல்லி

முன்னூறு குதிரைப்படையுடன் திரும்புவனம் செல்லுதல்

முந்நூறு துருப்பு குதிரையுடனே அப்போ
முடிமன்னன் கான்சாயபு புறப்பட்டான் வெளியில்
சிலையுமான் புளியங்குளந்தாண்டி நல்ல
திருவாத்தூர் மைதான வீதியுங் கடந்து
திருவளங் காட்டுக்குள்ளே வந்து தனது
சேனைகளை காட்டுக்குள் ளொளித்து வைத்துவிட்டு
தலையெட்டிப் பார்த்திரேயாமானல் உங்களைத்
தப்பாமல் பட்டாவால் வீசிவிடுவேன்கானு
அவனுக்கவன் பதனமென்று சொல்லி கானு
ஆணிச்சிக்கன வாயிலொளித்து வைத்திருந்தான்
பல்லென்று* கிழக்கு வெளுக்கையிலே பிரட்டன்
பட்டாளத்தை நிறுத்தி தாம்பூரடித்து

74 a. போதிகான், மெய்குந்தன், அனுமந்தன், தாதப்பன், ராசப்பன்—இவர்கள் ராணுவ அதிகாரிகள். வரலாற்று மனிதர்கள் அல்லர்.

* பலபல வென்று (பா. வ)

சனத்தை யெல்லா மலேபோலே நிறுத்தி அப்போ
தம்பூரு முழங்கியே கோட்டைக்குள் நுழைந்தான்
கோட்டைக்குள் பிரட்டன் போகுமுன்னே கானன்
குதிரைவிட்டுப் பாளேயத்தில் கலக்க வேணுமென்று
நடத்தினனூருக்குச் சீராய் குதிரை அந்த
நாழிகையில் திருப்பூவன குளக்கரைதாண்டி
வயல்வழியாய் குதிரைதனே விட்டு கானு
வருகிருன் திருப்பூவன ஆற்றுவழி நோக்கி

கான்சாகிபு பிரிட்டனது சேனேயைத் தாக்குதல்

முதல்பாராக்காரனேயும் வெட்டி ஒரு
நொடிக்குள் பட்டாளத்துள்ளே விழுந்து
கத்திமுனே ரத்தங்களொழுக அப்போ
கான்சாகிபு வருகிறதைக் கண்டானே பிரட்டன்
வந்திட்டான் கான்சாயபுவென்று பிரட்டன்
வரிசையாய்ப் பட்டாளத்தை மேற்கு முகந்திருப்பி
டொப்பி கழட்டியே கீழேயடிக்து பிரட்டன்
சுருக்காக முன்கைதனே கடித்தமாத்திரத்தில்
மூன்றணியாகப் பிரிந்து பட்டாளத்தை
முன்னேற்றிப் பிரம்பாலே மூட்டினன் பிரட்டன்
மண்வாரியிறைத் திட்டாப்போலே குண்டு
வருகிறதைத் திசை மதுரை கான்சாயபு பார்த்து

திருப்புவனப் போர்

ஒளித்து வைத்தான் பட்டாளத்தை பிரட்டன்
சேனேமேல் பாய்ந்திட்டான் கானன்
இரண்டு கையிலிரண்டு முதல்பட்டா பிடித்து
நேரான பிரட்டனிட பாளேயத்தில் விழுந்து
வீசினன் துரைமதுரை கானன் அப்போ
விழுகிற சிப்பாய் தலேகள் சொல்லப் போகாது
கையற்று விழுகிறது சிலது அங்கே
காலற்று விழுந்தபேர் சொல்லப் போகாது
தலேயற்று விழுகிறது சிலது அப்போ
தாறுமாருய் மூன்று துண்டாய் விழுகிறது சிலது
வெள்ளரிக்காய் வீசினற்போல பாதர்
வீசினன் சிப்பாய்களே பொல்லாத கானன்
துப்பாக்கி திரும்புவதற்குள்ளே பாய்ந்து
துடியாக வெட்டினன் திசைமதுரைகானன்

சோல்ஜர் தலைகளொரு கோடி அங்கே
துள்ளி விழுகிறதை சொல்லி முடியாது
தீன் தீனென்று[75] சொல்லி பாலர்
திரும்பியே நாலுமூலை வீசினன் பட்டாவை
பாணிபாணி[76] யென்று சொல்லி அப்போ
பதைத்து விழுகிறதே சிப்பாய்மார் தலைகள்
தண்ணீர் தண்ணீரென்று சொல்லி அங்கே
தவித்து முறையோரைச் சொல்ல முடியாது
ஓடுகுதே முழங்கால் ரத்தம் அதிலே
உருளுதே சிப்பாய் தலைகள் பனங்காய் போலே
மலைமேலே துருப்பு குதிரை அப்போ
மாளுதே பொல்லாத மைதான வெளியில்
சிப்பாய்கள் போனவழி தெரியவே இல்லை
குதிக்குதே சோல்ஜர் தலைகள் அங்கே
கூவுதே நாய் நரிகள் பிணங்களைத் தின்ன
சோல்ஜர்கள் போனவழி காணுமில்லை பின்பு
கத்தி கட்டி போன வழி காணும்
கர்னல் போன வழி தெரியவேயில்லை நல்ல
அவல்தார் போன வழி காணும்
அஜிட்டன்[77] போன வழி தெரியவேயில்லை அப்போ
சுபேதார் போன வழி காணும்
சோல்ஜர்கள் பட்டாளம் போன வழி காணும் பாதர்
அப்படி கான்சாயபு நீலன்
அறுத்த தலைகளென்றால் சொல்ல முடியாது கானு
கத்தியெல்லாம் ரத்தமாய் போச்சு
கனத்த தலைகுட்டையெல்லாம் ரத்தமாய் போச்சு
ரத்த கவுல் சுற்றியே வீச அப்போ
நராதிபன் கான்சாயபு மூர்ச்சையாய் நின்றான்
தளகர்த்தன் தானப்பநாய்க்கன் பாதர்
தயிரியமாய்ப் பதினைந்து குதிரையுடன் வந்து
கான்சாயபை கண்ணாலே கண்டு அப்போ
கட்டழகன் தாளப்பன் சலாம் வாங்கிக்கொண்டு
ஆண்டவனே கான்சாய்பு துரையே உனது
அடிமை நானொரு வசனஞ் சொல்லுகிறேன் கேளு

---

75. தீன், தீன்—கான்சாகிபுவின் போர்க் கோஷம். முஸ்லிம்கள் இவ்வாறு கூவிக்கொண்டே போர் செய்வார்கள்.
76. பாணி - தண்ணீர்.
77. அஜிட்டன்—Adjutant அட்ஜுடன்ட் என்ற ராணுவப்பதவி பிரிட்டிஷ் சேனையில்). ராணுவ அலுவலர்கள்: அவுல்தார், சுபேதார் சோல்ஜர். - இங்கிலீஷ் படைவீரர்.

தும்பூரு கோட்டைக்குச் சென்று நமது
சேது கான்பாபுக்கு பத்திரஞ் சொல்லி
மதுரை போய்ச் சேரவேணுமையா என்று
மடப்புரத்துக் கால்வாயில் கத்தியைக் கழுவி
கத்தியை யுரைதனிலே போட்டு அப்போ
கான்சாய்பு தும்பூரு கோட்டைக்கு வந்து

கான்சாகிபு பின் வாங்குதல்

சேதுகான் தன்னை வரவழைத்து கானன்
சேதியவனுக்கேது சொல்வானும்
பன்னிரண்டு சிப்பாயும் நல்ல
பண்பான வெள்ளைக்கார துரைகள்[78] ரிஜிமிட்டும்
மூவாயிரம் துருப்பு குதிரை தம்பி
முப்பது வெள்ளைக்கார பிரட்டன் துரையோடே
கர்னல் பீரங்கி பனிரண்டு அதிலே
கட்டான் துரைபட்டாளம் மூவாயிரம் சனங்கள்
ரேக்லா முப்பதுகூட இப்போ
நெருநெருத்துப் போகுதடா திருப்புவனக் கோட்டை
நாளை பனிரண்டு மணிவேளைக் கெல்லாம்
நமது தும்பூரு கோட்டைமேலே வருவாருமுண்டோ
தும்பூரு கோட்டை தளமென்று கானு
துரைமகனும் திசைமதுரைக் கோட்டை போய்ச்
சேர்ந்தான்

பிரிட்டன் யோசனை

அப்போது துரை பெரிய பிரட்டன் சனங்கள்
அனைவோரும் வந்தங்கே யொன்றுகச் சேர்ந்தார்
கண்டிட்டான் துரை பெரிய பிரட்டன் அப்போ
கண்சிவந்து பட்டாளத்தை எண்ணிக்கை பார்த்தான்
மூன்று பட்டாளம் வரைக்கும் இப்போ
முதல் சண்டை கானுகையால் விழுந்துபோச்சு தென்று

மதுரைக்கு வழிகாட்டக் கேட்டல்

சனத்தையெல்லா மெண்ணிக் கொண்டு அப்போ
தளகர்த்திருவரையுமழைத்து வரச்சொல்லி
அரேபிள்ளை முல்லை மணிமார்பா இப்போது
அழைத்து வந்து பட்டாளத்தை காவுகொடுத்தாயே

78. ரிஜிமிட்—ரெஜிமெண்டு - Regiment—ஆங்கிலப்படைப்பகுதி.(அணி)

மதுரைக்கு வழிகாட்டும் பிள்ளே கானு
மன்னனுடைய சௌந்தரியத்தை நான்பார்க்கவேணும்
அப்போது தாண்டவராயன் பாதர்
ஆளக் கொண்டான் கரைதனுக்கனுப்ப
பண்டிக்கிடாபிடித்து வரச்சொல்லி *அப்போ
பாட்சாதி பிரட்டனுக்குத் தீனி *கொடுத்தான்
தீனிதின்று கைகழுவிக் கொண்டு பிரட்டன்
சிப்பாய்மார்களுக்கு தைரியங்கள் சொல்லி
நடத்தினன் பத்துகளந்தன்னே அந்த
நாழிகையில் திருவாதவூர் வந்திட்டான் பிரட்டன்
நாலுபுறம் பாராவும் வைத்து தளத்தை
நடுவிட்டு மத்தாப்பு நாலுபுறம் போட்டு
ராத்திரியில் சாக்கிரதையா யிருந்தார் கானு
ராசாதிபதியிந்த சேதிகளேக் கேட்டு
முந்நூறு குதிரை சீனிவைத்து கானு
மோதுகான் சாய்பையுங் கையோடேயழைத்து
சீனிச்சிராவையுமழைத்து தனது
திசைமதுரை கோட்டை விட்டு வடக்குமுகம் நோக்கி
தும்பூரு கோட்டைக்குள் நுழைந்து கானு
துரை பேசாமலொளித்திருந்தானப் போது
அப்போ துரை பெரிய பிரிட்டன் பாதர்
அழகான பாளேயத்தை சுற்றுவரும் போது
பல்லென்று பொழுது விடிந்தது அப்போ
பட்டாளம் பயனமென்று உதிதரவுமாச்சு
திருவாதவூர் மைதானம்தாண்டி தளங்கள்

காட்டில் போர்

தும்பூருகாட்டில் நுழைந்து வருகையிலே
கனமான திசை மதுரைகோட்டை கானு
கலந்திட்டான் குதிரையின் பிரட்டன் பாளேயத்தில்
வந்திட்டான் சாய்பென்று சொல்லி பிரட்டன்
வலது கையிலந்த மொழிப் பிரம்புதனே தாங்கி
பட்டாளம் பளீலென்று சொன்னன் அப்போ
படபடென்று பீரங்கி கொளுத்திவிட்டார் துரைகள்
மண்மாரி பொழியுது துப்பாக்கி ரண்டு
வண்டிமேல் ரேக்லா திருப்பினர் பிரட்டன்
சோளப்பொரி பொரித்தது போலே அப்போ
சொல்லமுடியாது ரேக்லாகுண்டு

* விலங்கின் உணவு. வெள்ளேக்காரன் உணவைத் தீனி என்றார்.

மலையைப் பிளக்குதுகுண்டு அங்கே
மண்வாரிக் கொட்டுதே ரேக்லாகுண்டு
கண்டானே திசைமதுரை கானன் அப்போ
கையினில் இரண்டுமுகப் பட்டாவையெடுத்து
வீசினன் பாளையத்தில் விழுந்து கானன்
வீரியமாய் துப்பாக்கிக்குண் டுக்கஞ்சாமல்
துப்பாக்கி யெடுப்பதற்குள்ளே பாதர்
சொல்லி சொல்லி மாட்டுருன் திசைமதுரைகானன்
பீரங்கி திருப்புவதற்குள்ளே அங்கே
புலிபோலே வீசுருன் பொல்லாத கானன்
கத்திரிக்காயறுத் தெறிந்தாப்போலே அப்போ
கண்டபடி வீசுருன் கான்சாய்பு நீலன்
பனங்காட்டு மைதானமெல்லாம் அப்போ
பனங்காய் போலுருளுதே சிப்பாய்கள் தலைகள்
ஓடுதே பட்டாளமெல்லாம் அப்போ
உத்தமன் கான்சாய்பு துரத்தியே யடித்தான்
ஐந்துகும்பினி சிப்பாய்மார்கள் அங்கே
அதமா விழுந்திட்டார் பனங்காட்டு மன்னன்
மூன்றேமுக்கால் நாழிகைக்குள்ளே கானன்
எதிரோடிநிர்த் தூளியாயடித்து
திரும்பியே திசைமதுரை கானன் பாதர்
தீரன் கான்சாய்பு துரையரண்மனை போய்ச்சேர்ந்தான்

பிரிட்டன் வருத்தம்

மகாராசன் துரைபெரிய பிரட்டன் அப்போ
மற்றதோர் சிப்பாய்களைக் கண்ணாலே கண்டு
எண்ணிக்கை பார்த்திட்டானப்போ அதிலே
ஏழுகும்பினி சனம் குறைந்ததைக் கண்டு
வேலிக்கு நான்வைத்த முள்ளு இதிலே
காலுக்குப் பகையாக வந்ததென்று[79] சொல்லி
ஆண்பிள்ளை கான்சாய்பு நீலன் என்று
அரசர்புகழ் பிரட்டனுஞ் சந்தோஷப்பட்டு
மதுரைக்குப் பயணமென்று சொல்லி அப்போ
மன்னவன் பிரட்டன்முகம் ஏறிட்டுப்பார்த்து

தளவாய் யோசனை

தளமந்திரி தாண்டவராயன் பாதர்
தைரியமாய் பிரட்டன்முகம் யேறிட்டுப்பார்த்து

79—பழமொழி.

பிசகாலே வினையைவைத்து போனுன் துரையே
பின்னுலே சேனைகட்கு மோசம்வரும் சாமி
தும்பூரு கோட்டையை வாங்கி நல்ல
துரைமகனே திசைமதுரை சேரவேணுமென்முன்
நல்லதென்று துரைபெரிய பிரட்டன் தளத்தை
நடத்தியே தும்புருகோட்டை வந்துசேர்ந்து
நாலுபுறம் பாளையத்தை யிறக்கி அந்த
நாழியில் மோர்சாவில் பீரங்கி யேற்றி
திடீரென்று ஒரு பளுத்தாதீர்த்தான் அப்போ
சேருகான பகல்முழுதும் எதிர்த்துப்போராடி
சாயங்காலம் யோசனைகள் செய்து தனது
சமேதாரவுல் தாரையழைத்தேது சொல்வான்
ராத்திரி கிருக்கக்கூடாது இருந்தால்
தப்பாமல் தலையறுப்பான் பிரட்டனென்று சொல்லி
ராத்திரியே பாளையத்தைக் கூட்டி வெகுசாய்
நடத்திட்டான் திசைமதுரை விடியுமுன்னேலே
கோட்டையலே யொருத்தருமில்லை அப்போ
கூடாமல் தும்பூருக் கோட்டைக்குள்ளே
பாளையத்தை நடத்திவைத்து அப்போ
பாங்கான மதுரைக்குப் பயணமென்று சொல்லி
நடத்தியே பட்டாளந்தன்னை அந்த
நாழிகையில் தெப்பக்குளம் வெளிக்குத் தெற்காக
அடித்தானே கூடாரம் பிரட்டன் அந்த
நாழிகையில் பிள்ளைமார் பாளையத்தையிறக்கி
ஐந்து நாழிகைக்குள் பிரட்டன் பாதர்
அன்பாக வந்ததைக் கண்டானே கானு
இத்தனை பாளையங்களையும் பாதர்
எட்டுநாளைக்குள்ளே யடிப்பேன் நான்கானு

கான்சாகிபு சபதம்

பதினைந்து நாழிகைக்குள்ளாக தளத்தை
பஞ்சு பஞ்சாயடிப்பேனுன் தானப்பநாயக்கா
பிரட்டனெரு தலையிருக்குமானுல் அவன்
பிடிப்பாண்டா யெப்படியுந் திசைமதுரை கோட்டை
பிரட்டனுட தலைவிழுந்துபோனுல் அப்போ
பருந்தெடுத்த குஞ்சல்லோ மம்முதலிசாய்பு
ஆர்க்காடு சென்ன பட்டணம் வரைக்கும் அப்போ
அடித்திடுவேன் ஆற்காட்டை பிடித்திடுவேனும்
சுபேதாரவுல் தாருமாரே நீங்கள்
சொன்னபடி கேழ்க்கிறேன் சிப்பாய்மாரே

அண்ணனில்லே தம்பியில்லே யெனக்கு இப்போ
ஆதரவு கோட்டைக்கு ளொருத்தருமில்லே
உங்களேயே நம்பினேனுனும் எனக்கு
ஒருவர் துணேயில்லேயடா சிப்பாய்மாரே
மாசத்துக்கொன்பது ரூபாய்[80] சம்பளம்
வாங்கியே தின்றீரே சிப்பாய்மாரே
ஐந்தாறு நாளேக்கு நீங்கள் நித்திரை
ஆகாரமெல்லாம் விட்டிடுங்கள் சொன்னேன்
பெண்டாட்டி ஆசைவைத்த பேர்கள் என்
பின்னுல் வரவேண்டாம் சிப்பாய்மாரே
இந்தச்சண்டை கெலித்தேனேயானுல் உங்களுக்கு
இருவது பொன்னுத் தியோகங் கொடுக்கிறேநானுங்
கைகளுக்கு தங்கக்காப்பு போட்டு உங்களே
சனமாக வைக்கிறேன் சிப்பாய்மாரே
என்று சொல்லி கான்சாய்பு துரையும் இப்போ
இதமாக ராமலிங்க கொல்லனேயழைத்து
நாலு வெகுமதியுஞ் செய்து அப்போ
நலமாக பீரங்கி திருப்பிவிடச் சொன்னுன்

கோட்டைக்குள்ளிருந்து போர்

திருப்பியே பாளேயத்துமேலே கொல்லன்
தீர்த்திட்டான்குண்டு போட்டைந்தாறு வேட்டு
பாத்திட்டான் பொல்லாத பிரட்டன் அப்போ
பட்டாளம் பளீரென்று உத்திரவுபண்ணி
ஒன்பது வெங்கல பீரங்கி துப்பாக்கி
ஒன்றுமோர்ஜாமேல் திருப்பினுன் பிரட்டன்
பிரட்டன்துரை பீரங்கிதிருப்பி அப்போ
பிணக்காடாயடிக்கிருன் பொன்மதுரை தன்னே
கானனே திருப்பிய பீரங்கி அங்கே
கணக்கில்லே தெப்பகுளங் கொள்ளவில்லே குண்டு
மானங் கவுந்திட்டாப் போல அங்கே
வருகிறதே பிரட்டனிட பீரங்கிகுண்டு
நெல்லுபொரி பொரித்தது போலே அப்போ
நிலந்தாவிக் கொல்லுதே சஞ்சீவிகுண்டு
சோளப்பொரி பொரித்தது போலே பிரட்டன்
சொல்லி சொல்லி அடிக்கிருன் பீரங்கிகுண்டு
கிழக்குமுகம் கொத்தளந்தனிலே ஒரு
குறுக்கு மூலேக்கோட்டைதனே யிடித்தான் பிரட்டன்

80. அக்காலச் சம்பளம் சிப்பாய்க்கு 9 ரூபாய். மானம்—வானம்.

பகலெல்லாம் பிரட்டனிடித் திட்டான் கானன்
ராத்திரி முப்பதுக்குள் கட்டிமுடிப்பானும்
இடிக்கவே யெடுத்தெடுத்துக் கட்டி கானன்
இருந்து சமாளித்தானொரு மாதம் வரைக்கும்
பகலிலே கோட்டையைப் பிடித்து பிரட்டன்
பல்லென்று விடிந்தவுடன் பார்த்திட்டானப்போ
பழையபடி மதுராபுரிக் கோட்டை இருக்க
பார்த்திட்டான் பொல்லாததுரை பெரிய பிரட்டன்
இப்படியே கானு தைரியந்தான் நல்ல
தென்று சொல்லி ராத்திரியில் கள்ளச் சண்டை
செய்தான்
தம்பூருயடியாதபடிக்குத் தனது
புள்ளாங்குழலங் கூதாதபடிக்கு
ஏழுபட்டாளத்தைக் கூட்டி வண்டியில்
ஏழுரேக்லாவேற்றி சீக்கிரமிருந்து
ராத்திரி பனிரண்டுமணிக்கு பிரட்டன்
ராசாதிபதி வந்து மதிலோரஞ் சேர்ந்தான்
முழங்குதே பீரங்கி முனைவேட்டு அப்போ
வீரன் கான்சாய்பு நீலனுங்கேட்டு
ராத்திரிக்கு ராத்திரித்தானே தனது
லாயத்துக்குத் திரைக்குத் தீனிவைக்கச் சொல்லி
பனிரண்டுமணி வேளைக்கெல்லாம் கானு
பாட்சாதிராதிரியில் மதிலோரந்தன்னில்
ஆயுதந்தனையுருவிக் கொண்டு கானன்
அதட்டியே பாளையத்தில் நுழைந்த மாத்திரத்தில்

வண்டியூர் மைதானத்தில் போர்

வந்திட்டான் கான்சாய்புவென்று பிரட்டன்
மகாராசன் பட்டாளத்தை பளீரென்று சொன்னான்
ஆற்றுவெளிகுதிரைகளை நடத்தி கானு
ஆண்பிள்ளை கைகலந்தான் வண்டியூர் வெளியில்
வீசினான் பொல்லாத கானன் அப்போ
விழுகு தேசிப்பாய்தலைகளொரு நூறு
குடல்சரிந்து விழுவாரும் அப்போ
குண்டிக்கால் சரிந்துமே தரையில் விழுவாரும்
இதுகண்டு துரை பெரிய பிரட்டன் தலையில்
இருந்த தொப்பியை யெடுத்து தரையிலடித்து
முன்கையைச் சீக்கிரம் கடித்து பிரிட்டன்
முனையாக கொல்வோமென்று சொன்னான்

முழங்குதே பீரங்கி வேட்டு அப்போ
மூவாயிரம் துப்பாக்கி பொழியுதே மலேமேல்
என்னென்று நெருப்பாயொத்தாலும் கானன்
எண்ணல் மூன்று குதிரையுடன்வந்து
ஐந்துக்கும் பினிசனத்தைக் கொன்று கானன்
அப்போதே சேர்த்திட்டான் திசை மதுரைகோட்டை
பட்டாளத்தை யொன்ருகச் சேர்த்து பிரட்டன்
பாட்சா நவாபுக்கு எழுதினுனேலே

பிரிட்டன் நவாபுக்குக் கடிதம் எழுதுதல்

மணிக்கட்டிக் காயுதமெழுதி பிரட்டன்
மகாராசனனுப்பினுன் திருச்சிரப்பள்ளிக்கு
தொண்ணூறு நாழிகைக்குள்ளே வந்து
சுருக்கமாகச் சேர்ந்தது திருச்சினுப்பள்ளியில்
சாயங்கால வேலேயில் நவாபு தனது
தளத்துக்கெதிராக நிற்கும் வேளேயிலே
மணிக்காகிதம் வந்து சேர அப்போ
மம்முதலி நவாப்புசாயபு வாசித்து பார்த்து
இப்படித்தான் துரைதனே யழைத்து மகனேப்
பார்த்துக்கோவென்று சொல்லிச் சொன்னுர் நாவபு

நவாபு மதுரைக்குப் புறப்படல்

நான்போறேன் திசை மதுரைகேட்டை வர
நாலு மாசமோ நாலு வருஷமோ தெரியாது
திருச்சினுப் பள்ளியரண்மனேயும் பாதர்
சிங்கமே பதனமென்று மம்முதலி துரையும்
முப்பது பட்டாளஞ்சனமூம் நல்ல
மூனுரிஜிமெண்டு சோல்ஜர்தார்மாரும்
வெகு சனமுங் கொண்டு பீரங்கி அப்போ
வெடிகுண்டு புகைகுண்டு பீரங்கியேத்தி
ரேக்லா முப்பது வரைக்கும் அதிலே
நேய மூவாயுரந் துருப்புக்குதிரை
கானல் பீரங்கியையும் நடத்தி தனது
கனமான துரைமார்கள் பட்டாளமத்தனேயும்
ஏறினுரெயில் வண்டி [81] மேலே சாயபு
ஈஸ்வரன் நவாபுதுரை நடந்த மாத்திரத்தில்

81—கான்சாகிபு போர்கள் நடந்த காலத்தில் ரயில்வண்டி கிடையாது. பிற்காலப் பாடகர்கள் கதை சொல்லும் பொழுது சேர்த்துக் கொண்டது.

மருந்து பொடிப் பீப்பாய்கள் முதலாய் தனது
வண்டியின் மேல் குண்டுகளுஞ் சாராயமுமேற்றி
கொடிமுரசு தம்பூரடிக்க அப்போ
*கோஷ்டமிட்டே துலுக்கப்பட்டாளஞ் சூழ
வெள்ளை வெண்சாமரந்துலங்க நல்ல
விருதுபெற்ற சிங்கக்கொடி முன்னின்றிலங்க
அடிபடுதே குச்சிதம்பூரு அப்போ
ஆண்டவன் நவாபுதுரை புறப்பட்டான்
அளுந்தூர் வீதியுந்தாண்டி தனது
ஆஸ்தான விராலிமலைத் தொங்கலிலே வந்து
துவரங்குறிச்சியிலியிறங்கி பாதர்
துரை பெரிய பிரிட்டனுக் காயிதமனுப்பி
நத்தத்து லிங்கையனையழைத்து அப்போ
நம்மன் குரிச்சிப்பூச் சேனையை யழைத்து
கருங்குளத்து நம்மைய நாய்க்கர் நல்ல
கனமான முள்ளிபட்டி முத்தப்ப நாய்க்கர்
ராமகிரிசாமைய நாய்க்கர் பாதர்
நலமான தோகைமலை பசவப்பா நாய்க்கர்
மாமுண்டி லெக்கைய நாய்க்கர் இப்போ
வார்த்தையொன்று சொல்லுகிறேன் கவனமாய்க்கேளும்
நான் போறேன் திசைமதுரைக் கோட்டை நீங்கள்
நாளைக்குச் சேனைகளை யொன்றுகச் சேர்த்து
மதுரை வந்து சேரவேணு மென்று அப்போ
மம்முதலி துரையங்கேவுத்தரவு பண்ணி

மதுரைக்குப் பயணம்

துவரங்குரிச்சியுந்தாண்டி நல்ல
துடியாக நத்தத்து வீதியுந்தாண்டி
நத்தத்து மைதானமுந்தாண்டி அந்த
நாழிகையிலழகர் மலைக் கொம்பையுந்தாண்டி
ஆனைமலை முந்தலும் விட்டு நல்ல
அசையாத தேவனூர் மைதானம் சேர்ந்து
இறங்கினார் மம்முதலிசாய்பு அப்போ
இயலான பட்டாளமெல்லாமிறங்கி

கூடாரமடித்தல்

இரண்டு நாழிகை வழிவிஸ்தாரம் அங்கே
நலமான கூடாரமடித்திட்டாரே

* கோஷ்டம்—கோஷம்

ஒரு நெட்டு* கருப்பு கூடாரம் அதிலே
ஒரு நெட்டு செங்காவி கூடாரமடித்து
ஐந்து நாழிகை விஸ்தாரம் சாயபு
ஆள் சுற்றிப் பாராவுஞ் சீக்கிரமாய் வைத்து
*ரோந்துகளுஞ் சுற்றி வரச் சொல்லி சாயபு
நூறுபேர் சோல்ஜர்கள் கையில் கத்திகொடுத்து
பாராவுஞ் சீக்கிரமாய் வைத்து தனது
பாளையத்தை சாக்கிரதையாய் வைத்திருக்கையிலே

கான் சாகிபுவின் பட்டாளத்தைத் தாக்குதல்

மதுரைவளர் கான்சாயபு நீலன் இந்த
வகையாக மம்முதலி வந்தவகை கேட்டு
தாதப்பனரசப்பனுய்க்கன் தனக்குச்
சரியான சேகுகான் பாவையுமழைத்து
முரசு வெள்ளைக் காரனையுமழைத்து கானு
முன்னிறுத்தி துரைமார்க்கு ஏது சொல்லலுற்ருன்
தேனூரில் மம்முதலி வந்தான் நானும்
சீக்கிரத்தில் ராத்திரிக்கு பேட்டி பண்ணிவாரேன்
நான்போய் திரும்பி வருமட்டும் பிரிட்டன்
ராசாதிபதி துரைக்குப் பத்திரங்கோட்டை
என்று சொல்லி துரைகானு சாயபு குதிரை
எழுநூறு வரைக்குமே சீனிவைக்கச் சொல்லி
பனிரெண்டு மணிவேளைக் கெல்லாம் கானு
பார்த்திட்டான் குதிரைகளை வடக்கு முகம் நோக்கி
ராத்திரியே குதிரையை நடத்தி கானு
ரண்டாம் பேரறியாமல் பாளையத்தையடித்து
ஒளிவாக யிருந்திட்டானப்போ விடிய
ஒண்ணரை நாழிகைக்கு முன்னதாய் துரைகள்
அன்பான கர்னல் துரையும் அதிலே
அக்கினி மயமான முசியார் பரங்கி துரையும்
சின்னபிரிட்டனுஞ் சேர்த்து அப்போ
துரைமார்கள் சிப்பாய்மார்களை வரிசையாய் நிறுத்தி
அடிச்சிட்டார் குச்சித்தம்பூரு எங்கும்
அதிருதே மைதான வெளி யெல்லாமப்போ
இது கேட்டு மதுரை துரைகானு சனத்தை
எழுப்பியே குதிரையின்மேல் சீக்கிரமாயேறி

---

* நெட்டு—வரிசை
* ரோந்து—round என்பதன் திரிபு

முதல் பாராக்காரனையும் வெட்டி ஒரு
*மூச்சுக்குள்ளே பாய்ந்து பாளையத்தில் விழுந்து
இன்னம் வேறு நினைப்பு நினையாமல் கானு
எழுநூறு குதிரையிலே பாய்ந்திட்டானப்போ
நீர்த்துளியாடி வரும்போது பாளையம்
நெளிப்பதை மம்முதலி கண்ணுலே கண்டு
கால்பதறி மோசம் வந்ததென்று அப்போ
கனமான மம்முதலி மூர்ச்சையாய் விழுந்தார்
கண்டார்கள் துரைமார்களப்போ
கனகமுடி மன்னனை பல்லக்கில் வைத்து
தும்பூரு கோட்டையினுள்ளே பாதர்
துரைமகன் நவாபு தன்னைத் தோத்தமாத்திரத்தில்
கலந்திட்டான் சாயபு வென்று மன்னன்
கனம் பெற்ற துரைமார்களணியணியாய் நின்று
முசியார் பரங்கி வெள்ளைக்காரன் களத்தை
முன்னெற்றி தொப்பி கழற்றிக் கீழேயடித்து
முன்கையை சீக்கிரங்கடித்து அப்போ
மூன்றணியாய் சனம் வகுத்து முட்டினன் சண்டை
எள்ளுபொறி கொள்ளு பொறிபோலே அங்கே
ஏறுதே பொல்லாத ரேக்லாகுண்டு
துப்பாக்கி சத்தத்தையங்கே பார்த்து
சொல்லவே போகாது மைதானவெளியில்
அத்தனை குண்டிலே கானன் பயந்து
அஞ்சாதே வெட்டினன் பொல்லாத கானன்
வெள்ளரிக்காய் போலே கானன் அப்போ
வீசி வீசயெறிந்திட்டான் சொல்லமுடியாது
கத்தியெல்லாம் ரத்தமாயொழுக வெட்டி
கலைத்திட்டான் பாளையத்தை நிர்த்தூளியாக
ஐந்து கும்பினி சிப்பாய் மாணி கானு
அறுத்துமே குதிரைகளை நறுக்கி
துண்டு துண்டாக குதிரைகளை நறுக்கி அப்போ
துரைமகன் திருப்பினன் திசைமதுரை நோக்கி
தும்பூரிலிருந்த நவாபு திரும்பிச்
சுருக்காகப் பாளையத்தை சீக்கிரம் பார்த்து
அதிவீரன் கான்சாயபு கையால் அங்கே
ஐந்து கும்பினி சனம் விழுந்ததைப் பார்த்து
ஆண்பிள்ளை கெட்டியென்று சொல்லி நல்ல
அதிவீரன் துரைமார்க்கு தைரியஞ் சொல்லி

* மூச்சுக்குள்ளே—மூச்சுவிடுமுன்—விஞடிக்குள்

மேசை பலகையிலிருந்து பாதர்
முனைவீரன் பிரிட்டனுக்கெழுதினார் நவாபு

நவாபு பிரிட்டனுக்குக் கடிதம் எழுதுதல்

பசுமலை கானன் வாரானும் நீயும்
பட்டாளந் துருப்போடேயெதிர் கட்டிமறைத்து
திருப்பவேணும் கானனைக் கிழக்கே என்று
சிங்கார பிரிட்டனுக் கெழுதினார் நவாபு

கானன் — பிரிட்டன் போர்

ஆயிரம் சனம்வரைக்குங் கூட்டி கானன்
அறுபது துருப்பு குதிரையுங் கூட்டி
ஏழு நல்ல பீரங்கியோடே கானன்
எண்ணாமல் சாமந்தனில் வெளியிலிறங்கி
ராத்திரியெல்லாம் வழிமறித்து கண்ட
பேருக்குத் தெரியாமல் ஒளிவாயிருந்தான்
அப்போது துரை பெரிய பிரிட்டன் பாதர்
ஆண்பிள்ளை பல்லக்கு மேலேறிக்கொண்டு
பட்டாளத்தை முன்னே நடத்தி பிரிட்டன்
பசுமலைக்குப் பாளையத்தை நடத்தின வேளையிலே
எதிர்காட்டி கான்சாயபு துரையும் அப்போ
எழுப்பினான் பீரங்கி சொல்ல முடியாது
அதிலே பனிரெண்டு சிப்பாய்கள் தலைகள்
அதிர்வேட்டினாலறுந்த கூச்சலுமுண்டாக
அப்போது துரை பெரிய பிரிட்டன் சனங்கள்
அலங்கோலமானதைக் கண்ணாலே கண்டு
பல்லக்கு விட்டு கீழேயிறங்கி அப்போ
படைமன்னன் பஞ்ச கல்யாணியின் மேலேறி
பிரம்புதனைக் கையிலே வாங்கி பிரிட்டன்
பின்னிட்ட சனங்களை வாங்கிட்டான் பளுத்தா
முன்னேறி தீனதீனென்று சொல்லி சனங்கள்
முழித்துப் பாராமலே நடக்குதே மேற்கு
ஊ[illegible]வென்ன சோல்தார் துரைகள் அப்போ
ஒழுங்காகத் தொப்பி கழட்டியடித்து
மன்கையை கடத்தல்லோ துரைகள் அங்கே
முனை[illegible] பசுமலை நோக்கி நடந்து வந்திறங்கி
நவாபு சமுகத்தை நோக்கி அந்த
நாழிகையில் பல்லக்கு விட்டு கீழேயிறங்கி
தொப்பி கழட்டி சலாம் வாங்கிக் கொண்டார் அப்போ
துடியான நவாபு சாய்பேது சொல்லலுற்றார்

வாங்கலேயோ திசைமதுரைக் கோட்டை என்று
மம்முதலி வெகு கோபமாகவே சொல்ல

நவாபு — பிரிட்டன் சந்திப்பு

ஆண்டவனே மம்முதலி துரையே பிரிட்டன்
அன்பாக ஒரு சேதி சொல்லுகிறேன் கேளும்
ஆட்டுக்கிடாதனிலே சாய்பு எனக்கு
ஐந்தாறு கிடாயாவது கொடுக்க வேண்டும்
எண்ணைக் கிடாவிலே சாய்பு எனக்கு
எழுபது கிடாக்கறியுமிப்போது கொடுத்து
ஏழு வண்டி சாராயங் கொடுத்தால் மதுரையை
எட்டு நாளைக்குள்ளே பிடிக்கிறேன் சிங்கம்
என்று சொல்லி பொல்லாத பிரிட்டன் அப்போ
எல்லோரையுங் கூட்டியே மதுரை வந்து சேர்ந்து

மதுரைக் கோட்டை முற்றுகை

மூலைக்கரை கொத்தளத்து மேலே அப்போ
மோர்சாவையப்போ சீக்கிரம் வளர்த்தி
எழுநல்ல மோர்சா வளர்த்தி அதற்கு
ஏழு மூன்றிருபத்தொரு பீரங்கியேற்றி
மூட்டினான் பீரங்கி சப்தம் வேட்டு
முழங்குதே கோட்டை மேல் மழைமாரி போலே
மூலைக்கரை கொத்தளத்தை நோக்கி குண்டு
மோதினதைக் கண்டல்லோ மதுரை துரைகானன்
படை மன்னர் தங்களையழைத்து கானு
பயம்பிறக்க வொரு வயணமேது சொல்வானும்
பகலெல்லாம் பிரிட்டனிடித்ததுவை நீங்கள்
ராத்திரிக்கு ராத்திரியே காட்டவேணுமென்று
இடிக்க எடுத் தெடுத்துக்கட்டி அதிலே
இருந்து சமாளித்தான் மதுரை துரை கானன்
இது கண்டு துரை பெரிய பிரிட்டன் அப்போ
சமர்செய்த சேதிகளை சீக்கிரமெழுதி
சிங்கமே கான்சாய்பு நீலா ஒரு
சேதி நான் பிரிட்டனிப்போ சொல்லுகிறேன் கேளு
இன்னமு முன்பேரிலேகானு குண்டு
எண்ணியொரு நூறிப்போ போட்டேனேயானல்
அதமாகி போவையடா கானு என்று
அப்போதே யெழுதியே யனுப்பிவிட்டான் பிரிட்டன்
மறுவயணம் மதுரை துரைகானு அப்போ
வயணமொரு சேதியெழுதலுற்ருனப்போ

லட்சங்குண்டு மெவ்வளவு பிரிட்டா இன்னும்
அம்பதினுயிரங்குண்டு அடித்தாலும் பிரிட்டா
அதற்கெல்லாம் பயப்பட மாட்டேன் உன்கையா
லானமட்டும் பாரென் றெழுதினுன் கானன்
பகலெல்லாம் பிரிட்டனி டித்ததனே கானன்
ராத்திரிக்கு ராத்திரியே கட்டிமுடிப்பானும்
இடிக்க அவனெடுத்தெடுத்துக் கட்டி அதிலே
இருந்து சமாளித்தான் வெகுநாள் வரைக்கும்

நவாபு மதுரை வருதல்

தேனூரிலிருந்த நவாபு மதுரை
சேர்ந்தவுடன் மைதானத்தில் கூடாரமடித்து
பாளையமிறக்கினுர் நவாபு அதை
பாட்சாதிகான் சாய்பு பார்த்தேது சொல்வான்
மேற்குமுகம் பாராவிருந்தோரைப் பார்த்து
மூலைக்கோட்டைக் கொத்தளம் பத்திரமென்று
பாராயிருக்கும் வேளையிலே பாதர்
ஜன்னல் துரை பிரிட்டனும் நச்சுக் *குழாயெடுத்து
ஏறிட்டு கிழக்கு முகம்பார்த்து பிரிட்டன்
எதிரில் நிற்கும் சிப்பாய்கட்கேது சொல்வானும்
மீனுட்சி சன்னதிச்செதிராப் நமக்கு
செயமில்லை மதுராபுரிக் கோட்டைக்கென்று சொல்லி
பசுமலைக்குப் போகவேணுமென்று தனது
பாளையத்தை நடத்தினுன் மேற்குமுகம் நோக்கி
அப்போ கான்சாய்பு நீலன் பாதர்
அனல்குண்டு புகைகுண்டு மூட்டிக்கொள் பிரிட்டா
கலங்காமால் நினைத்து நானிருந்தால் அப்போ
கானென்று மனதிலே நினைத்துக் கொள்ளென்று
மன்னவன் காயிதத்திலெழுதி கானன்
மகாராஜன் பிரிட்டனுக் கனுப்பினுனப்போ
அப்போது துரை பெரிய பிரட்டன் அதற்கு
அனுப்பிய காயிதத்தை வசசித்துப் பார்த்து
ஏழுந்தல்லோ மோர்சா வளர்த்தி அதற்கு
ஏழு மூன்றிருபத்தொரு பீரங்கியேற்றி
மெழுகுச்சீலை° கூடாரமடித்து பிரிட்டன்
மூட்டினுன் பீரங்கி செல்லமுடியாது
வெம்பிச்சன் குண்டுமொருபக்கம் அதிலே
வெடிகுண்டு புகைகுண்டு மூட்டினுன் பிரிட்டன்

---

* நச்சுக்குழாய்—டெலிஸ்கோப்
° மெழுகுச் சீலை—டார்பாலின்

கோட்டைக்குள் சனம் பொறுக்காமல் அப்போ
குபீரென்று மீனாட்சி கோயிலுக்கு வந்து
ஜனங்களெல்லாம் நின்று தவிக்கிறதை பாதர்
பெலமான கான்சாய்பு கண்ணாலேகண்டு
ரெண்டு கையில் நிமிசாவை வாங்கி கானு
நேரிட்ட மூலைக்கரை கொத்தளத்தைப்பார்த்து
இன்றைக்குக் கோட்டை பிழைத்தாக்கால் நாள்
எட்டானாலும் பிரிட்டனால் வாங்கமுடியாது
பத்திரம் சிப்பாயிமாரே என்று
பாட்சாதிகான் சாய்பு அரண்மனைபோய்ச் சேர்ந்தான்

கோட்டைக்குச் சுரங்கம் வெட்டச் சொல்லுதல்

மகாராஜன் பெரிய துரை பிரிட்டன் அப்போ
வகையான கோட்டைக்குச் சுரங்கம் வெட்டச் சொல்லி
சுரங்கம் வெட்டின மாத்திரத்தில் பிரிட்டன்
துடியாகமம் முதலி சமுகத்தில் வந்து
ஐந்துநாள் கொள்ளை கொடுவென்று பாதர்
அனைவர் புகழ் நவாவைக் கேட்டிட்டான் பிரிட்டன்
அப்போது மம்முதலிசாய்பு பாதர்
ஆலோசனைகள் செய்துயேது சொல்லலுற்றான்
மதுராபுரி பிடிப்பையேயானால் அப்போ
வைத்துக் கொள்ளைந்து நாள் கொள்ளை[82] யென்று
சொன்னார்
மம்முதலி யுத்தரவு பெற்று பாதர்
மதிபதி பிரிட்டனும் சிக்கிரம் நடந்து
கூடாரந்தனில் வந்து சேர்ந்து பிரிட்டன்
கும்பலாய் சிப்பாய்மார்களைக் கூட்டி
ஆளுக்கொரு பிடிவராகன் கொடுத்து அப்போ
அனைவர்க்கும் தைரியம் வெகுவாகச் சொல்லி
சனங்களுக்கு உறுதிதனைச் சொல்லி பிரிட்டன்
தயாராக ஏழுபட்டாளத்தைக் கூட்டி
எழுநூறு சோல்ஜர்களுடனே அப்போ
ஏணிமரம் பனிரண்டு கொண்டு வரச் சொல்லி

சுரங்க வழியாய் கோட்டைக்குச் செல்லுதல்

முன்னூறு வைக்கோல் பிரிவாங்கி பிரிட்டன்
முடிமன்னன் புறப்பட்டான் சொல்லப்போகாது

82. ஒரு கோட்டையைப் பிடித்தவுடன் நாலைந்துநாள் கொள்ளையடிக்க ராணுவத்திற்கு அனுமதி அளிக்கப்படும். அப்பொழுது கொள்ளையடித்த தெல்லாம் கொள்ளையடித்தவருக்குச் சொந்தமாகும்.

இறங்கினுன் சுரங்கத்து வழியே பிரிட்டன்
இதமாக ரண்டுகையில் நிமிசாவை வாங்கி
நாலுமுகஞ் சோதித்துப் பார்த்து அப்போ
நலமான பிரிட்டனும் வரும் வேளை தனிலே
விடியைந்து நாழிகையிருக்கும் அப்பேர்
விருதுபெற்ற கானனும் அரண்மனைக்கு வந்து
கத்திபடே சாயபுகையில் கொடுத்து மதுரை
கான்சாய்பு நீலனும் நித்திரை போனுன்
அப்போது சுரங்கத்தின் வழியாய் பிரிட்டன்
இறங்கினுன் சனத்தோடு சொல்லமுடியாது
அகழிக்கு வைக்கோல் பிரியடைத்து பாதர்
அன்பான யேணிதனை கோட்டையின்மேல் சாற்றி
சாராய வெறிகொண்ட பிரிட்டன் சனத்தை
சாற்றினுன் பிரம்பாலே யேறினுர்மேலே
தீன்தீன் தீனென்று சொல்லி சனங்கள்
சீக்கிரமாய் மூலைக்கோட்டை கொத்தளமேலேறி
மூலக்கரை கொத்தளத்தைப் பிடித்தார் அப்போ
முனைவீரன் பிரிட்டனுஞ் செங்கோலையன்றி
மூட்டினுன் குச்சித்தம் பூரு பிரிட்டன்
மூன்றுதரந் தம்பூரை முழங்கின மாத்திரத்தில்
அப்போது திசைமதுரை மீனுள் கானுக்
கழிவுவந்து நேர்ந்ததென்று மனதிலே யெண்ணி
பார்ப்பாரப் பெண்போலே வந்து கானு
பாதகன் தலைமாட்டில் பார்வதியும்[83] நின்று
சுற்றும்வினை வந்திருக்கையிலே உனக்கு
சுகமோடா நித்திரைகான் சாயபு நீலா
என்று மார்புதனிலடித் திட்டாள்மீனுள் அப்போ
மன்மதன் கான்சாயபு திடீரென்றெழுந்து
படேசாயபை யெழுப்பாதபடிக்கு கானி
மகாராசன் ரண்டுகையில் நிமிசாவை வாங்கி
மின்கட்டுப் பாராவுந் தாண்டி கானு
மூலைக்கரை கொத்தளத்தை நோக்கி வரும்போது
தானுதுரை சிப்பாயி யொருவன் வந்து
கானுதுரை நீலனை சலாம்வாங்கிக் கொண்டு
ஆண்டவனே கான்சாயபு துரையே
ஆண்பிள்ளை துரை பிரட்டன் மூலைக் கோட்டையேறி
தம்பூரு மூன்றுதரமடித்து கோட்டை
தலைமூலைக்கரைதனைப் பிடித்திட்டான் பிரிட்டன்

83. இந்த சமயத்தினரான பாடகர் இப் புனை கதையை அமைத்துப் புகுத்தியுள்ளார்.

அத்தெரிப்பான் சோதுலவுண்டி* கானு
ஆண்பிள்ளை சிங்கம் நானிங்கேயிருக்க
மூலக்கரை வாங்கினனென்று லவுண்டி
முன்னலே யெண்ணமல் கொல்லலாமோ வென்று
முதல் வெட்டு அவனையங்கே ஒரு

மூலக்கரை கொத்தளத்தில் சண்டை

மூச்சுக்குள் கொத்தளத்தின் மூலைக்கு வந்து
சிக்கந்தர் சாயபை நினைத்து அப்போ
திடீலென்று படிக்கட்டிலேறும் வேளையிலே
கொத்தளத்தின் மேலிருந்து பிரிட்டன் அப்போ
குபீரென்று பீரங்கி நேராத் திருப்பி
குட்டுப் போட்டொரு பலித்தா அடித்தான் கானு
கூசாமல் படிக்கட்டின் மீதேறிவந்து
முனைக்கத்தி வீசினன் கானன் அப்போ
முந்நூறு பேருடைய தலையறுந்து வீழ
வீசினன் பொல்லாத கானன் அப்போ
விழுகுதே சிப்பாய்தலைகள் பனங்காய் போலே
கண்டபடி வீசினன் கானன் அப்போ
கருப்புசட்டை சிப்பாய்களெல்லோரும் பயந்து
டோரவை கையிலே பிடித்து ஜனங்கள்
நேராகயேணி வழியிறங்கி வரும்போது
கானனது சொந்த சிப்பாய்கள் அப்போ
கனமான மூலக்கரை சேர்ந்த மாத்திரத்தில்
கொம்மைக்கு மூன்றுபேருமாக அங்கே
கொத்தளத்தின் மதில் வழியாய் போய் நின்றுகொண்டு
அகழியிலிறங்கின சனத்தை கானு
அதமாக வெட்டியே நிர்த்தூளி பண்ணி
தாறுமாருய் வெட்டியிழுத்தெறிந்தான் அப்போ
சனங்களெல்லாங் கூச்சலிட்டோடினர் சிலபேர்
பிணக்காடாய் போச்சுதே மதுரை பாதர்
பிரிட்டன் துரையப் போது பல்லைக் கடித்து
கனமான நச்சுக்குழாய்[84] எடுத்து மூலைக்
கரை நோக்கிப் பார்த்தவுடன் குதிரையின் மேலே
பசுமலையை நோக்கி வருகையிலே பாதர்
படைவீரன் கான்சாயபு ஏறிட்டுப் பார்த்து

* இழிவான வசவுச் சொல்.
84. நச்சுக்குழாய்—டெலஸ்கோப்.

*பிஸ்தோல் துப்பாக்கியை யெடுத்து கானன்
+பிலமாக வொன்றைத் தோட்டாவும் போட்டு

பிரிட்டனுக்குக் காயம் படுதல்

குபீரென்று பிரிட்டன் மாருக்குக் கானன்
கோபமாயொரு பலித்தாதீர்த் திட்டானப்போ
உருளைதனிலொரு குண்டு தைக்க பிரிட்டன்
உபாயமாய் பல்லக்கு மேலேறிக் கொண்டு
பசுமலைக்கு வந்த மாத்திரத்தில் பிரிட்டன்
பாட்சாவுங் காயம்பட்ட சேதிதனைக் கேட்டு
காயம்பட்ட பிரிட்டன் துரையே அப்போ
மனமான மம்முதலி கண்ணாலே பார்த்து
பிரிட்டனுக்குக் காயம்பட்டு போச்சு இனி
பலனில்லை பாளையத்துக் கென்றார் நவாபு
டாகு[85] துரை தன்னைக் கையிலே கொடுத்து அப்போ
நானூறு விராகனைக் கையிலே கொடுத்து
எண்ணியெட்டு நாளையிலே பிரிட்டன் துரையே
எழுந்திருந்து ஒரு சாரி சண்டைக்கு நடந்தால்
பதினாயிரம் பொன்பெற்ற கிராமம் உமக்குப்
பாட்சா தருகிறேனென்றார் நவாபு
நல்லதென்று டாக்டர் துரையும் அந்த
நாழிகை மருந்துகட்டி காயங்களற்ற

கேமல் என்பவன் பிரிட்டன் காயம் ஆறாமல் செய்தல்

ஆறிபோன சங்கதி தன்னை கேமல்
ஆண்பிள்ளையிது சேதி காதாலே கேட்டு
புலிமயிரைக் கையிலே எடுத்து கேமல்
பிரிட்டனது கூடாரம் நோக்கியே வந்து
காயத்தைக் கண்ணாலே கண்டு பிரிட்டன்
காயமும் பட்டுதோ வென்று சொல்லிக் கேட்டு
காயத்தைக் கையாலே தொட்டு கேமல்
கண்வளரும் புண்வாயில் புலிமயிரை வைத்து
சீக்கிரமாய் கேமலுந் திரும்பி அப்போ
சீரான கூடாரஞ் சேர்ந்திட்டான் கேமல்[86]

---

*பிஸ்தோல்—pistol — கைத் துப்பாக்கி
+பிலமாக—பலமாக (மதுரை பா.வ)
85. டாகுதுரை—டாக்டர்.
86. கேமல் ஒரு அதிகாரி. இவன் பிரிட்டன் காயம் ஆறாமல் சாகச் சதி செய்தான். கான்சாகிபு கையாளாகச் செயல் பட்டானா அல்லது, பிரிட்டன் பதவி தனக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் செய்தானா என்று விளங்கவில்லை.

பிரிட்டன் துரைக்குப்பட்ட காயம் அப்போ
புண்ணுகி பொல்லாத தொந்தரவுண்டாகி
மன்னவனிறந்தானே பனிரண்டு மணிக்கு பிரிட்டன்
மாராட்ட மயக்கங்கள் கண்டு
பிரிட்டன் துரையிறந்த சேதி அப்போ

மம்முதலி திரும்பிப் போக எண்ணுதல்

புண்ணியன் நவாபு துரை காதிலே கேட்டு
பிரிட்டன் துரை விழுந்து போனுனே இனி
பலனில்லை பாளையத்துக் கென்றெண்ணி மனதில்
பாளையமிங்கேயிருக்கட்டும் நாளை
பயணமென்று மம்முதலி சொன்ன மாத்திரத்தில்

தளவாய் கூறல்

தாண்டவராய பிள்ளை கேட்டு அப்போ
தயவாக மம்முதலி துரையே
ஆண்டவனே மம்முதலி துரையே இப்போ
அன்பாக ஒரு வசனஞ் சொல்லுகிறேன் கேளு
பதினெட்டுப் பாளையக்காரரும் பிரிட்டன்
பட்டாளம் பனிரண்டு பசுமலையிருக்க
முப்பது பட்டாளத்துடனே இங்கே
முடிமன்னு கோட்டை விட்டு வந்தீர் நவாபே
கானனை பிடியாமல் போனுல் நம்மை
கண்டபடி ஏய்ப்பார்கள் பாளையக்காரர்கள்
பின்னுலே திருச்சினுபள்ளிக்கு கானு
பாளையத்தை கூட்டியே வந்திடுவானென்முன்
இது சேதி மம்முதலி கேட்டு தனது
இருதயங் கலங்கியே நவாபு துரையும்

சண்டை செய்ய முடிவு

என்ன செய்யலாம் பிள்ளைமாரே என்று
ஈஸ்வர நவாபு துரை கேட்டுட்டாரப் போது
தாண்டவராயபிள்ளை அப்போ பாதர்
அதிபதி நவாபுதுரை யேறிட்டுப்பார்த்து
பாளையமும் நீருமிங்கேயிருந்து கொஞ்சம்
மாருட்டமாகவே சண்டை செய்தீராஞல்
எண்ணியெட்டு நாளைக்குள்ளாக வெளியில்
இழுக்கிறேன் கான்சாயபை பிடிக்கிறேனென்முன்
அது கேட்டு மம்முதலி சாய்பு பாதர்
இஞ்சிநீர்க் கேமலை[87] வரவழைக்கச்சொல்லி

87. இஞ்சிநீர்க் கேமல் — எஞ்சினியர் கேமல்

சும்மாயிருந்தோமேயானால் இந்த
திசை மதுரை சமஸ்தானம் பிடித்திடுவதெப்போ
இந்த சேதி கேட்டவுடன் கேமல் அப்போ
ஏழு பீரங்கிமோர் ஜாமேலேற்றி
மூட்டினன் பீரங்கி வேட்டு ரட்டைக்
கோபுரங்களிடிந்தப்போ மட்டமாய்ப் போச்சு
இதுகண்டு மதுரை துரைகானு அப்போ
இயலான தன்னுடைய சிப்பாய்களைப் பார்த்து
என்னென்று நெருப்பா யெரித்தாலும் கேம
லேற்றியல்லோ திசைபிடிக்க வேணுமப்போ
பிரிட்டனொரு தலையிருக்குமட்டும் பாதர்
பிடிப்பானென்றெண்ணினேன் திசைமதுரைகோட்டை
பிரிட்டன்துரை விழுந்து போனனிப்போ என்று

கான்சாகிபு உறுதி

பிரம்பு கையிலெடுத்தானே கான்சாயபு நீலன்
கத்திபடே சாயபுகையில் கொடுத்து துரை
கான்சாயபு அந்தமொழி பிரம்பு கையிலெடுத்து
பொக்கிஷ வீட்டைத்திறந்து கானு
புகழ்பெற்ற வெள்ளிப்பாளமெடுத்துக் கொண்டுவந்து
பாக்குபோல் வெள்ளியை யுருக்கி குண்டு
பாட்சாதி கான்துரை சீக்கிரமுடித்து
கானனுட சவுரியந்தன்னை குண்டில்
கண்டப்போ எழுதினன் கான்சாயபு நீலன்
பனிரண்டு வருஷத்துக்குண்டு மருந்து
பட்டாக்கத்திகள் முதல் தயாராயிருக்க
என்னுடனெதிர்த்து சண்டைசெய்ய உன்னைப்போல்
எழுபது நவாபுகள் வந்தெதிர்த்தாலும்
*துளாயிரம் மதுரை நகர்க்கொம்பை அதிலே
ஒரு கொம்பையாகிலுங் கொடுப்பேனோ பாதர்
வீணிலே ஜனங்களுருமால் திரும்பி
மீண்டு போவென்று பளித்தா தீர்த்திட்டான் கானன்
கூடாரத்தருகாகக் குண்டு அப்போ
குபீலென்று விழுந்ததை நவாபுதுரை கண்டு

கடிதம் வருதல்

குண்டுகளையெடுத்து வரச்சொல்லி பாதர்
குபீலென்று விழுந்ததை நவாபுதுரை கண்டு

* துளாயிரம் - தொள்ளாயிரம்

குண்டுகளை யெடுத்துவரச்சொல்லி பாதர்
குபீலென்று மம்முதலி வாசித்துப்பார்த்து
வேலிக்கி நான் போட்டமுள்ளு இப்போ
காலுக்குப் பகையாக வந்துதேயெனக்கு
பிள்ளையென்று நினைத்திருந்தேன் கானே இப்போ
புலியாயெதிர்த்தானே கான்சாயபுவென்று
நாலுமுகம் பாளையத்தை வளைத்து சண்டை
நடத்தியே நவாபுயிருக்கும் வேளையிலே
கான்சாயபு அடைகோட்டை திறந்து அப்போ
கனமான சேனைகளை வெளியிலேவிட்டான்

தளவாய் தந்திரம்

*சீனிச்சிரா வெளியில்வந்து ஆற்றில்
ஸ்நானஞ்செய்து தலையாற்றிப் போகும் வேளையிலே
தாண்டவராயபிள்ளை பார்த்து அப்போ
தந்திரமாய் ஆள்விட்டழைத்து வரச்சொல்லி
தீவாசுக் கம்பளியிலிருந்து அப்போ
திடமான பேச்சுக்களைச் சிலநேரப்பேசி
மூன்கைக்குத் தங்கக்காப்பு கொலுசு நல்ல
மோகன மாலையுடன் கெண்டியுந்தரித்து
கருப்பூரத்து கொண்டைப்பாகை அப்போ
கனமான சீனிச்சிருய் தலையில்தரித்து
துத்திப்பூ அங்கியொன்றுதரித்து தளவன்
சொல்லுகிருன் சீனிச்சிருய் முகத்தைநோக்கி
கான்சாயபை நீ பிடித்துக்கொடுத்தால் உனக்கு
கனமான திருநெல்வேலி பேட்டையைத்தாரேன்
திசைமதுரை தெவுலத்து[88] தாரேன் உனக்கு
திருப்புவனம் தாலூக கைபோட்டுத்தாரேன்
எழுநூறு குதிரைகள் தாரேன் நான்
ஏழானை ஏழொட்டை° தருகிறேனுனக்கு
பத்தும் பத்தாத்துக்கு[89] சனி எங்கள்
பள்ளிமடைக் கோட்டைதனைத் தருகிறேனுனக்கு
இப்படித் தாண்டவனுஞ் சொல்ல அப்போ
இன்பமாக சீவிசிரு ஏது சொல்வானும்

88. தெவுலத் - தெவுலத் என்ற பதவி.
89. பத்தும் பத்தாத்துக்கு—இவையெல்லாம் போதாது என்ருல்.
* சீனிச்சிரா—சீனிவாசராவ் என்பதன் மருஉ.
° ஏழொட்டை—ஏழு ஒட்டகை.

அந்த மட்டும்நீ கொடுத்தால் போதும் எட்டு
நாளைக்குள் கான்சாயபை பிடித்துக் கொடுத்திடுவேன்
அப்படியே தருகிறேனென்று தளவாய்
ஐயனுக்கு கைபோட்டு [90] கொடுத்த மாத்திரத்தில்

சீனிவாசராவ் சதித்திட்டம்

நல்லதென்று சீனிச்சிருவெழுந்து வெளியில்
நடந்தப்போ மதுராபுரி கோட்டை வந்துசேர்ந்து
அரண்மனையில் சாதமுண்டு சீனி அப்போ
ஆசாரமேடையில் வந்தமர்ந்து கொண்டு
சேகு [91] தனை வரவழைக்கச் சொல்லி சீனி
திறன்மிருசு வெள்ளைக்காரனையு [92] மழைத்து
மூன்றுபேரு மாலோசனை செய்து அப்போ
முடிமன்னன் சீனிச்சிருவேது சொல்லுற்றான்
சிங்கமே சேகுந்தா [93] கேளு
சேதிநான் சீனிச்சிராய் சொல்லுகிறேன் தம்பி
இனிமேலே மம்முதலிசாயபு வடக்கு
எப்போதும் போகிறதில்லை மகனேகேளு
பணத்துக்கொரு வெற்றியுமில்லை இப்போ
குடிக்கவுங் கொட்டாங்கச்சி தண்ணீருமில்லை
எவனுண்டிருந்தாக்கா லென்ன [94] நமக்கு
அவனுண்டருந்தாக்கா லென்னடா துரையே
கானனைப் பிடித்துக் கொடுத்தால்
கனமான திருநெல்வேலிச் சீமை தாரேனன்றார்
திசை மதுரை தவுலத்துக்கொடுப்பார் நமக்குத்
திருப்புவன கோட்டையுந்தாரேனென்று சொன்னார்
எழுநூறு குதிரை தாரேனென்றார் நமக்கு
ஏழொட்டை ஏழானை தருகிறேமென்றார்
பத்தும் பத்தாத்துக்கும் துரையே
பள்ளிமடை திருப்புவனந்தாரேனென்று சொன்னார்
பிடிக்க வேணுங்கான்சாயபு துரையை என்று
புண்ணியன் [95] சீனிச்சிராவ் சொன்னமாத்திரத்தில்

90. கைபோட்டு—கைமேலடித்துச் சத்தியம்.
91. சேகு—சேகுகான். இவன் கான்சாகிபுவின் மெய்க்காவல் படைத் தலைவன்.
92. வெள்ளைக்காரன்—மார்கசந்து முன்னர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
93 சேகுகானை விளித்தல்.
94 ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்ற பழமொழியின் கருத்து.

95. புண்ணியன்—(எள்ளல் பொருள்)

நல்லதென்று மூன்றுபேரும் பேசி அப்போ
நாயகி மீனாட்சியம்மாள் சந்நிதிக்கு வந்து
ஒருவருக்கு சொல்லுகிறதில்லை என்று
உத்தமர்கள் [96] மூவரும் உறுதியாய்ப் பேசி
கத்திபோட்டு சத்தியஞ் செய்து இவர்கள்
கனமாக மூவரும் அரண்மனை போய்ச் சேர்ந்தார்
ராசபரமேஸ்வரி மீனாள் பார்பாரப் பெண்போல மீனாள்
லோகநாயகியும் கானனுக்கு மோசம் வந்து தென்று
பாதகன் தலைமாட்டில் வந்து நின்று கொண்டு
உன்னுடைய உப்பு தின்றுபோட்டு கானு
உந்தனுக்கு ரண்டகம் நினைந்திட்டாரப்பா
இனிமேலே மதுரையிலிருந்தால் நீயும்
இறந்து போவாயடா கான்சாயபுதுரையே
மலையாளம் போய்ச் சேரு கானு என்று
மதுராபுரி மீனாளுஞ் சொல்லினாளப்போ
பார்ப்பாரப்பேய் வந்துலவுண்டி நம்மைக்
கட்டியே மிரட்டுதென்று கான்சாயபுதுரையும்
திடீரென்று முழித்தப்போ பார்த்து கானு
சேதிகளை எவரோடுஞ் சொல்லாமலிருந்தான்

கான் சூழ்ச்சியில் அகப்படுதல்

கானனும் சொந்த பட்டாளத்தை அப்போ
கணமாகக் கோட்டையில் பாருவும் வைத்து
சந்தோஷத்து டனிருக்கும் போது சீனி
தைரியமாகவே யோசனைகள் செய்து
நூல்கயிறேழுகயி றெடுந்து அப்போ
நொடிக்குள்ளே மூன்றுபேரு மொன்ருகக்கூடி
ஆலோசனை யுறுதியாய்ப் பேசி இவர்கள்
அரண்மனை வாசலுக்குவரும் வேளைதனிலே
அடப்பக்கார படேசாயபு கண்டு அப்போ
அதட்டியே நிறுத்திவிட்டுத் தலைவாசல் தனிலே
ஏதடா சீனிச்சிருவே இப்போ
இவ்விடத்தில் மூன்றுபேரும் வந்தவகையேது
உத்தரமில்லாமல் நீங்கள் இப்போ
உள்ளே வரவேண்டியதென்ன வென்றுகேட்டு
கான்சாயபு துரையிடத்தில் வந்து இப்போ
கர்த்தனே சீனிச்சிராவி ரண்டுபேரைக் கூட்டி

96. எள்ளல் பொருள்

எமதூதரைப்போல சாய்பு இவர்கள்
இப்போதே மூன்றுபேரும் வந்திருக்கிருரென்ருர்
பார்ப்பானும் வந்தானேயானுல் மூக்குப்
பொடிக்கவன் புகையிலே கேட்டுவருவாண்டா*
முரசு வெள்ளேக்காரன் வந்தால் என்னே
தீனிக்கு மாடுகேட்க வருவாண்டா இப்போது
சேகுந்தன் வந்தானேயானுல் நமக்குச்
சேதி சொல்லவருவாண்டா அவனுமே தம்பி
வந்தாக்கால் வரட்டுமென்று சொல்லி கானு
வகையாக படேசாயபுக்குச் சொன்னுனப் போது

சீனிவாசராவ் கான்சாகிபைக் கட்டிப் போடுதல்

இதுகேட்டு சீனிச்சிருவும் நல்ல
இதமாக மூன்றுபேருடன் வந்துசேர்ந்து
துரைமகனேச் சலாம் பண்ணிக்கொண்டு மூன்று
துரைமாரும் தயாராகப் பக்கத்திலிருந்தார்
சேகுந்தனந்த வேளேயிலே பாளேயத்தின்
செய்திகளேக் கானனுக்குச் சொன்னுனப்போ
பேச்சுமேல் மவுனமாயிருந்து அப்போ
பூபாலன் மதுரைதுரை கேட்கும் வேளேயிலே
பிறகாலேயிருந்தப் போசீனி எட்டிப்
பிடித்திட்டான் சாயபுவை ரண்டுகரங் கோர்த்து
மூன்றுபேருஞ் சேர்த்துப் பிடிக்க கானு
மோசம்வந்து நேர்ந்ததென்று தெரிந்தமாத்திரத்தில்
மூன்றுபேருங் கான்சாய்பைபிடித்து அப்போ
முடிமன்னனே மேஜைப்பலகையி லிறுக்கி
நூறுக்கயிற்றை யவிழ்த்தெடுத்து அப்போ
நொடிக்குள்ளே கானனேச் சேர்த்திறுக்கி விட்டான்
என்னேயேண்டா கட்டுகிருய் சீனி உனக்கு
என்னென்ன மோசங்கள் செய்தேனுன் சீனி
ஒன்றுக்கும் பிடிக்கவில்லே துரையே உம்மைச்
சம்பளப்பணத்துக்குப் பிடித்துவைத்தேன்
சம்பளத்தைக் கொடுத்தபிறகு உம்மைத்
தைரியமாய் அவிழ்த்துவிடுகிறேனென்ருன்
அப்போது கான்சாயபு துரையும் பாதர்
ஆண்பிள்ளேயொரு வசனமேது சொல்வானும்
மதுரைமண்ணுள்ள வரைக்கும் உனக்கு
மாதச்சம்பளந் தாரேன் சீனிச்சிராவென்று

* சாகப்போவது தெரியாமல் கான்சாகிபு வேடிக்கையாகப் பேசுகிருன்.

சொல்லக் சொல்ல இறுக்கிக் கட்டினதைப் பார்த்து
துரைகானு கோபமாய் ஏது சொல்லலுற்ருன்
கட்டாதே துரோகிப்பயலே சீசீ எனது
கனத்துடம்பு நோவுதே அல்லாவே நபியே
என்னுடைய உப்பைத் தின்றுபோட்டு நீங்கள்
எனக்கே ரண்டகம் நினைப்பீரேயானுல்
எங்கெங்கே போனுலும் பாவி உங்களுக்குக்
கிரணங் கொடுப்பாரோ சிக்கந்தர் சாயபு
சொல்லச் சொல்ல இறுக்கியிறுக்கிக் கட்டித்
துரைகானையறை வீட்டிற் போட்டேயடைத்து
பாராவும் பத்திரமாய் வைத்து சீனி
பார்ப்பானுந் தயாராயிருக்கும் வேளையிலே
மாசாவுமிதுசேதி கேட்டு கானு
மகாராசனரண்மனைக்கு வந்து நின்று பார்த்து
என்னடா சீனிச்சிராவே இந்த
கூக்குரலேதென்று கேட்ட மாத்திரத்தில்
ஒன்றுக்கும் பிடிக்கவில்லை தாயே அவரைச்
சம்பளப் பணத்துக்குப் பிடித்துவைத்தேன்
சம்பளப்பணங் கையில் கொடுத்தால் நமது
சாயபுதுரை கானனை விடுகிறேனென்ருன்

கான்சாகிபை நவாபிடம் ஒப்படைத்தல்

நல்லதென்று மாசா நடந்து அந்த
நாழிகையிலரண்மனை போய்ச் சேர்ந்தமாத்திரத்தில்
புறப்பட்டு சீனிசிராவ் வெளியில் வந்து
கானனிட பட்டாளம் நிற்பதைக்கண்டு
மாற்றியே மறுபாராவைத்து உடனே
மன்னவனைப் பிடித்தேனென்று காயிதமெழுதி
அனுப்பினுன் பிள்ளைமார்க்கப்போ அதை
அன்பான பிள்ளை மாரிவரும் வாங்கி
பிரித்தவர்கள் வாசித்துப் பார்த்து பாதர்
புண்ணிய நவாபுக்கு சங்கதியைச் சொல்லி
கானனைப் பிடித்தது பொய்யென்று சொல்லி
காலாள்களை விட்டுபார்த்து வரச்சொல்லி
கோட்டைக்குள் நுழைந்தது பார்க்கும்போது அங்கே
குறிப்பாக ஏனென்று கேழ்ப்பாருமில்லை
கான்சாயபை பிடித்தது மெய்யென்று வந்து
காலாள்களும் நவாபுமுன் வந்து சொன்னுர்
தாமோதரம் பிள்ளைதனை யழைத்து தனது
பட்டாளத்தைக் கட்டியனுப்பின மாத்திரத்தில்

மதுராபுரி கோட்டையைப் பிடித்து அப்போ
வளர் சொக்கமீனாட்சித் தரிசனம் பண்ணி
கோட்டையைப் பிடித்த மூன்றுநாள் பாதர்
குபீரென்று மம்முதலி துரை வந்து சேர்ந்தான்
அரண்மனைக்கு முத்திரை போட்டு அந்த
மூலைக்கரை கொத்தளத்தில் பாராவும் வைத்து
கடைத் தெருவில் பாராவும் போட்டு நல்ல
கனமான ராசாவின் அரண்மனைக்குப் பாரா
கான்சாயபு அரண்மனைக்குப் பாரா நல்ல
கனமான மம்முதலி கோட்டைக்குள்ளிருந்தான்
கோட்டை பிடித்த மூன்றுநாள் வெளியில்
கொண்டுவரச் சொல்லி கான்சாயபு துரையை
ரயில்வண்டி[97] கொண்டுவரச் சொல்லி கானு
உத்தமன் துரை மகனைக் கொண்டுவரச் சொல்லி
வண்டிக்குங் கானனுட துடைக்கும் கயிறு
வயணமாய்ச் சேர்த்திப்போ சீக்கிரமிறுத்தி
கண்விழிகள் கொண்டுந் தெரியாமல் கட்டிக்
காலுகை ரெண்டையும் பின்னாலேயிறுக்கி
எழுநூறுபேர் சுற்றிப்பாரா வைத்து
எச்சரிக்கை கான்சாயபு பறந்தோடிப்போவான்
கபர்தார்[98] எச்சரிக்கையென்று சனங்கள்

கான்சாகிபை நவாபு முன்னர் கொணர்தல்

கப்பியே கான்சாய்பை வெளியில் கொண்டுவந்து
பாயுதேவடி முன்னே வந்து கானு
ராசாதிபதி கட்டைச் சீக்கிரமவிழ்த்து
கண்ணிரண்டு தெரிய அவிழ்த்து அப்போ
கைகட்டுங்கால் கட்டுஞ் சீக்கிரமவிழ்த்து
நவாபை சலாம் பண்ணுகானு என்று
ராசாதிபதிகளும் வாய்திறந்து சொன்னார்
அப்போது கான்சாயபு துரையும் பாதர்
ஆண்பிள்ளை நவாபு முகமேறிட்டுப்பார்த்து
கச்சக்கருவாடுவிற்கும் லப்பை துலுக்கப்
பயலே நீ போடாவண்ணாத்தி மகனே[99]
உன்னிடத்தில கப்பட்டேனும் என்னை
மூன்று நாளாய் வைத்திருக்கிறாயே பாவி

97. அக்காலத்தில் இல்லையென்று முன்னர் குறிப்பிட்டோம்.
98. கபர்தார் —(உருது)—சாக்கிரதை, எச்சரிக்கை.
99. நவாபை வணங்காது கான்சாகிபு திட்டுகிறான்.

நானுனக்கு அகப்பட்டாப் போலே இப்போ
நபாபுதுரை மகனே நீ அகப்பட்டையேயானல்
தேங்காயும் உன்சதையுமறுத்துத் தின்னச்
சொல்லியடிப் பேண்டாகருவாட்டுலப்பே
அப்போது மம்முதலி சிரித்து நல்ல
ஆண்பிள்ளை கானனென்று மனதில் நினைத்து
ஏழரை வருஷங்களாச்சே கானு
இதமாகவே நல்ல மதுரை வந்து சேர்ந்து
தேடிய திரவியங்களெல்லாம் இப்போ
எங்கேயென்று கேட்டானே மம்முதலிதுரையும்
என்னுடைய ருணந்தின்ன சாயபு இப்போ
என்னுடைய பிள்ளைகளில்லையோ நவாபே
என்னிடத்தில் சொல்லுகிறதென்ன என்று
ஒழுங்காக கேட்டானே கான்சாயபு துரையும்
மூன்று நாளன்னம் புசியாமல் இப்படி
முனைவீரன் கான்சாயபு பேசுகிறனென்று
சாதமுங் கொண்டுவரச் சொல்லி நல்ல
தாம்பாளங் கொண்டுவந்துவைத்து
சொம்பில் சலங் கொண்டு வந்துவைத்து அப்போ
சீரான பதார்த்தவகை கொண்டுவரச் சொல்லி
வெள்ளைத் தாம்பாளத்தில் போட்டு அப்போ
விதமான கான்சாய்பு முன்னெடுத்து வைத்தார்
அப்போது கான்சாயபு நீலன் பாதர்
அன்னம் வைத்த தட்டைக் கண்ணுலே பார்த்து
இடது காலாலே யுதைத்திட்டான் சாதம்
இதமான மல்லிகைப் பூ போலே சிதற
தீவாசுமேல் சாதம் சிதற அப்போ
சிங்கம் நவாபு துரையேறிட்டுப் பார்த்து
ஆலோசித்து துரைமாரைப் பார்த்து இவனுக்கு
ஆக்கினையென்னவென்று கேட்டார் நவாபு
அப்போது துரைமார்களெல்லாம் கூடி
ஆலோசனை செய்து சாஸ்திரத்தைப் பார்த்து
சாஸ்திர முறையின்படியே அப்போ
சாயபுதுரை நவாபுக்கேது சொல்லுற்றுர்
ஆக்கினையொன்றுமில்லை துரையே இவனைச்
சும்மாவிடச் சொல்லியிருக்குதென்று சொன்னர்
அப்போது மம்முதலி சாய்பு மனதில்
ஆயாசமாகியே கோபித்துக் கொண்டு
தூக்காமலிவனை நீங்கள் விட்டால் என்னைத்
தூக்குங்களென்று சொல்லி எழுந்திருந்து போனுர்

தூக்கில் போடுதல்

அப்போது கான்சாய்பை பிடித்து நல்ல
அழகான ரயில்வண்டி மேலேற்றிவைத்து
ஒற்றை தப்பட்டத்தையடித்து வண்டியை
ஒளிவாகப் பாளையத்தை சுற்றியேயிழுத்து
பட்டமாமருகில் கொண்டு வந்து அப்போ
படைவீரர்கள் கானனுக்குக்கழுத்தில் சுருக்கிட்டு
ஏற்றினர் மாமரந்தனிலே கானு
இளப்புடனுயாச மொன்று மில்லாமல்
கிறுகிறென்று மூன்று தரஞ் சுற்றி அப்போ
கீழே விழுந்தானே கான்சாயபு துரையும்
மறுதர முஞ்சுருக்கிட்டு தூக்க கானு
மன்னவனும் ரண்டுவிசை கீழே விழுந்தான்
மூன்றுதரங் கட்டி தூக்க அப்போ
முனை வீரன் கான்சாயபு விழுந்திட்டான் கீழே
அப்போது கான்சாயபு துரையும் பாதர்
ஆண்பிள்ளை சிப்பாயி முகம் யேறிட்டுப் பார்த்து
என்னை யேண்டா வதைக்கிறீர் நீங்கள் என்று
இயல்பாக கானனுஞ் சிப்பாய்களைப் பார்த்து
மலையாளத்து பொம்பக்காள் கொடுத்த நல்ல
வச்சிரமணி நரிக்கொம்பு சிமிழினிலடைத்து
உச்சிப்பிடரி தனிலிருக்குதடா[100] அதை
உபாயமா யெடுத்தெறிந்து தூக்குங்களென்றான்
அப்போது சூரியினால் குத்தி சிமிழை
அறுத்தெடுத்து கான்சாயபை தூக்கிலே போட்டார்
ஏழுபேரை சுற்றிலும் வைத்து பாதர்
ஈஸ்வர நவாபுதுரையிருக்கும் வேளையிலே
பிடித்துக் கொடுத்தானே பார்ப்பான் அவனைப்
பின்கட்டாய் கட்டியே கொண்டுவரச் சொல்லி
சினிச்சிருவேயொரு சேதி இப்போ
சிங்கம் நவாபுதுரை சொல்லுகிறேன் கேளு
அன்னமிட்டோனைப் பிடித்துக் கொடுக்க உனக்கு
ஐந்து பஞ்ச பூதமுந் துணிந்ததோ பாவி

---

100. வீரர்கள், ராட்சசர்களின் உயிருக்கு ஆதாரமான தொன்று, ஒரு மறைவிடத்தில் இருப்பதாகக் கூறுவது நாட்டுக் கதை மரபு. அவர்கள் உடலுக்கு வெளியிலும் அது இருக்கலாம். இங்கு அவன் உச்சித் தலையில் இருந்ததாகச் சொல்லப் பட்டுள்ளது.

அவனுடைய வுப்பை நீ தின்று பாவி
அனியாயமாய் பிடித்துக் கொடுக்கலாமோ வென்றார்

சீனிவாச ராவுக்குத் தண்டனை

என்மேலே தோஷமில்லை சாய்பு என்னை
ஏமாத்தித் தாண்டவராயன் பிடித்து வரச் சொன்னான்
இப்படி சீனிச்சிராவ் சொல்ல அப்போ
இயலான மம்முதலி யவனுடைய கண்ணில்
பச்சைக் கற்பூரம் வைத்துக்கட்டு என்று
பாட்சா நவாபுதுரை சிப்பாய்களுக்குச் சொன்னார்
அவன் கண்ணில் பச்சை கற்பூரம் கட்டி
ஆணிபிள்ளை நவாபுதுரையிருக்கும் வேளையிலே

சிப்பாய்களின் கனவில்...

தூக்கிலே போட்ட மூன்றுநாள் கானு
துரைமகன் சிப்பாய்கள் சொர்ப்பனந்தனிலே
என்னுடைய தங்கப் பிரம்பும் எனக்கு
மலையாளி கொடுத்த பொம்மக்காமாணிக்கச் சொம்பும்
மாசாவிடத்திலிருக்கிறதை வாங்கி வந்து
மாணிக்கச் செம்பு தண்ணீரைத் தெளித்து
பிரம்பாலே தட்டுவீரேயானால் தூக்கி
விட்டுக் கீழே குதிக்கிறேன் தம்பி
எல்லோரு மொன்றாகச் சேர்ந்து தம்பி
இட்சணமே மலையாளம் போய்ச் சேர்ந்திருந்து
மறு எட்டு நாளைக்குள்ளாக இந்த
மதுராபுரி சமஸ்தானம் வாங்கி நான் தாரேன்
இப்படி சொற்பனத்தில் கானு நல்ல
இயல்பாகச் சேதிகளை சொன்னமாத்திரத்தில்
பாராக்காரர் கண்டு பயந்து அப்போ
பாட்சா நவாபிடத்தில் வந்து சொன்னார்கள்
இன்னமிருக்கிறானே கானு அவனை
இப்போதே யிறுக்கிவிடவேணுமென்று சொன்னார்

கான்சாகிபு உடலைத் துண்டுத்துண்டாக்கிப் புதைத்தல்

சுண்டுவிரல் தனையறுத்துப் பார்த்தார் ரத்தஞ்
சுறுக்காகப் புறப்படவே நவாபு துரை பார்த்து
கழுத்திலே பரங்கச் சூரிவைத்து மதுரைக்
கான்சாயபு சிரசினை சீக்கிரமறுத்து
கால்கையைத் துண்டு துண்டாயறுத்து மதுரைக்
கான்சாயபை நாலுதுண்டாக வெட்டி

நத்தத்திலொரு கையை வைத்து அப்போ
நலங்கண்ட திண்டிக்கல்லி லொருகாலைவைத்து
இப்படி நாலுமுகம் வைத்து அப்போ
ஈஸ்வர நவாபு துரை கூடாரம் வைத்து
சந்தோஷமாகி நவாபு அப்போ
சலுதியாயிரு பிள்ளை மார்களையழைத்து
அரேபிள்ளை தாண்டவராயா நீ
அன்று சொன்னகிரீடத்தை தருவையோ வென்றார்
அப்போது தாண்டவராய பிள்ளைநீ
அகமகிழ்ந்து நவாபை ஏறிட்டுப் பார்த்து
சோழவர மென்னுமூரை உனக்குத்
தோரணச் சீட்டெழுதி தந்திட்டேனென்றான்
முறிசீட்டை கையிலே வாங்கி அப்போ
முனைவீரன் மம்முதலி சந்தோஷப்பட்டு
திருச்சினாப் பள்ளிக்கு நான் போரேன் நீங்கள்
சீக்கிரமாயரண்மனை போய்ச் சேருமென்று

நவாபு திருச்சிக்குப் போதல்

பிள்ளைமாற்கு புத்திமதி சொல்லி அப்போ
புகழ்பெற்ற சேனைகளை யொன்றாய்க் கூட்டி
மதுரைக்குத் தைனுத் துவைத்து பாதர்
மம்முதலி பாளையத்தை வடக்குமுகந் திருப்பி
திருச்சினாப்பள்ளிக்கு நவாபு போய்ச்
சேர்ந்தபின் முல்லை மணித்தாண்டவராயன்
மாஷாவின் அரண்மனைக்குச் சென்று அந்த
மங்கையைத் தாண்டவனும் ஏறிட்டுப்பார்த்து
தங்கச்சி மாஷாவே கேளு உனது
தலைவிதியிப்படி முடிந்துதே தாயே
ஒன்றுக்கும் அஞ்சாதே தங்காய் உனக்
கொன்றுங் குறைவில்லை நானிருக்கும் வரைக்கும்
திருப்புவனம் வாருமம்மா வென்று அப்போ
தேருதலை*யாகவே தாண்டவனும் சொல்ல
அப்போ மாஷாவும் மகிழ்ந்து அண்ணே
அன்பாக ஒரு வசனஞ் சொல்லுகிறேன் கேளு
மலையாளம் போரேனைண்ணே நீ
மனதிலே கவலைவைக்க வேண்டாமென்று சொல்லி
மைந்தனைக் கையோடழைத்து அப்போ
மதுரைவிட்டு மலையாளம் நடந்துவிட்டாள் மாஷா

* தேருதலை— தேறுதல் மொழி.

மாஷாவும் நடந்தபிற்பாடு மிக்க
மகிழ்ச்சியாய் பிள்ளைமார் பாளையத்தைகூட்டி
கிழக்கு முகமாகவே நடந்து அப்போ
சிங்காசனதிபதி சிவகங்கை சேர்ந்து
முத்து வடுகையரைக் கண்டு நல்ல
முனைவீர் சந்தோஷச் செய்திகளைச் சொல்லி
கான்சாயபு பயம் போச்சுதென்று ஐயோ
களிப்புடனே பிள்ளைமாரரண்மனை போய்ச் சேர்ந்தார்.

*

வாழ்த்து*

கான்சாயபு கதை தன்னைப் படிக்க செய்த
கர்மவினைகள் காதவழி யோட
மாதமும்மாரி மழை பொழிய இந்த
மண்டலத்தின் மன்னவர்கள் செங்கோல் தழைக்க
நேசமுடன் கான்சாயபு கதையை இந்த
நீனலந் தன்னிலே நித்தம் படிப்போர்
தேசம் திலதிக நாளிருந்து
சீமானெனப் பெருகிச் செல்வந் தழைக்க
பாண்டியன் மகள் மீனாளைப் போல அதிக
பாக்கிய மென்மேலும் பெருகியுண்டாக
திருப்பதி மலைரங்கர் வாழி நல்ல
சீதா பிராட்டியுடன் உமையவளும் வாழி
தென்மதுரைச் சொக்கையர் வாழி எங்கள்
தேன்மீனாள் கயற்கண்ணியும் வாழி
மயிலேறு வேல் முருகா வாழி குற
வள்ளிதெய் வானையுடன் மலர்மகளும் வாழி



---

* வாழ்த்துப்பாடலில் எல்லாத் தெய்வங்களையும் கூறல் நாட்டுப் பாடல் மரபாகும். நாட்டுப் பாடலை கேட்போரில் பல தெய்வங்களையும் வணங்குபவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய ஆதரவு பெற அவ ரவர்கள் தெய்வத்தைப் பாடகர் வாழ்த்துவார்.

